# தமிழகம் மறந்த ஈழத்தின் அவலம்



# பரவம்

[redacted] 1996

எனது சந்தேகமே "குருதிப்புனல்"

MAY 1996

# AYNGARAN
## ENTERPRISE



*(Whole Sale and Retail)*
80 Burlington Road,
(opp DSS Office)
New Malden,
Surrey KT3 4NY
TEL: 0181 942 1561
FAX: 0181 296 8778

உங்கள் வீட்டுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் ஒரே இடத்தில் கொள்வனவு செய்வதற்கு இன்றே நாடுங்கள். நம்பிக்கை நாணயம் உத்தரவாதம் இவற்றிற்கு நியூமோல்டனில் ஒரே ஒரு தமிழ்க் கடை. எம்மிடம் இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், கடல் உணவு வகைகள், பசுமையான மரக்கறிவகைகள், Halal Meat மற்றும் தமிழ்ப்பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஓடியோ, வீடியோ (original copies) C.Dக்கள் யாவும் தரமாகவும் மிகக்குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.
(எம்மிடம் 2000க்கு மேற்பட்ட தமிழ் ஒரிஜினல் வீடியோ பிரதிகள் உண்டு.)

**உங்கள் தேவையே எங்கள் சேவை,**
**அதுவே எங்கள் முன்னேற்றத்தின் ரகசியம்.**

**SUN GRAPHIC U.K**



சகல விதமான ஆங்கில, தமிழ் அச்சு தேவைகளுக்கும் இன்றே எம்மை நாடுங்கள். குறைந்த விலையில் செய்து தரப்படும்.

**TEL: 0181 942 1561 FAX: 0181 296 8778**

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323





புதிய ஏற்பாட்டிற்கும் - பழைய ஏற்பாட்டிற்கும் புதிய புதிய தத்துவார்த்த வியாக்கினங்களைக் கொடுத்து வரும் இம் மதமாற்றக் காரர்களால் நமது சுய அடையாளம் அழிக்கப்படுவதோடு - நமது பாரம்பரிய பண்பாட்டு - கலாச்சார, விழுமியங்களுடன் சிதறுண்டு போகும் நிலை தோன்றியுள்ளது.

பக்கம்....7



கடந்த குளிர்காலத்தின் ஒரு மாலைப் பொழுதில் எட்டு மாதக் கர்ப்பிணிப் பெண்ணை, அவள் கணவன் வீட்டை விட்டு துரத்தி விட்டான்.

பக்கம்....13



வலிகாமத்தையும், யாழ்ப்பாணத்தையும் இழந்துவிட்டோம். வடமராட்சி, தென்மராட்சியையும் இழந்தால் - அது போராட்டத்திற்குப் பின்னடைவைத் தராதா?

விடுதலைப் புலிகளின் மத்தியகுழு உறுப்பினருடன் ஒரு பேட்டி.

பக்கம்....11



புலிகளை வைத்து படம் எடுக்கவேண்டும் என்று தோன்றிய அந்த விடயத்தில் நடுநிலமை வகிக்க வேண்டியது நம் கடமை. ஆனால், அதற்கான தைரியம் எனக்கில்லை. - கமலஹாசன்

பக்கம்....16

★ ஆப்பிழுத்த குரங்காய் தவிக்கும் சந்திரிகா .......... .04

★ அகதிகளுக்கு பிரான்ஸ் கதவடைப்பு; சட்டத்தில் திருத்தம் வருகிறது .......... .15

★ "புகலிடச் சினிமாஆரோக்கியமாக இல்லை" ரகுநாதன் .......... .21

★ "ஒரு பெண் எல்லாவிதத்திலும் சுயமரியாதையுடன் வாழவேண்டும்" 'அம்பையு'டன் ஒரு பேட்டி .......... .22

★ 'அம்மாவின் முகங்கள்' - சிறுகதை அ. பாலமனோகரன் .......... .25

★ செர்னோபில் அணு உலை வெடிப்பு; ஆயிற்று ஆண்டுகள் பத்து .......... .31

★ இறைச்சிப் பொருள் - சங்கரமூர்த்தி .......... .33

★ வாழ்க 'இன்ரநெற்' - கண்ணன் .......... .36

★ யாழ். நூலகம் - ஒன்றரை தசாப்தமாகியும் அணையா நெருப்பு .......... .39

★ கலைஞரின் வெற்றி சந்திரிகாவுக்கு கலக்கம்? . .41


★ இலண்டன்: ரவிச்சந்திரன் வழக்கு .......... 43

★ எயிட்ஸ்: 2000 ஆண்டில் ஆசியாவை அழிக்கக் காத்திருக்கும் உயிர்க்கொல்லி .......... .45

நவீன தொழில்நுட்ப வசதிகளுடன்....

உங்கள் எண்ணத்தில் இருப்பதை அழகிய வடிவத்தில்
தரமாகவும், விரைவாகவும், மலிவாகவும் பெற்றிட

# VASAN LITHO PRINTER



## Tel: 0181- 640 43 66

புதிய முகவரி:

45 C Crusoe Road,
Mitcham Surrey CR4 3LG,
United Kingdom.

PAALAM

Magazine Tamoul mensuel

Impression:

Vasan Litho Printer (London)

பாலம்

சமூக - அரசியல் - கலை
இலக்கிய சஞ்சிகை

மாதம் ஒருமுறை

முகவரி:

PAALAM

B.P 234

75921 Paris

Cedex 19

Tel: 42 05 93 30

Fax: 42 05 99 02

பாலம் யூன் 1996

தனிப்பிரதி, ஒரு ஆண்டுக்கான
சந்தா பற்றிய விபரங்கள்

| | | |
|---|---|---|
| நெதர்லாந்து | ~ 3 கில்டன் | ~ 48 கில்டன் |
| இத்தாலி | ~ 3 மிலா | ~ 48மிலா |
| பிரித்தானியா | ~ 1 பவுண் | ~ 18 பவுண் |
| பிரான்ஸ் | ~ 10 பிராங் | ~ 180 பிராங் |
| சுவிஸ் | ~ 3 பிராங் | ~ 48 பிராங் |
| ஜேர்மனி | ~ 3 மார்க் | ~ 48 மார்க் |
| நோர்வே | ~ 12 குறோனர் | ~ 180குறோனர் |
| டென்மார்க் | ~ 12 குறோனர் | ~ 180குறோனர் |
| கனடா | ~ 2.50 டொலர் | ~ 45 டொலர் |
| அவுஸ்ரேலியா | ~ 2.50 டொலர் | ~ 45 டொலர் |
| ஏனைய நாடுகள் | - 40 அமரிக்க டொலர்கள் | |


# இது ஒரு தொடர்புப் பாலம்

தமிழர்களாகிய நாம் தொழில் தேடி ஐரோப்பாவிற்கு வந்து அரை நூற்றாண்டு கடந்து விட்டது. அரசியல் தஞ்சம் கோரி புகலிடம் தேடிவந்து ஒரு தசாப்தம் கழிந்து விட்டது.

இந்த நீண்ட நெடுங்காலத்தில் நாம் சாதித்தது என்ன? விஞ்ஞானம் - தொழில் நுட்பம், மருத்துவம், பத்திரிகைத்துறை, நவீன இலக்கியங்கள் என்று அனைத்துத் துறைகளிலும் - பாரிய வளர்ச்சி பெற்ற ஐரோப்பிய அனுபவங்களிலிருந்து - எதை நாம் கற்றுக்கொண்டிருக்கிறோம்? எதை தமிழ் மொழிக்குக் கொண்டு போயிருக்கிறோம்?

கடந்த காலங்களில் இங்கே சிற்றேடுகளும் - சிற்றிலக்கிய இதழ்களும் நிறையவே வந்திருக்கின்றன. ஆனால் அவற்றில் எத்தனை வீதமானவை; ஒரு புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பை, ஒரு அத்தியாவசியமான மருத்துவப் பிரச்சனையை - ஒரு நெருக்கடி மிகுந்த அரசியல் சிக்கலை - ஒரு உள்நாட்டு யுத்தத்தின் கோரத்தனத்தை - ஒரு உலகப் புகழ் பெற்ற இலக்கியத்தை பற்றியெல்லாம் - ஐரோப்பியத் தொலைக்காட்சிகளும் பத்திரிகைகளும் - சஞ்சிகைகளும் - அக்கு வேறு ஆணிவேறாக அலசுவதை - மொழி புரியாத காரணத்தால் அருண்டு மருண்டு - பார்க்கும் - நமது தமிழ் வாசகனுக்கு எடுத்துச் சொல்வதற்கு முயற்சியெடுத்திருக்கின்றன?

இந்தக் கேள்விகளையெல்லாம் எங்களை நாங்களே கேட்டுக் கொண்டபோது 'பாலத்தை' உருவாக்க வேண்டியது ஒரு வரலாற்றுத் தேவை என்ற எண்ணக் கரு எமக்குள் ஏற்பட்டது.

புகலிடத்திற்கும் தாயகத்திற்குமான தொடர்புப் பாலமாக இந்தப் 'பாலம்' சஞ்சிகையின் முதல் இதழ் உங்கள் கரங்களில் இருக்கும் இந்த நேரத்தில் - எமது வாசகர்களுக்கும், - எழுத்தாளர்களுக்கும் சில விடையங்களை சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்.

பாலம் ஆத்ம திருப்திக்காக இலக்கியம் செய்யப்புறப்பட்ட சஞ்சிகை கிடையாது. அதில் எமக்கு உடன்பாடும் கிடையாது.

எந்தக் கலை இலக்கியமும் எந்த எழுத்தும் - சமூகம் சார்ந்து - அதன் வளர்ச்சிக்காவும் - மாற்றத்திற்காவும் படைக்கப்பட வேண்டும் - அதன் தேவையுணர்ந்து பிரசுரிக்கப்படவேண்டும்.

எந்தவொரு எழுத்தாளனும் - சமூகத்தை புறக்கணித்து விட்டு - சமூகத்தின் அடிப்படைப்பிரச்சனைகளைப் புறக்கணித்து விட்டு - சமூகத்தின் வரலாற்றுத் தேவையைப் புறக்கணித்து விட்டு - தன்னுடைய 'ஆத்மா' விலிருந்து - இலக்கியம் படைக்கப் போவதாகச் சொன்னால் - அது ரோம் நகரம் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தபோது - தன்னுடைய ஆத்ம திருப்திக்காக பிடில் வாசித்துக் கொண்டிருந்த 'நீரோ' மன்னனின் செயலுக்கு ஒப்பானதாகும்.

பாலத்தைப் பொறுத்தவரை - எங்களது அளவு கோல் - சமூகம் சார்ந்திருப்பது. சமூகப் பிரச்சனைகள் சார்ந்திருப்பது சமூக முன்னேற்றத்தையும், விடுதலையையும் இலக்காகக் கொண்டிருப்பது என்பதாகும்.

இந்த அளவுகோலில் உடன்பாடுடைய - எல்லா எழுத்தாளர்களும் - எல்லா இலக்கியவாதிகளும் எமது முயற்சிக்குத் துணைவர எம்மோடு இணையலாம்.

அவ்வாறே புகலிட நாட்டில் ஒரு தரமான சஞ்சிகையை தொடர்ந்து வெளியிடுவதென்பது - பொருளாதார ரீதியாக சமாளிக்கக்கூடிய விடையமல்ல என்பது - கடந்த காலத்தில் வெளிவந்த பல சிற்றேடுகள் கண்ட அனுபவமாகும். பாலம் இந்த அனுபவத்தை ஒரு பாடமாக எடுத்துக் கொண்டு - வாசகர்களான உங்களது தேடலைப் பூர்த்தி செய்யவும் - அதன் மூலம் நிறையவே நல்ல ஆக்கபூர்வமான விடையங்களை நம்முடைய தாய்மொழியான தமிழ் மொழிக்கு புதிய வரவாகக் கொண்டு வரவும் - திடசங்கற்பம் பூண்டுள்ளது. அதற்கு உங்கள் ஆதரவை வேண்டிநிற்கிறது.

# ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் சந்திரிகா!



'சூரியக் கதிர்-3' இராணுவ நடவடிக்கையுடன் வடமராட்சிப் பகுதியும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு விட்டது' என அரசு அறிவித்துள்ளது. யாழ் குடாநாட்டைத் தம்வசப்படுத்தி விட்டதாகவும், அங்கு நிலைமை சுமூகமடைந்து வருவதாகவும் செய்தித் தொடர்புச் சாதனங்களிலும் தென்னிலங்கைப் பத்திரிகைகளிலும் அரச தகவல் திணைக்களம் விடுக்கும் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. 'இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள மக்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றார்கள்' என்ற மாயையின் உருவாக்குவதற்குப் பகீரதமுயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பாடசாலைகள் மீள ஆரம்பித்துவிட்டதாகவும், சீருடை அணிந்த மாணவர்கள் பாடசாலைகளில் காணப்படுவதாகவும் சொல்லப்படுகின்றது. இவையெல்லாம் தென்னிலங்கைப் பத்திரிகைகளில் பெரிய செய்தியாக வெளியிடப்படுகின்றன. யாழ் குடாநாட்டிற்கு விஜயம் செய்த பத்திரிகையாளர்களும் ஒரு நாளில், இராணுவம் அழைத்துச் சென்ற இடங்களை மட்டும் பார்வையிட்டு தமது கருத்துக்களை பக்கம் பக்கமாய் எழுதியாயிற்று. அதில் ஒருவர் நிலைமை இவ்வாறு தொடருமானால் பாதுகாப்பு தொடர்பான பத்தி (Defence



ஜானகப் பெரேரா

## அரசியல் தீர்வோ இராணுவத் தீர்வோ காணமுடியாத நிலை!!

Column) இனித் தேவைப்படாது எனக் கூறுமளவுக்கு ஒருவித 'மூளைச்சலவை' நடந்திருக்கிறது. ஆனால் இப் பத்திரிகைகளிலெல்லாம், இராணுவத்தால் தலை வேறு முண்டம் வேறு என வெட்டி எறியப்பட்ட மனிதர்களின் கதை எதுவும் இல்லை. பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட பெண்களைப் பற்றிய வார்த்தை எதுவும் இல்லை. இராணுவத்தால் 'கல்வியங்காட்டில்' குடியமர்த்தப்பட்ட குடும்பம் ஒன்று இராணுவத்தை ஏமாற்றிவிட்டு மீண்டும் கிளிநொச்சி நோக்கித் தப்பியோடிய கதை போன்ற எதுவும் இல்லை. சுருங்கச் சொன்னால் உண்மைக்கு மாறான ஒரு தோற்றத்தினை ஏற்படுத்தும் முயற்சியில் பேரினவாதப் பத்திரிகை உலகம் குதித்துள்ளது.

இராணுவ வலயத்தினுள் சிக்கிக் கொண்ட மக்கள் தமது சாதாரண வாழ்வை மீள ஆரம்பிக்கிறார்கள் என்பதனை அரசுக்கு ஒரு வெற்றியாகக் கருதுவது எவ்வளவுதூரம் சரியானது? இயல்பான வாழ்க்கை நடாத்தாத மக்களுக்காக இவ் இயல்பு வாழ்க்கை கிடைத்துவிட்டது? கொடூர இராணுவ நடவடிக்கை மூலமாக மக்களின்



ரோஹான் தலுவத்த

இயல்பு வாழ்க்கையைச் சீரழித்து விட்டு, இன்று தாம் இயல்பு வாழ்க் கையினை வழங்கிவிட்டோம் என்பது எவ்வளவு அயோக்கியத்தனம்? ஆயிரக் கணக்கான மக்களை இன்றும் தமது வீடுகளுக்குத் திரும்ப அனுமதிக்காமல் தடுத்துக் கொண்டு, மக்களுக்கெதிரான கொடூரங்களைப் புரிந்துகொண்டு எவ்வளவு காலம்தான் இவ் இயல்பு வாழ்க்கை எனும் நாடகத்தினை ஆட முடியும்?


உண்மையில் இராணுவ வியூகத்தி னுள் சிக்கிக்கொண்ட மக்களின் நிலை மிகவும் பரிதாபகரமானது. இளம் பிள்ளைகளை வைத்திருக்கும் பெற் றோர் மிகுந்த அச்சத்துடன் உள்ளனர். எந்நேரம் இராணுவம் தமது வீடுகளுக் குள் புகுமோ என்ற அச்சம், உணவுக் காகக் கால்கடுக்க நின்று இராணுவத் திடம் கையேந்த வேண்டிய நிலை. பாதுகாப்பு என்பது உண்மையில் ஒரு உணர்வு. இன்று தான் வீட்டில் படுத்து உறங்கும்போது தனக்கு எதுவும் நடந்துவிடாது என்ற நம்பிக்கையில் நிம்மதியாகத் தூங்க ஒரு மனிதனால் முடிந்தால் மட்டுமே அவன் பாதுகாப் பாக உள்ளான் என உணர்வான்.

இன்று இராணுவ வியூகத்தினுள் சிக்கியுள்ள மக்களுக்கு இப் பாது காப்பு உணர்வு இல்லை. இதனால் என்றும் நெஞ்சம் நிறைந்த அச்சம் அவர்களிடம் உண்டு. வீதியால் செல் லும்போது இராணுவம் எப்போது துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் என்று அஞ்சுகிறார்கள். தமது பெண் பிள்ளைகளை இராணுவம் பாலியல் வன்முறைக்கு உட்படுத்துமோ என்று ஒவ்வொரு தாயும் கலங்குகிறாள். சமூக வாழ்க்கையினை நடத்த முடி யாத நிலை. குடும்பங்கள் பிரிந்திருக் கும் அவலம்.

மக்களின் நிலை இப்படி இருக்கும் போது அரசு தனது பிரச்சாரங்களை முழங்கிக் கொண்டிருக்கின்றது. எவ்வ ளவு காலம்தான் இப்படி முழங்க முடியும்? ஆக்கிரமித்த பிரதேசங்க ளையும் மக்களையும் வைத்துக்கொண்டு அரசு என்னதான் செய்யப்போகின் றது?

# கலைஞர் வருகை சந்திரிகாவுக்குப் பாதகமே

உண்மையில், சிறீலங்கா அரசு ஒரு வித நெருக்கடிக்குள் தன்னைப் புதைத் துக் கொண்டுள்ளது என்றே சொல்ல வேண்டும். இனப்பிரச்சினைக்கு அர சியல் தீர்வோ இராணுவத் தீர்வோ காண முடியாத திரிசங்கு சொர்க்க நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது. இதனை தாம் உணர்ந்து கொள்ளும் போது அரசின் தோல்வி ஆரம்பமா கும் இடத்தினைப் புரிந்துகொள்ள முடியும்.



இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண வேண்டுமாயின் விடுத லைப் புலிகளின் போரிடும் ஆற்றலை நசுக்க வேண்டும். விடுதலைப் புலிக ளின் வசம் இருந்த பிரதேசங்களை ஆக்கிரமித்து விடுவது இராணுவத் தீர்வு காண்பதாகி விடாது. இராணு வத் தீர்வு என்பது இராணுவ வழிக ளின் ஊடாக பிரச்சினை தொடர் பான எதிர்ப்பினை நசுக்கி விடுவத னையே குறித்து நிற்கும். ஆனால் தற்போது அரசு விடுதலைப் புலிகளி டம் இருந்த குடாநாட்டினை ஆக்கிர மித்துள்ளதே தவிர புலிகளின் போரி டும் ஆற்றலை நசுக்கிவிட முடிய வில்லை. இராணுவம் ஆக்கிரமித்த பகுதியிலேயே இராணுவம் சீரான தாக்குதலினை நடாத்தப் புலிகளால் முடியும். குடாநாடு தவிர்ந்த பகுதிக ளில் அரசுக்கு மிகுந்த வலியினைக் கொடுக்கக்கூடிய தாக்குதல்களைச் செய்யப் புலிகளால் முடியும். புலி களை ஒரு சிறு குழுவாக மாற்றுவ தும் சாத்தியமில்லை. இந்தச் சூழலில் இராணுவத் தீர்வு சாத்தியப்படப் போவதில்லை.

இராணுவ மார்க்கங்களைவிட அரசுக்கு மிகக் கடினமான விடயம் அரசியல் தீர்வு காண்பது. புலிகளைத் தவிர்த்துவிட்டு அரசியல் தீர்வு காண முடியாது. புலிகளுடன் பேச முடியா தளவிற்கு நிலைமைகள் தர்க்க ரீதி யான வளர்ச்சியினை அடையும் வகை யில் அரசு நடந்து வருகின்றது. மேலும் புலிகளைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தாலும், அரசு இப்போது முன் வைத்திருக்கும் அரசியல் தீர்வுக்கான சட்டவரையறைகளை நடைமுறைப் படுத்த அரசால் முடியாது. J.R. இனால் கொண்டுவரப்பட்ட **1978**-ம் ஆண்டு அரசியல் சட்டத்தினை இலகு வில் தாண்டிவிட முடியாது. அவ் அரசியல் சட்டத்தினைத் தாண்டாமல் அரசியல் தீர்வுகளைக் காணும் முயற்

**தமிழீழம் சாத்தியமாகாது என்ற எண்ணத்தை தமிழ் மக்கள் மனதில் ஏற்படுத்துவது அரசின் இராணுவ உத்திகளில் ஒன்றாகும்.**


சிகளை நகர வைக்க முடியாது.

குடாநாட்டினை அரச படைகள் கைப்பற்றியுள்ள ஒரு சூழலில், இந்தியாவில் - தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள ஒரு சூழலில், ஒரு அரசியல் தீர்வு குறித்துச் செயற்பட வேண்டிய நிலைக்கு சிறீலங்கா அரசு தள்ளப்படும். இதுவரை காலமும், அரசியல் தீர்வு என்பதனை ஒரு கவசமாகப் போட்டுவிட்டு, தமிழர்களின் எதிர்ப்புச் சக்தியினை இராணுவ ரீதியில் முறியடிக்க முனையும் முயற்சியினைத் தொடர முடியுமா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. அரசியல் தீர்வு காணும் முயற்சியினை அரசு தீவிரப் படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுமாயின் அரசின் சிக்கல்கள் ஆரம்பித்துவிடும்.

வழங்கத் தயங்கும். இராணுவம் தனது முயற்சி இடையில் நிறுத்தப்படுவதனை விரும்பாது. இச் சூழலில் அரசியல் தீர்வு காண்பது சாத்தியமில்லை என்பது வெளிப்படுமானால் அது அரசின் இராணுவ நடவடிக்கைகளை 'தார்மீக நியாயத்தினை' சர்வதேச ரீதியாக உடைக்கும்.

மறுபடியாக இராணுவத் தீர்வு முயற்சியினை வலிந்து தொடருமானால் அரசுக்கு அரசியல் தீர்வு முயற்சியில் உண்மையில் அக்கறை இல்லை என்பது தெளிவுபடும்.

தமிழகத்தில் கலைஞரின் ஆட்சி வந்தது சந்திரிகா அரசுக்கு மிகவும் பாதகமாகவே மாறப்போகின்றது. கலைஞர் விடுதலைப் புலிகளுக்கு



இராணுவ நலனின் அடிப்படையில் தற்போது இராணுவப் பாதைகளை நிறுத்தக்கூடாது என்கிறார்கள் இராணுவத் தளபதிகள். அரசியல் ரீதியில் - அரசியல் தீர்வு காண்பதற்கான அழுத்தம் அதிகரிக்கப் போகின்றது.

இச் சூழலில் அரசியல் தீர்வு முயற்சியா அல்லது இராணுவ வழியினைத் தொடர்வதா என்ற கேள்விக்கு அரசு பதில் கண்டாக வேண்டிவரும். அரசியல் தீர்வு முயற்சிகளை ஆரம்பித்த பின் அது இயல்பான பல தடைகளை உருவாக்கும். 'புலிகளின் கதையினை முதலில் முடியுங்கள்' என்பர் பேரினவாதிகள். சந்திரிகா அரசு அரசியல் ரீதியில் தொல்லைப்படுவதனை ஐ.தே.க. விரும்பும். அதனால் அரசியல் தீர்வு முயற்சிக்கு மனப்பூர்வமான ஆதரவு உதவி செய்வார் எனும் அடிப்படையில் இதனைக் கூறவில்லை. கலைஞர் அரசியல் தீர்வு காண வற்புறுத்தப்போகிறார்; ஈழத் தமிழ் மக்களுக்கு கௌரவமான அரசியல்தீர்வு தேவை என வலியுறுத்தப் போகின்றார். இந்த வலியுறுத்தலுக்கு இந்திய மத்திய அரசு இசையும் பட்சத்தில், சந்திரிகா அரசு சாத்தியமாகாத ஒரு விடயத்தினை - அதாவது அரசியல் தீர்வு காணும் விடயத்தில் இறங்க நிர்ப்பந்திக்கப்படும். இந்த இடத்தில் சந்திரிகா அரசு காணும் தோல்வி, போரின் போக்கைத் தீர்மானித்துவிடவும் கூடும். ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் சந்திரிகாவைத் தவிக்க வைக்கவும் கூடும்.

— அவதானி

## உள்ளிருள்

— செ. பொ. சிவனேசு

கண்ணிருந்தது திறந்தபடியே
கருவிழி வெண்விழியும்
காணுதலும் சீரே
கட்புலத்திற்கு ஊறு ஏதுமில்லை
ஏனோ
குருடாகிக் கிடந்ததென்
வாழ்வொழிந்த நாட்கள்!
எல்லாமே இருளென
தெரிந்ததும் ஏனோ!

இருளுள்ளா இத்தனைக்கும்
பூட்டிக் கிடந்தேன்!
அல்லேல்
இருளா என்னுள்
பூட்டிக் கிடந்தது!

பேய்வீடாய்க் கிடந்ததுவே என்
உள்வீடு!
இருளுள் தானாம்
பேய்களின் இருப்பு.
பெயர்கள்தான் எத்தனை
பேய்களுக்கு —
குலவெறி மதவெறி
பொறாமை எத்து
பேராசை காமம் சினம்....

எவ்விதம் உணர்ந்தேன்?
இன்றெவ்விதம்
கண்ணொளி பெற்றேன்?
கவிதைக்குள் கிடந்தெழுந்த
தீப்பொறியோ!
அறிந்திலேன்
எனினும்,
ஒன்றறிவேன்!
இருளிலா இத்தனைக்கும்
பூட்டிக் கிடந்தேன்?
அல்ல,
இருளே என்னுள்
பூட்டிக் கிடந்தது!
உள்ளிருளே வெளியிருள்
என்பது முணர்ந்தேன்!

# மதமாற்றம்



# அடிப்படைகள் நியாயப்படுத்தல்கள் எதிர்விளைவுகள்

**1970**களில் வெள்ளிக்கிழமை தோறும் அதிகாலையில், செல்வச் சந்நிதி ஆலயத்திற்குச் சென்றவர்கள் - கந்தசஷ்டி கவசத்தையும் -திருப் புகழையும் தனது கணீரென்ற குரலில் பாடிப் பஜனை செய்து வந்த அந்த நடுத்தர வயதுப் பெண்மணியை நிச்சயமாகத் தெரிந்திருப்பார்கள்.

தமிழ் கடவுளான முருகன் மீது அளவுகடந்த பக்தி வைத்திருந்த அந் தப் பெண்மணி, இன்று பாட்டியாக பாரிஸ் நகரத்தில் வசித்து வருகிறார். இன்று அவருக்கு முருகன் மீது பக்தி கிடையாதது மட்டமல்ல; அவருக்கு முருகனையே தெரியாது. இன்று கர்த்த ருடைய விசுவாசியாகவிட்ட அவர் - தன்னைச் சந்திக்க வருபவர்களிடம், "தம்பி கையிலை ஈட்டி வைச்சிருக்கிற அந்தச் சைவச் சாமிக்கு என்ன பெயர்?" என்று கேட்குமளவுக்கு மாறிப்போயிருக்கின்றார்.

ஐரோப்பியர்கள் நாடு பிடிப்பவர் களாக நமது நாட்டுக்கு வந்த காலத் தில், சமூகரீதியாக அங்கு வாழ்ந்த நமது மக்களுக்கு ஒரு பாரிய அநீதி இழைக்கப்பட்டிருந்தது. அதாவது, பிறப்பைக் கொண்டும் தொழிலைக் கொண்டும் மக்கள் இழிவுபடுத்தப்பட் டிருந்தார்கள்.

சமூகத்தின் உயர்நிலையில் மக்க ளின் ஆன்மீகத் தலைவராக இருந்த வைதீக இந்துமதக் குரு தெருவில் வந்தால் - சில குறிப்பிட்ட சாதியினர் - அவர் வரும் நேரத்தில் தெருவில் நுழைவதே தடுக்கப்பட்டிருந்தது. இன் றும் சில சாதியினர் - தெருவில் நுழைய அனுமதிக்கப்பட்டாலும் - தோளில் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு வாய்பொத்தி ஒதுங்கி நின்று அவருக்கு வழிவிடவேண்டியி ருக்கிறது. இவர்களெல்லாம் கோயி லுக்குள் செல்வதென்பது நினைத்துப் பார்க்கப்படமுடியாத ஒன்று.

இந்த நிலையில் - ஐரோப்பாவிலி ருந்து வந்த பாதிரிமார் அதுவும்



வெள்ளைக்காரர் - தான் கட்டிய கோவிலுக்குள் இவர்களையெல்லாம் வர அனுமதித்து தொட்டு ஆசீர் வதித்து - சாப்பாடும் கொடுத்தபோது அது அந்த மக்களுக்கு உண்மையில் வாழ்க்கையில் கற்பனை செய்து பார்க் கவே முடியாத ஒன்றாக இருந்தது. அத னால் காலங்காமாக தங்களை இழிவு செய்து வந்த வைதீக இந்து மதத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடிவு வேண்டி பெருமளவு மக்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறினார்கள். தொடக்கத் தில் - ஐரோப்பியர்கள் - நமது மக்களை கட்டாய மத மாற்றத்திற்கு உட்படுத் தினாலும் - பின்னர் நமது இந்து மதத் திலிருந்த பலவீனங்களையும் - குறை பாடுகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டு மக்கள் தாங்களாகவே மதம் மாறவேண்டிய சூழ்நிலையை உருவாக் கினார்கள். (முதலில் கிறிஸ்தவ மதத் திற்கு சமூக அடக்குமுறைகள் காரண மாக மாறியவர்களைப் பார்த்து 'சோத் துக் கிருத்தவர்கள்' (சோத்துக்காக மாறி யவர்கள்) என்று இழிவு செய்தவர்கள் கூட, பின்னாளில் - பட்டம், பதவிக ளுக்காக மதம்மாறியது பழைய கதை.

இன்று ஐரோப்பியர்களுடைய நாடு களுக்கு அகதிகளாக நாங்கள் வந் துள்ள இன்றைய காலகட்டத்தில், இந்த மதமாற்ற விடயம் - பிரச்சினைக்குரிய ஒன்றாக தலைதூக்கியுள்ளது. ஐரோப் பியர்கள் நமது நாட்டுக்கு வந்த காலத் தில் - நம்மத்தியில் இருந்த சமூக அடக்கு முறைகள் - அதே தன்மையில் - அதே முனைப்போடு இன்று இல்லை. ஆனால், எம்மத்தியில் இருக்கக்கூடிய ஏதோ ஒரு அடிப்படைப் பலவீனத் தைப், பயன்படுத்திக்கொண்டு சில பிசாசுகள் என்று சொல்லும் வழக்கம் இருந்தாலும் கிறிஸ்தவ மதம் நிறுவ னப்படுத்தப்பட்ட ஒரு மதமாக - நமது நாட்டில் வேரூன்றி விட்ட பின் 'உன் னைப் போல் அயலவனையும் நேசி' என்கின்ற யேசுநாதரின் போதனை யின்படி மற்றவர்களையும் அரவணைத் துச் செல்லும் மற்றைய மதங்களின் தனித்துவத்தையும் - சமூக அந்தஸ்தை யும் ஏற்றுக்கொள்ளும் போக்கு கத் தோலிக்க திருச்சபைக்கு இருந்தது.

ஆனால், கத்தோலிக்க திருச்சபைக்கு புறம்பான விதத்தில் - மதப் பிரச்சாரம் செய்யப் புறப்பட்ட மதக் குழுக்களின் நடவடிக்கைகள் அவ்வாறு இருக்க வில்லை. எல்லா மதப் பிரச்சாரர்க ளும் இல்லையென்றாலும் - பெரும் பாலான மதப் பிரச்சாரர்கள் - கிறிஸ்தவ மதத்தை தவிர மற்றைய மதங்களை சாத்தானின் மதங்கள் என்றும் - அவை சாத்தானின் வழி யில் செல்பவை என்றும் சொல்லி வருவதாகச் சொல்லப்படுகிறது. கிறிஸ்தவ மதத்தின் அடிப்படை நூல்களான புதிய ஏற்பாட்டிற்கும் பழைய ஏற்பாட்டிற்கும் - புதிய புதிய தத்துவார்த்த வியாக்கியானங்களை கொடுத்து வரும் இவர்களால் புகலிட நாடுகளில் நமது சுய அடையாளம் அழிக்கப்படுவதோடு நமது - பாரம் பரிய பண்பாட்டு - கலாச்சார விழுமி யங்கள் சிதைவுண்டு போகும் நிலை தோன்றியுள்ளது.

ஐரோப்பிய மதக் குழுக்கள் - எமது இனத்தின் பண்பாட்டு, கலாச்சார விழுமியங்களை சிதைக்கும் விதத்தில் மதமாற்றத்தில் ஈடுபட்டு வருவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

காலனியக் காலத்தில் - மதமாற்றம் ஏற்பட்ட தொடக்கத்தில், இந்து மதத்த வர்களைப் பார்த்து சாத்தான்கள்,

இது தொடர்பான - வாதப் பிரதி வாதங்கள் - இதற்கான அடிப்படை கள் - இவை சம்பந்தமான வியாக்கி யானங்கள் தொடர்பாக நாம் புகலிட நாடுகளில் வசிக்கும் நம்மவர்களில் பலதரப்பட்டவர்களிடமும் கருத்துக் கேட்டோம்.

> **'புதிய ஏற்பாட்டிற்கும் பழைய ஏற்பாட்டிற்கும் - புதிய புதிய தத்துவார்த்த வியாக்கியானங்களை கொடுத்து வரும் இந்த மதமாற்றக்காரர்களால் புகலிட நாடுக ளில் நமது சுய அடையாளம் அழிக்கப்படுவதோடு நமது - பாரம்பரிய பண்பாட்டு - கலாச்சார விழுமியங் கள் சிதைவுண்டு போகும் நிலை தோன்றியுள்ளது.'**

முதலில், ஐரோப்பாவிற்கு - கத் தோலிக்க திருச்சபையின் சார்பில் இலங்கையிலிருந்து வந்து மதப் பணி புரியும் - குருவானவர் ஒருவரைச் சந் தித்தோம். தன்னுடைய பெயரை அறி முகம் செய்து பேட்டியளிக்க விரும் பாத அவர், "யேசு கிறிஸ்து உன் னைப் போல் அயலவரையும் நேசி என்றுதான் சொல்லியுள்ளார். இடம், காலம், சந்தர்ப்ப சூழ்நிலைகளின் அடிப்படையில் ஒருவர் சொன்ன கருத்தை, அவற்றையெல்லாம் விட்டு விட்டு தனியாக எடுத்து வியாக்கியா னம் சொல்வது தவறு. யேசுவின் பேரால் மற்றவர்களை சாத்தான்கள் என்று சொல்வதும் இவ்வாறானது தான். இப்படிப்பட்ட போதனைகளை கத்தோலிக்க திருச்சபை ஏற்றுக்கொள் வதில்லை. யேசுவின் வழி நடக்கும் எங்களைக்கூடத்தான் இவர்கள் சாத் தான்கள் என்று சொல்கிறார்கள். மதம் மாறுவது, மதம் மாற்றுவது என்று இரண்டு விடையங்கள் உண்டு. ஒருவர் ஒரு மதத்திலிருந்து இன் னொரு மதத்திற்கு மதம் மாறுகின் றார் என்றால், அவர் முதலில் தன் னுடைய சொந்த மதத்தைப் பற்றி முழுமையாகத் தெரிந்திருக்க வேண் டும். அதில் என்ன குறைபாடு இருக் கிறது என்பது அவருக்கத் தெரிந்தி ருக்க வேண்டும். அதன் பிறகுதான் மாறப்போகிற புதிய மதத்தில் தன் னுடைய மதத்தில் இல்லாத புதிய விடயம் என்ன இருக்கிறது. தன்னு டைய மதத்தில் உள்ள குறைபாடுக ளுக்கு புதிய மத்ததில் என்ன நிவார ணம் இருக்கிறது என்பதையெல்லாம்

> **"யேசு கிறிஸ்து உன்னைப் போல் அயலவரையும் நேசி என்றுதான் சொல்லியுள்ளார். இடம், காலம், சந்தர்ப்ப சூழ்நிலைகளின் அடிப்படையில் ஒருவர் சொன்ன கருத்தை, அவற்றையெல்லாம் விட்டுவிட்டு தனியாக எடுத்து வியாக்கியானம் சொல்வது தவறு."**

முழுமையாகத் தெரிந்துகொண்டு அதற்குப் பின்பு மதம் மாற முயற்சித்தால் அதை தவறென்று சொல்ல முடியாது. ஆனால், இன்னொருவர் சொல்கிறார் என்பதற்காக - மதம் மாறுகிறவர் சொந்த மதத்தைப் பற்றியும் தெரியாதவர் - புதிதாகச் சேர்ந்த மதத்தைப்பற்றியும் தெரியாதவர்" என்று சொன்னார்.

பாரிஸ் நகரில் வசிக்கும் - பிரஹதீஸ்வரன் சொல்கிறார், "மதம் என்பது ஒவ்வொருவரின் தனிப்பட்ட விடயம். எந்தக் கடவுளைக் கும்பிட வேணும், எந்தக் கடவுள் அதிகம் அருள் தருவார் எண்டது ஒவ்வொருவரின் தனிப்பட்ட நம்பிக்கைகளைப் பொறுத்தது. ஆனால், புகலிட நாடுகளில் இப்போது நடக்கிற இந்த மத மாற்ற விடயத்தை அப்படித் தனிப்பட்ட விடயமாக என்னாலை பார்க்க முடியேல்லை. எங்கடை போராட்ட உணர்வை திசைதிருப்ப வேணும் எண்டு நினைக்கிற ஏதோ ஒரு பெரிய சக்தி இவைக்குப் பின்னாலை இருக்க வேணும் எண்டுதான் நான் நினைக்கிறேன். இவையெல்லாம், கர்த்தரின் வழிதான் சரியான வழி எண்டு சொல்லுகினம். அப்படி அந்த வழி சரியான வழி எண்டு உறுதியான நம்பிக்கை இவைக்கு இருந்தால் வேதப் புத்தகத்தையும் - அதை வைத்து இவை எழுதுகிற விளக்கப் புத்தங்களையும் தவிர மற்றப் புத்தகங்களை படிக்கிறது - விஞ்ஞானபூர்வமான விடையங்களை தெரிஞ்சுகொள்கிறது - கேட்கிறது எல்லாம் சாத்தானின் - எழுத்துக்களும் பேச்சுக்களும் எண்டு சொல்லி எதுக்கு தடைவிக்க வேணும்" என்றார்.

ஜேர்மன் 'எசன்' நகரில் வசிக்கும் ஜோன்சன் - புதிய மதக்குழுவால் - மதம் மாற்றப்பட்டு சிறிது காலம் அவர்கள் பின்னால் திரிந்துவிட்டு, மீண்டும் மனம் திருந்தி முன்பிருந்த கத்தோலிக்க மதத்திற்கு திரும்பி வந்தவர். அவரை இதுபற்றிக் கேட்டபோது, "நான் ஜேர்மனிக்கு வந்த புதிதில் - என்னுடைய நெருக்கிய உறவினருடன் சீட்டுக்கட்டினேன். அவர் என்னை ஏமாத்திப்போட்டார். அதிலை தகராறு ஏற்பட்டு பெரிய குடும்பப் பிரச்சினை வந்திட்டுது. அப்ப மனம் நொந்துபோய் குடிக்க ஆரம்பிச்சிட்டன். அந்த நேரத்திலை இந்த மதக்காரங்களின்ரை தொடர்பு கிடைச்சது. அந்த நேரத்திலை எனக்கிருந்த மனக்குழப்பத்திலை - இவங்கடை பிரச்சாரங்கள் மனதுக்கு ஆறுதலாக இருந்தது. ஆனா போகப் போக இவங்கடை நடவடிக்கைகள்ளை எனக்குச் சந்தேகம் வந்தது. எங்கடை தலைவர் பிரபாகரனை சாத்தான் எண்டும் - எங்கடை விடுதலைப் போரை சாத்தான்களின் யுத்தம் எண்டும் சொன்னது எனக்குப் பிடிக்கேல்லை. அதுக்குப் பிறகு நான் அவையின்ரை தொடர்பை விட்டுட்டன். என்னைப் பொறுத்தவரை, நான் பிறப்பிலை கத்தோலிக்கன். என்னுடைய அப்பா ஒரு கத்தோலிக்கர். அவற்றை அப்பா ஒரு கத்தோலிக்கர். கத்தோலிக்க திருச்சபைக்கு மிஞ்சி இவை ஒண்டும் கர்த்தருடைய போதனைகளை பரப்ப முயற்சி செய்யேல்லை. கத்தோலிக்க திருச்சபை மற்றச் சமயக்காரனையும் நேசித்துக்கொண்டு எங்களை உண்மைக் கிறிஸ்தவனாக இருக்கும்படிதான் சொல்லித்தந்தது. ஆனால், இவை மற்றச் சமயக்காரரை சாத்தான் எண்டு சொல்லிக்கொண்டு எங்களை எங்கடை சமூகத்திலை இருந்து தனிமைப்படுத்தி - பிரிச்சுவைக்கிறதன் மூலம் எங்கடை சமூகத்தை அழிக்க திட்டமிடுகினம் எண்டுதான் நான் நினைக்கிறன்" என்றார்.

> "மதம் என்பது ஒவ்வொருவரின் தனிப்பட்ட விடயம். எந்தக் கடவுளைக் கும்பிட வேணும், எந்தக் கடவுள் அதிகம் அருள் தருவார் எண்டது ஒவ்வொருவரின் தனிப்பட்ட நம்பிக்கைகளைப் பொறுத்தது."

பொதுவாக முன்வைக்கப்படும் இத்தகைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக யேசு ஜீவிக்கிறார் என்ற மத அமைப்பின் போதகர்களைக் கேட்டோம்.

"உன்னைப் போல் அயலவனையும் நேசி என்ற யேசுநாதர் ஒருபோதும் மற்ற மதக்காரர்களை குற்றப்படுத்துவதோ இழிவுபடுத்துவதோ இல்லை. அவர் அன்பு மயமானவர். அவரது போதனைகள் அன்பையே அஸ்திவாரமாகக் கொண்டவை.




புகலிட நாடுகளில் நம்மவரிடையே ஏற்படுவது மனமாற்றமேயாகும். யேசு கிறீஸ்த்துவின் போதனைகளை அறியு முன் நமது பண்பாடு, கலாச்சாரம் குடும்ப உறவுகளை மட்டுமல்ல தன்னையே மறந்து வெளிநாட்டு அநாகரிக கலாச்சாரங்களைக் கைக்கொண்டு பாவங்களுக்கு அடிமையாகி தம் வாழ்வை அழித்துக்கொண்டிருந்த பலர் இயேசுவின் போதனைகளை அறிந்த பின்னர் மனத் தெளிவு பெற்று - தம்மைத் தாமே அறிந்து கொண்டு தற்போது சீர்பொருந்திய மனித வாழ்வு வாழ்கிறார்கள். எம்முடைய நடவடிக்கைகளால் சிதைந்த

**"நம்முடைய இந்து மதத்திலை இருக்கிற சுதந்திரமும், சிறப்பும் தத்துவ ஆளுமையும் மற்ற மதத்திலை இல்லை. ஆனால், அப்படியிருந்தும், நம்முடைய இந்து மதக்காரர்களே அதிகளவுக்கு மதம் மாற்றப்படுவதற்கு ஏதோ ஒரு அடிப்படைக் காரணம் இருக்கவேண்டும்."**

உறவுகளும் - அழிந்த கலாச்சாரங்களும் கட்டி எழுப்பப்படுகின்றன. மத மாற்றம் தொடர்பாக வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் முற்றிலும் வேறுபட்ட காரணங்களாலும் கிறீஸ்துவின் போதனைகளைக் கேட்டும் அவைகளைப் பின்பற்றி நடக்காதோரால் ஏற்படும் காரியங்களையன்றி வேறில்லை.

மக்களின் விடுதலையுணர்வையோ, தேசப்பற்றையோ நாம் திசைதிருப்புவதுமில்லை; அதற்காக முயல்வதுமில்லை, எமக்கும் தாய்மண்ணின் மீது அக்கறையுண்டு; தேசப்பற்றுண்டு. 'என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெயம் பண்ணி, என் முகத்தைத் தேடி; தங்கள் பொல்லாத வழிகளை விட்டு திரும்பினால் அப்பொழுது பரலோகத்தில் இருக்கிற நான் கேட்டு அவர்களது பாவத்தை மன்னித்து அவர்களது நாட்டுக்கு ஷேமத்தை நான் கொடுப்பேன்' என வேதம் சொல்லுகிறது. ஆகையால் நாமும் தேவகட்டளைக்கு கீழ்படிந்து எமது தேசத்தின் விடுதலைக்காக கர்த்தருடன் எம்மை ஒடுக்கி போராடி ஜெயித்து வருகிறோம்" என்றார்கள்.

சுவிஸ் போர்ண் நகரத்தில் வசிக்கும் சிவசோதியைக் கேட்டபோது, "நம்முடைய இந்து மதத்திலை இருக்கிற சுதந்திரமும், சிறப்பும் தத்துவ ஆளுமையும் மற்ற மதத்திலை இல்லை. ஆனால், அப்படியிருந்தும், நம்முடைய இந்து மதக்காரர்களே அதிகளவுக்கு மதம் மாற்றப்படுவதற்கு ஏதோ ஒரு அடிப்படைக் காரணம் இருக்கவேண்டும். இங்கே புகலிட நாடுகளிலை நகரத்துக்கு நகரம் இருக்கிற இந்துக் கோயில்கள், அருச்சனை - அபிஷேக, உண்டியயல் காசு பற்றித்தான் அக்கறைப்படுகின்றவே தவிர - அவைக்கு மதம் பற்றின கவலையே கிடையாது. ஒரு இந்துக் கோயில் கடவுள் வழிபாட்டை மட்டுமல்ல தமிழ் கலை கலாச்சாரத்தையும் கட்டிக்காக்கும் அமைப்பாக விளங்க வேண்டும் என்ற உணர்வு நமக்குக் கிடையாது. நாங்கள் - இந்த நிமிடம் வரையிலை கூட எங்களுடைய தவறுகள் என்ன என்பதை ஆராய்ந்து திருந்துவதற்கு முயலவில்லை என்பது மட்டுமல்ல அதற்குத் தயாராகவும் இல்லை என்பது ஒரு வருந்தத்தக்க உண்மை. இதை பத்திரிகையிலை எழுத வேண்டும்" என்றார்.



பாரிஸ் லாச்சப்பேல் பகுதியில் உணவு விடுதி வைத்திருக்கும் 'நண்பன்' என்று அழைக்கப்படும் கமால்டினைக் கேட்பொழுது, "என்னைப் பொறுத்தவரை, தாய், தகப்பன் நாடு எல்லாவற்றையும் விட சமயம்தான் முக்கியம். அதேநேரம் சமயம் - தாய், தகப்பன் மீதுள்ள மரியாதையை குறைக்கவில்லை. நாட்டுப்பற்றை அங்கீகரிக்குது. மதம் என்பது அவங்க அவங்க சொந்த விடயம். வாலிபப் பருவத்தை அடைந்த பிறகு அவங்க அவங்க முடிவு செய்யவேண்டிய விடயம். யாரையும் கட்டாயப்படுத்தி மதமாற்றம் செய்விப்பது என்பது தேவையில்லாத விடயம்.

பரம்பரை பரம்பரையாக ஒருவர் ஒரு கருத்தை பின்பற்றி வருவதால் அது உயர்ந்த கருத்து என்று சொல்ல முடியாது. ஐரோப்பாவைப் பொறுத்த வரை, இந்துக்கள் மதம் மாறுகிறார்கள் என்றால், அவர்களுடைய பழைய கருத்தில் ஏதோ தவறு இருக்க வேணும். உங்க மார்க்கம் உங்களுக்கு; எங்களது மார்க்கம் எங்களுக்கு என்று திருக்குர்ரானிலே சொல்லியிருக்கு. அவங்கவங்க அவங்க மதத்தை உயர்வாய் நினைக்கிறது தப்பில்லை. ஆனால், அடுத்தவங்க மதத்தை மதிக்கவேணும். இந்து சமயம், ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட மதமாக இன்னும் உருவாகவில்லை. ஆனால், கிறிஸ்தவ மதத்தைப் பொறுத்தவரை அது நன்கு ஸ்தாபனமயப்படுத்தப்பட்டுவிட்டது. உதாரணமாகப் பார்த்தால், இந்து மதத்திற்கு ஒருவர் மாறுவதற்கு திட்டமிட்ட சட்டதிட்டங்கள் கிடையாது. மற்ற மதங்களுக்கு அப்படியான சட்டதிட்டங்கள் உண்டு. அவர்கள் அமைப்பு ரீதியான முறையில், கவர்ச்சியான பிரச்சார முறைகளை கையாண்டு இந்துகள் மத்தியில் வரும் போது, அவர்கள் சுலபமாக அந்தப் பக்கம் சாய்ந்துவிடுகிறார்கள். மதம் மாறுவதற்கு அடிப்படை இதுதான்" என்றார்.

**"அவங்கவங்க அவங்க மதத்தை உயர்வாய் நினைக்கிறது தப்பில்லை. ஆனால், அடுத்தவங்க மதத்தை மதிக்கவேணும்."**

*தொகுப்பு: ராஜன்*

# வடமராட்சி - தென்மராட்சியை இழந்தால் போராட்டம் பின்னடைவைச் சந்திக்குமா?



**குடாநாட்டினுள் 'சூரியக்கதிர் - 2' இராணுவ நடவடிக்கை மூலம் இலட்சக்கணக்கானோர் இடம்பெயர்ந்துகொண்டிருக்க, வட - தென்மராட்சியில் கடும் சமர் நடந்துகொண்டிருந்தது அந்நேரம் விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினரும், சர்வதேசச் செயலாளருமான திரு. லோரன்ஸ் திலகர் அவர்களைச் சந்தித்தோம்.**

**◈ ஏற்கனவே யாழ்ப்பாணத்தை இழந்துவிட்டோம். தற்போது, வடமராட்சி, தென்மராட்சியையும் இழந்தால் அது போராட்டத்துக்கு ஒரு பின்னடைவைக் கொண்டுவராதா?**

▣ யாழ் குடாநாட்டின் கேந்திர நிலையை நாம் அவதானித்தால், அதனை இழப்பதை நாம் ஒரு தற்காலிக இழப்பு அல்லது தற்காலிகப் பின்னடைவு என்றே கூறலாம். தமிழர் பகுதிகளால் சூழப்பட்டு எதிரியின் பகுதிகளிலிருந்து மிகுந்த தூரத்தில் குடாநாடு உள்ளதை அறிவோம். அப்பகுதியைக் கைப்பற்றி வைத்திருப்பது நீண்டகால இராணுவத் தந்திரோபாய அடிப்படையில், இராணுவத்திற்கு சாதகமான செயலென்று கூற முடியாது.

அப்பகுதியைத் தக்கவைத்துக் கொள்ள ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட சிங்கள இராணுவம் தேவைப்படும். அவற்றிற்கான விநியோகம் கொழும்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளிலிருந்து வரவேண்டும். இவ் விநியோகம் கடல், தரை, வான் வழிப் பாதைகளில் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்படுவதைக் காண்கிறீர்கள். விநியோகத்தின் பிறப்பு நிலையான கொழும்பு நகரமே பல வேளைகளில் தாக்கப்பட்டுள்ளதை அறிவீர்கள். வலிகாமம் பகுதிக்குள் இராணுவம் நிலைகொண்டிருந்த போது, அப்பகுதி விடுதலைப் புலிகளின் கடுமையான கரந்தடித் தாக்குதல்களுக்கு உள்ளாகியமையை உணர்வீர்கள். ஏனைய பகுதிகளிலிருந்தும் இராணுவம் வரவழைக்கப்பட்டு அங்கு நிறுத்தப்பட்டதால் கொழும்பு - கிழக்குப் பகுதி ஆகியவை மோசமான தாக்குதலுக்கு உள்ளாகியமையும், ஒரே மாதத்தில் 150-ற்கு மேற்பட்ட இராணுவத்தினர் பல்வேறு இடங்களில் கொல்லப்பட்டதையும் காண்பீர்கள். வலிகாமம் 'வெற்றி' ஒரு வெற்று வெற்றி என அரசியல் ஆய்வாளர்களால் வர்ணிக்கப்பட்டது.

அரசாங்கம் மிக மோசமாக சிங்கள மக்களிடையே தற்போது செல்வாக்கு இழந்து காணப்படுவதே இந்த 'வெற்றி'யின் பொய்மையைப் புரிந்துகொள்ள உதவும். எனவே, இக்கட்டான நிலைமையைச் சமாளிக்க அரசாங்கம் மேற்கொண்ட அவசரமும் அசட்டுத்தனமும் நிறைந்த இன்னொரு இராணுவச் செயற்பாடு என்றே இதனைக் கருதலாம். இராணுவத் தலைமைப் பீடத்தைப் பொறுத்தவரை, ஒரு பகுதிக்குள் தற்காப்பாக நிலைத்து நிற்காமல், வெளிப்பட்டு முன்னேற வேண்டும்; எனவேதான், கெரில்லாத் தாக்குதல்களில் சிதைந்து போகாமல் இராணுவ மன உறுதியை, கட்டமைப்பைப் பேணலாம் என்று கருதுகின்றது. தமிழரின் பகுதிக்குள் ஊடுருவிப் பரந்துபடுவது, இன்னும் மோசமான தாக்குதல்களுக்கே வழிவகுக்கும். மரபுரீதியான இராணுவம், தனது ஆகாயப் படை ஆட்லறி, நிறைந்த சுடுகலச் சக்தி, படைபலம் ஆகியவற்றைப் பயன்படுத்தி முன்னேறுவதும் ஒரு நிலப்பரப்பைக் கைப்பற்றுவதும் எளிதாக இருக்கலாம். ஆனால், அதனைத் தக்க வைத்துக்கொண்டிருக்கும் முயற்சியிலேயே அது சீரழியவும், தோல்வி அடையவும் நேரிடும். எனவேதான், முன்னாள் விமானப்படைத் தளபதி இவ் இராணுவ நடவடிக்கைகளை யுத்த தந்திரோபாயத்துக்கு முரணான செயல் என்றும், குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாக வைத்து செய்யப்படுபவை என்றும் வர்ணித்தார்.

**◈ மக்கள் தொடர்ந்து நெருக்கடிகளுக்கும் யுத்தத்தின் அவலங்களுக்குமிடையில் ஓடிக்கொண்டே இருந்தால், அவர்களுக்கு இயல்பாக ஏற்படக்கூடிய ஆற்றாமை – சலிப்பு என்பவை போராட்டத்தின் மீதான நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தாதா?**

▣ இராணுவத்தின் கண்மூடித்தனமான தாக்குதல்களால் ஏற்படுகின்ற அவலங்கள் எமது மக்களுக்கு தாங்கொணாத் துயரைக் கொடுக்கின்றன. ஆயினும், இவ் அடக்கு முறையையும் அவலங்களையும் தவிர்க்க முடியாதவாறு எதிர்கொள்ளத்தான் வேண்டும் என்பதை மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர். அடக்குமுறைக்குப் பணிந்து போவதால், பிரச்சினை தீரப்போவதில்லை; மாறாக மிக மோசமாகத் தொடரும், அவமானமும் அவலங்களும் நிரந்தரமாகிவிடும் என்பதை மக்கள் தெளிவாகப் புரிந்துள்ளனர். சந்திரிகா அம்மையாரின் கொடுமையையும் பொய்மையையும் மக்கள் நிதர்சனமாகக் கண்டுவருகின்றனர். இனவாதத்தின் தலைவி அவர்தான் என்பதை கண்ணாரக் காண்கின்றனர். பேச்சுவார்த்தை ஒரு நாடகம் என்பதையும், தீர்வுத் திட்டம் ஒரு ஏமாற்று என்பதையும் புரிந்துள்ளனர். எம்மீதான இராணுவ நடவடிக்கைகள் மூலம், விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தி, தான் வைத்த தீர்வுத் திட்டத்தையே மலினப்படுத்தி, இறுதியில் சிங்கள மேலாதிக்கத் தீர்வு ஒன்றை திணிப்பதுதான் சந்திரிகாவின் நோக்கம் என்பதை தமிழ் மக்கள் ஐயமின்றி உணர்ந்துள்ளனர். இத்தகைய தீர்வைத்தான் இராணுவத்

தீர்வு என்கின்றோம். இத்தகைய இராணுவத் தீர்வு தமிழ் மக்களை நிரந்தர அடிமைகளாக்கிவிடும். எனவே, எமது மக்கள் போராட்டத்திலிருந்து தப்பி ஓடுகிறார்கள் என்று கூறுவதைவிட, நாளை போராடுவதற்காக உயிரைக் காப்பாற்ற முயல்கிறார்கள் என்பதே சரியானது. அடக்குமுறையின் கொடூரத்தன்மையை உணருதலும் அதனை எதிர்கொள்ளலும் போராட்டத்தின் மீது நம்பிக்கையீனத்தை அல்ல, நம்பிக்கையையே ஏற்படுத்தும்.

**◈ வடமராட்சி – தென்மராட்சி மக்கள் இராணுவப் பிடிக்குள் சிக்கிவிட்டால் நிலமை எப்படியிருக்கும்? அதைப் புலிகள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறார்கள்? தற்போது 50 ஆயிரம் பேர்வரை தங்களிடம் வந்துவிட்டதாக இராணுவம் கூறுகிறதே...**

▣ எதிரியின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட பகுதிகளில் மக்கள் இருப்பது சாதக, பாதகமான இரு அம்சங்களையும் கொண்டுள்ளது. எதிரி அங்கு நிலைகொள்ளாதவாறு, தொடர்ந்து எதிரி மீது தாக்குதல்களை மக்களின் ஒத்துழைப்புடன் நடாத்திக்கொண்டிருப்பது, கடலுள் மீன்கள் செயற்படுவதற்கு ஒப்பானது. இது இராணுவ ரீதியில் சாதகமான நிலை. அதே வேளை, அரசியல் ரீதியில் அரசாங்கம் பல்வேறு தகிடுதத்தங்களை செய்ய அது வழிவகுக்கும். மக்களை அரசாங்கம் பணயக் கைதிகளாய் வைத்திருக்கவும், இராணுவக் கட்டுப்பாட்டுள் தேர்தல் நாடகம் ஒன்றை நடாத்தி, மக்கள் தன்பக்கம்தான் என்று உலகிற்குக் காட்டவும் சந்தர்ப்பம் ஏற்படும். இது பாதகமான அம்சமாகும். மக்களை விடுதலை செய்துவிட்டோம், விடுதலை இராணுவத்தை மக்கள் வரவேற்கிறார்கள், தேர்தலில் விடுதலைப் புலிகளைப் புறக்கணித்து அரசாங்கத்தையும் அதனது அதிகாரப் பகிர்வு தீர்வுத் திட்டத்தையும் மக்கள் அங்கீகரித்துவிட்டனர் என்பது போன்ற பிரச்சாரங்களைச் செய்ய அது அரசாங்கத்துக்கு வாய்ப்பாக இருக்கும்.

**◈ குடாநாட்டு மக்களை முழுமையாக வன்னிப் பெருநிலப் பரப்புக்கு இடம்பெயர வைத்து அவர்கள் அவ்வளவு பேருக்கும் புனர்வாழ்வு அளிப்பதென்பது உடனடியாகச் சாத்தியப்படக் கூடியதொன்றா?**

▣ குடாநாட்டு மக்கள் அத்தனை பேரும் வன்னிப் பெருநிலப் பரப்புக்கு குடிபெயர்தலிலும், அவர்களைப் பராமரித்தலிலும் உடனடிப் பிரச்சனைகள் நிறைய இருக்கத்தான் செய்யும். அவ் அடிப்படையில் ஏராளமான மக்கள் குடாநாட்டிலும் தங்க வேண்டி வருகிறது. வெளிநாட்டு நிறுவனங்களின் செயற்பாடுகள் சிறீலங்கா அரசாங்கத்தால் பெருமளவு தடுக்கப்பட்ட நிலையில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாடுகள் பன்மடங்கு அதிகரிப்பதோடும் முதன்மையும் பெறுகிறது. இதன் செயற்பாட்டுக்கு, தமிழ் மக்களின் பங்களிப்பு பெருமளவு இருந்தால்தான் அகதிகள் பிரச்சனையைச் சமாளிக்கவும், அரசாங்கம் அவர்களது அவலத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தாமல் தடுக்கவும் முடியும்.

**◈ அங்கே நடந்துகொண்டிருக்கின்ற யுத்தத்தையும், எங்கள் மக்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளையும் தடுத்து நிறுத்த புகலிட நாடுகளில் உள்ளவர்கள் என்ன செய்ய வேண்டும்?**

▣ புகலிட மக்கள், அங்கு நடைபெறும் கொடுமைகள் தொடர்பாக உலகத்தின் மனச்சாட்சியை தட்டியெழுப்புதல் வேண்டும். அங்கு நடைபெறும் அநியாயங்களையும் அவலங்களையும் உலகின் கண்களுக்குக் கொண்டு வருதல் வேண்டும். அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு, சாதாரண மக்கள் என்ற அடிப்படையில் அனைவரும் யதார்த்த நிலைமைகளையும் அதுகுறித்த தகவல்களையும் தெரிவிக்க வேண்டும்.

அகதிகள், அல்லலுறும் மக்கள் தொடர்பாக அனைத்து உதவிகளையும் செய்ய அவர்கள் முன்வருதல் வேண்டும். உலக நிருபர்களும் அரசாங்கங்களும் உதவிசெய்ய முன்வருமாறு செய்தல் வேண்டும்.

மூன்றாவதாக, தாயகத்தின் பாதுகாப்புக்குத் தேவையான அனைத்து பங்களிப்புகளையும் செய்தல் வேண்டும். சிங்கள தேசம் தமிழ் மக்களின் அழிவை விரும்புகிறது; அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்த எண்ணுகிறது. இதனை நாம் அனைவரும் ஒன்று திரண்டு எழுச்சியுடன் எதிர்கொள்ள வேண்டும். ஒவ்வொரு தமிழனும் இப் போராட்டத்தில் தன்னை முழுமையாக இணைத்துக்கொள்ளல் வேண்டும்.



**◈ பொதுவாக உலக நாடுகளில் நடந்த எல்லா உள்நாட்டு யுத்தங்களிலும் மக்களுக்கெதிரான அடக்குமுறை கூர்மையடைந்த வேளையில் வெளிநாட்டுத் தலையீடுகள் – அதன் மூலம் பிரச்சனைகளைத் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நமது பிரச்சனையிலும் இவ்வாறான தலையீட்டுக்கான சாத்தியக்கூறுகள் உண்டா?**

▣ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம், வெளிநாடுகளின் அல்லது ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச அமைப்புக்களின் மத்தியஸ்த செயற்பாட்டை வரவேற்றே வந்துள்ளது.

சிறீலங்கா இராணுவம் தனது ஆக்கிரமிப்புக் கொள்கையைக் கைவிட்டு, மக்கள் மீது ஏற்படுத்தும் நெருக்கடிகளை விடுத்து, பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலை ஏற்படுத்துமிடத்து சர்வதேச மத்தியஸ்தத்துடன் தேசிய இனப் பிரச்சனையைத் தீர்க்க தாம் தயார் என்று உறுதியாகக் கூறியுள்ளனர். சிறீலங்கா அரசாங்கம் இப் பிரச்சனையை உள்நாட்டுப் பிரச்சனை என்று கூறி, சகல சர்வதேச மத்தியஸ்த வேண்டுகோள்களையும் நிராகரித்து வருகின்றது. அரசாங்க முன்னெடுப்புகளை நிராகரிக்கும் அதே வேளை, வெளிநாடுகளில் உள்ள தனிப்பட்ட நபர்கள் (தமிழர்கள் உட்பட) கண் துடைப்பான சமாதான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். சமாதானப் பேச்சுவார்த்தைகளை உறுதியாகச் சாட்சியப்படுத்தக் கூடிய, தீர்வுகளை நிலைநாட்டக் கூடிய அதிகார பூர்வ அரசாங்கத்தின் அல்லது அமைப்பின் மத்தியஸ்த தலையீடு ஏற்பட்டால் அதனை ஆராய்ந்து ஏற்றுக்கொள்ள விடுதலைப் புலிகள் தலைமைப்பீடம் தயாராக உள்ளது. அதேவேளை, வெளிநாடு வாழ் தமிழ் மக்கள் அந்தந்த நாட்டு அரசாங்களின் ஆதரவைப் பெறுவதற்கும், சிறீலங்காவுக்குக் கொடுக்கும் ஆதரவை நிறுத்துவதற்கும் அனைத்துச் செயற்பாடுகளிலும் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*– இளங்கோ*

# அகதி வாழ்வின் அவலங்கள்



கடந்த குளிர் காலத்தின் ஒரு மாலைப் பொழுதில் ஒரு எட்டுமாத கர்ப்பிணிப் பெண்ணை அவள் கணவன் வீட்டை விட்டு துரத்திவிட்டான்

அவள் வயிற்றில் வளரும் குழந்தைக்கு அவன் தந்தையில்லை என்பதை கண்டுபிடித்து விட்டானாம்! அந்த இளம் பெண் கண்ணீர் மல்க இதைச் சொன்ன போது அடக்கமுடியாத ஆத்திரம் வந்தது அவள் கணவன் மீது.

"இப்படியும் ஒருவன் இருப்பானா? இவனையெல்லாம் நிற்கவைத்துச் சுட வேண்டும்" என்று கடுமையான வார்த்தைப் பிரயோகங்களைக் கொண்ட எமது விமர்சனத்தை, அவனைச் சந்தித்த பின் அவனது கருத்தை - அதிலுள்ள நம்பகத்தன்மையை ஆராய்ந்து அறிந்த போது நாம் மாற்ற வேண்டி ஏற்பட்டது. அவன் மீது நாம் கொண்ட ஆத்திரம் அனுதாபமாக மாறியது.

அந்த இளைஞன் பிரான்ஸுக்கு வந்து எட்டு வருடம். வந்த புதிதில் பாரிஸ் நகரம் அவனுக்கு ரொம்பவும் அழகாகத்தான் தென்பட்டது. செயின் நதியும் - ஈபிள் கோபுரமும், லூவர் அருங்காட்சியகமும் - லூயி மன்னன் அரண்மனையும் - வெள்ளைத் தேவாலயமும் - ஏன் நிலத்தடி மெத்திரோவும் கூட வனப்புடன் காட்சியளித்தன.

என் வாழ்நாளில் இவற்றையெல்லாம் கண்ணால் பார்க்க முடிந்தது கிடைத்தற்கரிய பெரும் பேறு - என்ற நினைப்பு, $25m^2$ (சதுரமீட்டர்) ஸ்ரூடியோவில் - நான்கு நண்பர்களுடன் ஐந்தாவது ஆளாக படுத்துறங்கியதை அப்போதொன்றும் கஷ்டமான விடையமாக தோன்றும்படி செய்யவில்லை.

அவன் பிரான்ஸ்சுக்கு வந்த காலத்தில் - அகதி அந்தஸ்த்து பெறுவது இப்போதுள்ளது போல் மிக மிக கஷ்டமானதாக இல்லாவிட்டாலும் - சுலபமானதாக இருக்கவில்லை. ஆனாலும் இப்போதுள்ளது போல் 'காட்' கிடைத்தால் தான் வேலை செய்யலாம் என்ற நிலை அன்றில்லை. ஆரம்ப விசா (பச்சை விசா) பெற்ற உடனேயே அன்று வேலை தேடக் கூடியதாக இருந்தது.

மோகம் 30 நாள் ஆசை அறுபது நாள் என்று சொல்வது போல், வரவேற்பு ஒரு வாரம் - ஆதரவு ஒரு மாதம் என்கிற கணக்கில் இவனை தங்களது ஸ்ரூடியோ அறையில் தங்க வைத்த இவனது நண்பர்கள் ஒரு மாதத் தவணை வந்த போது - 'மச்சான் இங்கை - பரிசிலை சுவாசிக்கிற காற்றைத் தவிர மிச்சமெல்லாம் காசு தான்' என்று - நாசூக்காக 'சமறி'க் கதையை போட்டதுமல்லாமல் - தாங்கள் வேலைசெய்த - லெபனான் நாட்டவரது உணவு விடுதி ஒன்றில் வேலையும் வாங்கிக் கொடுத்து விட்டார்கள்.

வேலைக்குப் போன முதல் நாள் - எச்சில் கோப்பை கழுவ ஒரு மாதிரித்தான் இருந்தது. ஆனால் அதை விட்டால் வேறு வேலை கிடைக்காது என்று நண்பர்கள் மிரட்டிவிட்டார்கள். விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் - அதை செய்தே ஆகவேண்டிய நிலை.

அவன் ஊரில் இருந்த காலத்தில் வெளிநாடுகளில் ஒருநாளைக்கு 8 மணித்தியாலந்தான் வேலை; வேலைக்கேற்ற சம்பளம் என்றுதான் நினைத்திருந்தான். ஆனால் அவன் வேலைக்கு சேர்ந்த உணவு விடுதியில் காலையிலை 9 மணிக்கு வேலைக்குப் போனால் மாலை 3 மணிக்கு பகல் வேலை முடியும். பிறகு இரவு வேலை மாலை 5.30 மணிக்கு தொடங்கி இரவு 12.30 மணிக்கு முடியும். மொத்தம் 13 மணித்தியால வேலை. ஆனால் சாப்பாட்டு செலவையும் சேர்த்து சம்பளக் கணக்கு 10 மணித்தியாலத்துக்குத்தான்.

வேலைக்குப் போன முதல் கிழமையே பாரிஸ் நகரம் அவனுக்கு அழகிழந்து போய் விட்டது. செயின் நதியும் - ஈபிள் கோபுரமும் - மெத்ரேவும் - பெருமைகொள்ள முடியாத விடயங்களாகி விட்டன. ஸ்ரூடியோ வாழ்க்கை சலிப்பூட்டும் - சிறை வாழ்க்கையாகி விட்டது.

இப்படியாக - மகிழ்ச்சியில்லாத ஓய்வில்லாத - இயந்திரமயமான வாழ்க்கையாக 7 வருடங்கள் ஓடிவிட்டது. கடந்த வருடம் அவனது பெற்

றோர்கள் அவர்களாகவே அவனுக்கு பெண் பார்த்து, பேசி முடித்து பெண்ணை பாரிசுக்கு அனுப்பி வைத்தார்கள்.

அவனுக்கு இப்போது புதிய சிக்கல். திருமணம் முடிந்ததும் - மனைவியுடன் குடித்தனம் நடத்த புதிய வீடு தேவை. அன்பளிப்பு கொடுக்காமல் பாரிசில் வீடு எடுக்க முடியாது. அப்படிக் கொடுத்தால் கூட ஒரு மாதம் இரண்டு மாதம் காத்திருக்கவும் வேண்டும்.



அப்படி அவன் வீட்டிற்கு ஏற்பாடு செய்து ஒரு மாத தவணைக்கு காத்திருந்த நேரத்தில் - மனைவியாகப் போகிற பெண் பாரிசுக்கு வந்து விட்டாள். பாரிசிலிருந்த அவளது இரண்டு சகோதரர்களும் விரைவாக அவளை இங்கே கூப்பிட்டு விட்டார்கள்.

இப்போது பிரச்சனை என்னவென்றால் - மாப்பிள்ளையும் சரி - பெண்ணின் அண்ணன் மாரும் சரி தனித் தனி ஸ்ருடியோகளில் நண்பர்களுடன் 'சமறி'க்குத் தான் இருந்தார்கள். அங்கே பெண்ணைத் தங்க வைக்க இடமில்லை .

எனவே மாப்பிள்ளைக்கு வீடு கிடைக்கு மட்டும் பெண்ணுடைய சகோதரர்கள் - அவர்களுக்குத் தெரிந்த ஒரு இளம் தம்பதி வீட்டில் பெண்ணை 'சமறி' கொடுத்து தற்காலிகமாக தங்கவைத்தனர்.

ஒரு மாதம் கழிந்த பின் - வீடு கிடைத்தது. திருமணமும் தடல் புடலாக நடந்தது. மாப்பிளையும் பெண்ணும் தனிக்குடித்தனம் தொடங்கினார்கள்.

ஒரு முன்று மாதம் ஒன்றும் பிரச்சனையில்லாமல் சராசரியாகக் கழிந்தது.

மூன்றாம் மாதம் - பெண் பிரான்சுக்கு வந்தவுடன் தங்க வைக்கப்பட்ட வீட்டுக்காரரின் மனைவிக்கு பிரவசம் - அதற்கென அந்தப் பெண் ஆஸ்பத்திரியில் - அனுமதிக்கப்பட்டிருந்த போது - நம்முடைய புதுமணப் பெண் "அவர் (அதாவது அந்த வீட்டுக்காரர்) பாவம் நான் போய் அங்கே இருந்து அவருக்கு சமைத்துக் கொடுக்கப் போகிறேன் - என்று கணவனிடம் சொன்னாள்.

கணவனுக்கு அதில் உடன்பாடில்லை. 'அவர்களுக்கு நிறைய சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். நீ போக வேண்டாம்' என்று அவன் மறித்து விட்டான். ஆனால் மனைவி கேட்பதாக இல்லை. தொடர்ந்து தான் அங்கே போக வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தது மட்டுமல்லாமல் கணவன் வேலைக்குப் போனதும் அவனுக்குத் தெரியாமல் அங்கு போய் வரவும் செய்தாள்.

இந்த விடையம் கணவனுக்குத் தெரிந்த போது அவனுக்கு இலேசான சந்தேகம் மனதில் முளைவிட்டது. 'நாங்கள் கலியாணமான புதிசு. என்னோடை கூட இருந்து எனக்கு சமைச்சு தரவேணும் எண்ட அக்கறையை விட அந்தக் குடும்பத்தின் மேல் என்னைவிட ஏன் இவளுக்கு அதிக அக்கறை' என்று அவன் சிந்திக்க ஆரம்பித்தது மட்டிமல்லாமல் - மனைவியை இரகசியமாக கண்காணிக்கவும் செய்தான்.

இறுதியில் தனது மனைவிக்கு ஏற்கனவே மனைவியும் பிள்ளையுமுடைய அந்த வீட்டுக்காரக் கனவானுடன் தகாத உறவு இருப்பதையும் கண்டுபிடித்து விட்டான். இந்த விடயம் - அந்தக் கனவானுடைய மனைவிக்கும் தெரிந்து அவர்களுக்குள்ளும் பெரிய பிரச்சனையாகி விட்டது.

நம்முடைய இந்த இளைஞனுக்கோ வாழ்க்கையே வெறுத்துவிட்டது. மனைவியை மன்னித்து ஏற்றுக்கொள்வதற்கு அவன் அந்தளவுக்கு பக்குவப் பட்டவனல்ல - குடும்பத்துக்குள் தினந்தினம் பிரச்சனை. அந்தப் பெண்ணும் "தான் விட்ட தவறை திருந்தி கணவனை தன்னை ஏற்றுக்கொள்ளும்படி' செய்விப்பதற்கு முயலவில்லை. மாறாக அவளின் மனத்தில் தன்னை முதல்முதலில் தொட்ட கனவான்தான் தனது கணவன் என்றும் சட்டபூர்வமான கணவன் அந்நியன் என்ற நினைப்புமே மேலோங்குகின்றது.

ஏறக்குறைய ஐந்து மாதங்களுக்கு மேலாக - மற்றவர்களுக்கு சொல்லவும் முடியாமல் தீர்த்து வைக்கவும் முடியாமல் - அவர்களுக்குள்ளேயே நடந்த சண்டை அவர்களுக்கு திருமணமான 8ம் மாதம் உச்சக்கட்டத்தை அடைந்தபோது அந்தப் பெண "என்ரை வயிற்றிலை இருக்கிறது உன்ரை குழந்தையில்லை. அவற்ரை குழந்தை தான் - நான் இனி உன்னோடு வாழத் தயாரா இல்லை" என்று சொல்லி விட்டு வீட்டை விட்டு வெளியேறி விட்டாள்.

நேரே தன்னைக் கர்ப்பவதியாக்கிய கனவான் வீட்டுக்குச் சென்ற போது, அவனது சட்டபூர்வமான மனைவி - கதவைத் திறக்கவே மறுத்து விட்டாள்.

அதன் பின்தான் தன்னுடைய நிற்கதியான நிலையைப் புரிந்துகொண்ட அந்தப் பேதைப் பெண் தன்னை தன் கணவன் அடித்துத் துரத்திவிட்டான், என்று மற்றவர்களுக்கு சொல்வதன் மூலம் யாராவது தன்னை தனது சட்டபூர்வமான கணவனுடன் சேர்த்து வைப்பார்கள் என்று தப்புக்கணக்குப் போட்டாள்.

ஆனால் - உண்மை வெளியே தெரிய வந்தபோது அதற்கு அவளால் முகங்கொடுக்க முடியவில்லை. அவமானம் காரணமாக உடன் பிறந்த சகோதர்களிடம் கூட அடைக்கலம் தேடவிரும்பாமல், பிரான்சின் தொலை தூரத்து அகதி முகாம் ஒன்றுக்குச் சென்று விட்டாள்.

அகதி முகாம் (foyer) வாழ்க்கை அந்தப் பெண்ணுக்கு அவள் தெரிந்தோ தெரியாமலோ செய்த தவறுகளால் ஏற்பட்ட அவமானத்திலிருந்து அவளை தற்காலிகமாக தற்காத்துக்கொள்ள உதவலாம். ஆனால் அவளது எதிர்கால வாழ்க்கைக்கு, அவளுக்குப் பிறக்கப் போகிற குழந்தையினுடைய - எதிர்கால வாழ்க்கைக்கு அது எவ்வாறு உதவப் போகிறது என்பது கேள்விக்குரிய விடையமாகும்.

*— நக்கீரன்*

## பிரான்ஸ்

# அகதிகளுக்கு கதவடைப்பு
# புதிய சட்டத்திருத்தம் வருகின்றது

பிரான்சில் தற்போது ஏற்பட்டிருக்கும் வரலாறு காணாத வேலையில்லாப் பிரச்சனையும் அதன் காரணமாக ஏற்பட்டுள்ள அரசியல் பொருளாதார நெருக்கடிகளும் பிரான்சுக்கு தொழில் வாய்ப்பு மற்றும் அகதி அந்தஸ்துக் கோரி வரக்கூடிய வெளிநாட்டவர்களை கட்டுப்படுத்த வேண்டிய நிலையை, பிரான்சில் தற்போது ஆட்சியிலிருக்கும் வலதுசாரி அரசாங்கத்திற்கு உருவாக்கியுள்ளது.

பிரான்சில் வாழும் வதிவிட அனுமதியற்றவர்களுக்கு எதிராக எடுக்க கூடிய நடவடிக்கைகள் பற்றி பிரெஞ்சுப் பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது விதந்துரைகளை கடந்த **16.04.96** செவ்வாயன்று வழங்கியுள்ளது.

இவ் விதந்துரைகளை மையமாக வைத்து சட்ட மூலம் ஒன்று மே மாத நடுப்பகுதியில் பிரெஞ்சுப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாம் என நம்பகமாக அறியப்படுகின்றது.

இவ் விதந்துரைகளை பிரெஞ்சுச் சட்டத்தரணிகள் சங்கம் (Syndicats des avocats de France), எல்லைகளற்ற மருத்துவர் சங்கம் (MSF), இனவாதத்துக்கு எதிரான அமைப்பு (MRAP), சீ.ஜி.ரி, சீ.எப்.டி.ரி., எப்.எஸ்.யூ ஆகிய தொழிற் சங்கங்கள், மனித உரிமைகள் சங்கம், சோசலிசக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இவ் விதந்துரைகள் பற்றி பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியின் உத்தியோகபூர்வ ஏடான Humanite தனது ஆசிரியத் தலையங்கத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளது, "வலதுசாரிகள் என்றுமே மாறப்போவதில்லை; அவர்களது போலித்தனம் இன்னுமொரு முறை வெளிக் கொணரப்பட்டுள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், ஏழை நாடுகளில் உள்ள முதலாளித்துவ அரசுகளை ஊக்குவிக்கும் இவர்கள் அவர்களால் அகதிகள் ஆக்கப்படும் அப்பாவிகளை அனாதைகள் ஆக்குகின்றார்கள் எனக் குற்றம் சாட்டியுள்ளது."

புதிய சட்டத்திருத்த ஆலோசனையின்படி ஒரு சிறு குழந்தை குற்றமிழைத்தவனாக காணப்படின், அவன் எங்கு பிறந்திருந்தாலும் அவனிடம் வதிவிட அனுமதிப் பத்திரம் இல்லாதிருப்பின் (குறிப்பு: *1993-ம்* ஆண்டு பஸ்குவா சட்டம் உருவாகமுன் பிரான்சில் பிறக்கும் குழந்தைகள் பிரெஞ்சு பிரஜா உரிமையுடையவர்களாவர். *1993-ம்* ஆண்டிலிருந்து அவர்கள் 16 வயதை அடையும் வரை அவர்களுக்கு பிரஜா உரிமை கிடையாது என்பதுடன் 16 வயதை எய்தும் போது பிரஜா உரிமை விண்ணப்பம் பரிசீலிக்கப்படும் என்பதே தற்போதுள்ள சட்டமாகும்) அவன் தனது பெற்றோரின் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவான். அங்கு அவனை ஏற்றுக் கொள்ள யாரும் இல்லாத விடத்து அந்நாட்டு சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவான் என அவ் விதந்துரை தெரிவிக்கின்றது. உதாரணமாக சிறீலங்காவைச் சேர்ந்த பெற்றோரின் குழந்தை பிரான்சில் பிறந்திருந்தாலும் அவன் தான் முன் பின் அறியாத அந்த நாட்டு மொழியே பேசாத சிறீலங்காவுக்கு அனுப்பப்படலாம். மேலும் வதிவிட அனுமதியற்ற ஒருவர் நோயுற்றால், அவருக்கு மருத்துவ உதவி வழங்குவதை புதிய சட்டத் திருத்த விதந்துரை கட்டுப்படுத்துகின்றது. நோயுற்றவர் தொற்று நோய் போன்ற கொடிய நோய்களால் பாதிக்கப்படாவிட்டால் அவருக்கு மருத்துவ உதவி வழங்குவதை அது தடை செய்கின்றது. "ஆபத்தில் இருக்கும் ஒருவருக்கு உதவாமல் தவிர்த்துக் கொள்வது" தண்டனைக்குரிய குற்றம் என அரசியல் சாசனம் சொல்லும் வேளையில் வைத்திய உதவி சம்பந்தமான புதிய ஆலோசனை சட்டவிரோதமானது என மனித உரிமை அமைப்புக்கள் கண்டனம் தெரிவிக்கின்றன.

இந்தச் சின்னக் குழந்தைக்குத் தெரியுமா பிரெஞ்சுப் பொலிஸ் ''மாமாக்கள்'' ஏன் தன்னைச் சூழ்ந்து கொண்டுள்ளார்கள் என்று!




பிரான்சுக்கு ஒருவர் வரவிரும்பின் தனது நாட்டில் உள்ள பிரெஞ்சு தூதுவராலயத்தில் கைவிரல் அடையாளங்களை வழங்க வேண்டும் எனவும் தெரிவிக்கும் இவ் விதந்துரை பதவியில் உள்ள அரசின் உறுப்பினர்கள் சிலரதும் கண்டனத்துக்குள்ளாகியுள்ளது.

காலம் சென்ற முன்னாள் பிரெஞ்சு ஜனாதிபதி வெளிநாட்டவர்கள் வருகை பற்றி ஒரு முறை கருத்து வெளியிட்ட போது "கடந்த காலங்களில் எமது முன்னோர்களின் தவறுகளுக்கு நாங்கள் செய்யும் பிராயச்சித்தம் தான் வெளிநாட்டவர்களுக்கு நாம் புகலிடம் அளிப்பது ஏதோ ஒரு வகையில் எங்களுடைய முன்னாள் காலனிய நாடுகளில் அகதிகள் உருவாவதற்கு நாங்கள் காரணமாக இருந்திருக்கின்றோம் என்பதை மறந்து விடக்கூடாது" என்றார்.

*— சந்நியாசி —*

# கமல்ஹாஸனின் நேர்முகம்



❑ **தீவிரவாதத்தைக் கருவாகக் கொண்ட "குருதிப் புனல்" உருவாவதற்கான பின்னணி என்ன?**

◇ வன்முறையின் வலி தனக்கு நிகழும் வரை தெரிவதில்லை. என் படத்தில் வன்முறை அதிகமென்று பல வருடங்களாக ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. அதற்குக் காரணம் அவர்கள் வாழ்க்கையில் நடக்கும் வன்முறையை சரியாகக் கவனிப்பதில்லை. எப்பொழுதாவது சாலை விபத்தில் மூளை சிதறிக்கிடப்பவரின் சடலத்தை பஸ்ஸில் போகும் பொழுது எட்டிப் பார்த்துவிட்டு "அப்பப்பா" என்று சாப்பிடும் வேளையில் பேசிக்கொண்டிருக்கிற விசயமாகப் பார்க்கிற தமிழர்கள்தான் தமிழகத்தில் அதிகம் இருக்கிறார்கள். சுற்றி நடக்கிற விசயங்கள் பற்றிக் கவனிப்பதில்லை.

எனக்கு வன்முறையின் வலி அதிகமாகத் தெரிந்ததற்கு தொடக்கத்திலிருந்தே நிறையக் காரணங்கள் உண்டு. சின்ன வயதிலிருந்து நான் அடித்ததும், என்னை அடித்ததுமாய் நிகழ்ந்த சம்பவங்கள் எனக்குள் ஆழமாய்ப்

## "எனக்குள் இருக்கும் சந்தேகமே குருதிப்புனல்"

பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதனால் மற்றவர்கள் துன்புறுத்தப்படும் பொழுது ஏற்படும் வலியை என்னால் அதிகமாகவே உணரமுடிகிறது. ஆனால் தமிழனுக்கு வன்முறையின் கோரம் மறந்துபோய்விட்டதாகத்தான் நினைக்கிறேன்.

என்னை என் அப்பா படிக்க வைத்ததே "கிரிமினல் லாயராக" இருந்து சம்பாதித்த பணத்தில்தான். எனவே வன்முறைக்கும், எனக்கும் பூர்வீக சொந்தமே இருக்கிறது. இந்த வன்முறை புரியாமல் 'இப்படி எல்லாம் நடக்குமா என்ன?' என்று கேட்கும் போக்கை சுட்டிக்காட்ட வேண்டும் என்பதற்காகத்தான் என் படத்தில் வன்முறைகளை சீரியசாக சித்தரிக்கிறேன். ஒருவேளை பஸ்ஸில் போகிற வன் விபத்தை எட்டிப்பார்க்கும் மனப்பக்குவத்துடன் என் படத்தில் இது ஆரம்பமாகியிருக்கலாம். ஆனால் இன்று அந்த மனப்பக்குவத்தில் நான் இல்லை.

பொஸ்னியாவுடைய ரத்தத்தை டைம் பத்திரிகையில் அவ்வளவு பளிச்சென்று காட்ட வேண்டுமா என்று கோவிப்பவர்களுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருப்பது அந்த ரத்தத்தை அவ்வளவு பளிச்சென்று காட்டாவிட்டால் நீங்கள் உங்கள் சலவைத்துணி நன்றாக இருக்கிறதா என்று மட்டும் பார்த்து விட்டுப் போய்விடுவீர்கள். கண்ணைப் பறிப்பதைப் போன்று அந்த ரத்தத்தை காட்டவில்லையென்றால் என்னுடைய குரல் உங்களுக்குக் கேட்காது.

இந்தக் கோபாவேசம்தான் வன்முறை சம்பந்தப்பட்ட விசயங்களைப் படமாக எடுக்க என்னைத் தூண்டிக் கொண்டே இருக்கிறது. முக்கியமாக பம்பாய்க் கலவரத்தைப் படம் எடுக்க வேண்டுமென்று எனக்கு ரொம்ப ஆசையாக இருந்தது. ஆனால் மணிரத்தினம் அவர்கள் காதல் கலந்து அதை சொல்லிவிட்டகாரணத்தினால் அதை எடுக்க வேண்டாம் என்று முடிவு செய்தேன். பிற்பாடு எல்.டி.டி.ஈ. பற்றி எடுக்க வேண்டுமென்று தோன்றியது. அந்த விசயத்தில் நடுநிலமை வகிக்க வேண்டியதென்பது நம் கடமை; உலகக்கடமை. ஆனால் அதற்கான தைரியம் எனக்கில்லை. ஆனால் அது என்னை உறுத்திக்கொண்டே இருந்தது. இவ்வளவு கோழையா கமலஹாஸன் என்று. ஆனால் இந்தக் கருத்தைத் சொல்வதற்கான தைரியமும், சாதுர்யமும் இல்லை. ஆனால் பொய் சொல்லக்கூடாது என்பதால் நிறைய யோசித்தேன். அதனால் வன்முறை என்ற ஒன்றை மட்டும் வைத்துக் கொண்டு அது தவறு என்று மட்டும் ஏன் படம் எடுக்கக்கூடாது என்று

யோசித்து, இது பற்றி கோவிந் நிகலானியிடம் பேசிக்கொண்டிருந்தேன். "துரோக்கால்" உருவானது. என் வீட்டில் அவர் அந்தக் கதையைச் சொன்ன பொழுது எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது. சரி செய்யலாம் என்று சொன்னேன். ஆனால் அந்த நேரத்தில் 'மகாநதி' பண்ணிக்கொண்டிருந்ததால் அதை செய்யமுடியவில்லை. ஆனால் அதன்மீது ஓரக்கண்ணில் ஒரு பார்வை இருந்துகொண்டே இருந்தது. பிறகு என் மனைவி "துரோக்கால்" பார்த்துவிட்டு படம் ரொம்ப நன்றாக இருக்கிறது என்றார்கள். என் மனைவியின் சினிமா ரசனை மீது எனக்கு ரொம்ப நம்பிக்கை உண்டு. எனவே நான் அதை பார்த்த பொழுது, அவர்களே எதிர்பார்க்கவில்லை உடனே நான் இதை தமிழில் எடுக்கப் போகிறேன் எனச் சொல்வேன் என்று.

ஆனால் முதலில் பலர் இந்த முடிவை குதர்க்கமானதாகத்தான் நினைத்தார்கள். கோவிந்த் நிகலானி செய்யத் தவறிய விசயங்களை (அறிவுக்கு எட்டாததனால் அல்ல பணத்திற்கு எட்டாததனால்) தமிழில் ஒரு நட்சத்திர அந்தஸ்தில் இருக்கும் நம்மால் செய்ய முடியும் என்ற நம்பிக்கையில்தான் இதை எடுத்தேன். இப்படித்தான் "குருதிப்புனல்" உருவானது.

ஒரு கலைஞன் என்ற முறையில் எனக்குத் தெரிந்ததை, என்னுடைய வலியை நான் எடுத்திருக்கிறேன். அதற்குமேல் நான் முயற்சி செய்யவில்லை. அப்படி முயற்சி செய்திருந்தால் ஆஸ்காருக்காகவே எடுத்திருக்க முடியும். ஆனால் இது தமிழ் மக்களுக்காக எடுக்கப்பட்ட படம். அது வந்து "முத்து" அளவுக்கோ, " தேவர் மகன்" அளவுக்கோ வெற்றி பெறவில்லையே என்று என்னைக் குத்திக்காட்டுகிறார்கள். எனக்கு அது பற்றிக் கவலை இல்லை. ஒவ்வொரு சீனும் கோனார் நோட்ஸ்போல் எடுத்து வைக்க வேண்டிய படங்கள் தமிழில் கடந்த பத்து வருடமாக அதிகமாகப் போனால் ஒரு இருபது இருக்கும். அதில் "குருதிப் புனல்" அடங்குகிறது. அந்தப் பெருமை எனக்கும் இருக்கிறது.

**❑ அதிக இக்கட்டான நிலையில் கௌதமி தன்னை கற்பழிக்க முயல்பவனைக் கொலை செய்கிறபொழுது அந்தக் கொலை பார்வையாளர்களிடம் மிகப் பெரிய அங்கீகாரத்தைப் பெறுகிறது. இதுபோன்ற நியாயமான, தர்மத்தின் அடிப்படையிலான கோபாவேசமான காரணங்கள், ஒவ்வொரு தீவிரவாதி உருவாவதற்குப் பின்னும் இருக்கிறதே, அதை ஏன் நீங்கள் காட்டவில்லை?**

◈ அப்படி காட்டியிருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் நான் எடுத்த கதை ஆதியின் பார்வையில் இருந்துதான். அவனுக்கு அந்தக் காரணங்களெல்லாம் புரியவேயில்லை. அவனுக்கு நிகழ்ந்த விசயங்கள்தான் கொஞ்ச கொஞ்மாய் புரியவைக்கின்றன. "நீ என்னைச் சுடப்போகிறாய் அல்லவா! முதுகில் சுட வேண்டுமென்று தோன்றுகின்றதல்லவா. அதற்குப் பெயர்தான் தீவிரவாதம். அதுதான் எங்களுடைய கோபம்" என்று ஆதிக்கு சொல்லிக் கொடுப்பது, அவனுக்கு வாத்தியாராக இருப்பது பத்திரிதான்.

"இவனுடைய குருதிப்புனலில் கால் நனைக்க ஆரம்பித்த அன்று முதல், என் வாழ்க்கையின் மொத்தமுமே மாறிப்போனது" என்று ஒரு வசனம் வரும், அதுதான் உண்மை. வில்லன்தான் ஹீரோவுடைய குரு. நான் கதாசிரியனாக மேலோங்கி இருந்ததால் தைரியமாக ஹீரோவாவது மண்ணாங்கட்டியாவது தூக்கிப் போடுங்க என்று எடுக்க முடிந்தது.

ஒரு விசயம் சொல்லியாக வேண்டும். முதலில் நான்தான் பத்ரி பாத்திரத்தை செய்வதாக இருந்தது. அப்படிச் செய்திருந்தால் எல்லோரும் பயந்திருப்பார்கள், மிரண்டிருப்பார்கள். இதுவே தாங்கிக்கொள்ள முடியாத வெக்கையை ஏற்படுத்தி இருக்கிறது என்றால் அது எப்படி இருந்திருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

சில படங்களில் ஆத்திகன் நாத்திகன் பிரச்சனைகள் வரும்பொழுது முட்டாள்தனமாக எடுத்திருப்பார்கள். நான் பார்த்து கொதித்துப் போவேன். என்ன வாதங்கள் முன்வைக்கப்பட வேண்டுமோ, அவை முன்வைக்கப் படாது. இவர்கள் தராசை தலைகீழாகப் பிடித்து நிறுப்பார்கள். சில ஆங்கிலப் படங்களைப் பார்த்தால் தெரியும். சரி, தப்பு இரண்டையும் நேர்மையாகச் சொல்லிவிட்டு நீதிபதியின் பொறுப்பை நம்மிடம் விட்டு விடுவார்கள். எழுத்தாளர்கள் உட்கார்ந்து கொண்டு ஒரு பக்கத் தட்டை பேனாவால் தட்டிக்கொண்டே இருக்க மாட்டார். அதுபோல் செய்யக்கூடாது என்று நான் நினைத்தேன். ஒரு அமச்சூர் முயற்சி என்றுதான் சொல்வேன். உலகளவில் இது ஒரு அழுத்தமான முயற்சி என்று நான் ஒப்புக் கொள்ளமாட்டேன்.

**❑ 'ஆதியின் பார்வையில் கதை சொல்லப்பட்டதாகச் சொன்னீர்கள்'. அதனுடைய விளைவு என்னவென்றால் "அரசின் குரலாக" (Spokasman of the State) பொத்தாம் பொதுவாக தீவிரவாதம், வன்முறை கூடாது என்று பிரச்சாரம் செய்கிற பிரச்சினையை மேம்போக்காக பார்க்கிற படமாக முடிந்துவிடுகிறதே...?**

◈ அதை ஆதி பார்க்கவே இல்லை. அது கதைக்கு சம்பந்தமும் இல்லை. அதனால்தான் இவனுடைய பிள்ளையுடனும், இன்னொரு பிள்ளையுடனும் தொடங்குகிற இரண்டாவது அத்தியாயத்தில் தீவிரவாதி உருவாவதற்கான காரணத்தைச் சொல்லியிருக்கிறேன்.

"கதைக்கு ஆரம்பம், நடு, முடிவு என்று இருக்க வேண்டும். ஆனால், அது அந்த வரிசைக் கிரமத்தில் தான் இருக்கவேண்டும் என்ற நியதி கிடையாது" என்பார்கள். அதனால்தான் தீவிரவாதிகள் உருவாவதற்கான காரணத்தை, தீவிரவாதிகள் பிறப்பதில்லை,

**ஒவ்வொரு சீனும் கோனார் நோட்ஸ்போல் எடுத்து வைக்கவேண்டிய படங்கள் தமிழில் கடந்த பத்து வருடமாக அதிகமாகப் போனால் ஒரு இருபது இருக்கும். அதில் ''குருதிப் புனல்'' அடங்குகிறது. அந்தப் பெருமை எனக்கும் இருக்கிறது.**



உருவாக்கப்படுகிறார்கள் என்ற கருத்தை படத்தின் கடைசியில் சொல்லியிருக்கிறேன். என்னைப் பொறுத்த வரையில் ஒரு கலைஞன் என்ற முறையில், அந்தக் கருத்தைச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் அந்தக் காட்சியைச் சேர்த்தேன். ஆதி எவ்வாறு போலிஸ்காரன் ஆனான் என்பதை நான் எப்படிச் சொல்லவில்லையோ, அவ்வாறே பத்ரி எப்படி தீவிரவாதியானான் என்பதையும் நான் சொல்லவில்லை.


❑ **பெரும்பாலான தமிழ்ப் படங்களில் உறுதியோடும் முழு வல்லமையோடும் எதைச் செய்தும் சாதிக்க நினைக்கிற கதாபாத்திரம் கடைசிவரை நிற்கும், சலனப்பட்டு, பயந்து, குடும்பத்தை பற்றிய நினைவோடு சோர்ந்து போகிற கதாபாத்திரம் இடையில் இறந்துவிடும். ஆனால், குருதிப் புனலில் அப்படியே மாறி வந்திருக்கிறது. உறுதியோடு நிற்கிற 'அப்பாஸ்' இடையில் செத்துவிடுகிறான். ஆதி கடைசி வரை வருகிறான். இது வழக்கமான தமிழ்ச் சினிமாவிலிருந்து மாறுபட்டு காட்டவேண்டும் என்ற நோக்கத்திற்காக செய்யப்பட்ட விஷயமா? அல்லது கதையின் இயல்பே அதுதானா?**

◇ கதையின் ஜீவனே அதுதான். கோவிந் நிகலானியின் படத்தில் எனக்கு அதுதான் பிடித்திருந்தது. இன்னும் சொல்லப் போனால், என்னுடைய நண்பர்கள் சிலருக்கு நான் செய்த சில சப்பைக்கட்டுகள் பிடிக்கவில்லை. எதற்காக அந்த மனிதனை அழகு படுத்துகிறீர்கள். வேர்வை வடிந்து கொண்டிருப்பதற்கு மேல் பவுடர் பூசிவிட்டால் போதுமா, துடைத்தல்லவா விடவேண்டும். நீங்கள் அதை விட்டுவிட்டு, வழக்கமான தமிழ்ப் படம் பண்ணிவிட்டீர்கள் என்று கடுமையான விமர்சனம் கூடச் செய்தார்கள்.

ஒரு விஷயம் செய்யவேண்டும் என்று உள்மனம் கூறுவதும், செய்வதே தவறு என்று இன்னொரு மனம் சொல்வதும் நடக்கிறது அல்லவா! இந்தக் குழப்பம் எனக்கு இருக்கிறது.

காந்தி ஜெயிக்கவில்லையா? என்று கேட்கிற வாதத்தில் இருக்கும் பல ஓட்டைகள் எனக்குத் தெரிகிறது. அதனால்தான் இன்று இந்தியாவில் ஏற்படும் பல வன்முறைகளுக்கு அர்த்தம் புரியாமல் குழம்பிக்கொண்டிருக்கிறோம். ஏன் விடை சொல்லவில்லையென்றால், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்ற கெட்டிக்காரத்தனத்தினால் அல்ல. எனக்கே விடை தெரியாது என்பதுதான் உண்மை.

என்னுடைய குழந்தை தண்ணீர் தூக்கிக் குடிக்கும் பொழுது பிரம்பால் அடித்து என் குழந்தையின் கண் போயிருந்தால் நான் அந்த அப்பன் மாதிரி சும்மா இருந்திருக்க மாட்டேன். அவனுக்கு இரண்டாயிரம் வருஷமாக கற்றுக்கொடுக்கப்பட்ட பாடம்



**என்னுடைய குழந்தை தண்ணீர் தூக்கிக் குடிக்கும் பொழுது பிரம்பால் அடித்து என் குழந்தையின் கண் போயிருந்தால், நான் அந்த அப்பன் மாதிரி சும்மா இருந்திருக்க மாட்டேன். அவனுக்கு இரண்டாயிரம் வருஷமாக கற்றுக்கொடுக்கப் பட்ட பாடம் அது. அதனால் சும்மா இருந்தான்.**

அது. அதனால் சும்மா இருந்தான். எனவே, "சுகப் பிரவசம்" ஆகாத நிலையில் ரணசிகிச்சை வேணுமா, வேணாமா என்ற குழப்பம் எனக்குள் இருக்கிறது. மார்க்ஸ் சொன்னது சரியா, தப்பான்னு விமர்சனம் பண்ணுகிற அருகதையைப் பற்றியெல்லாம் நான் கவலைப்படவில்லை. ஏனென்றால் நான் அவர்களுடைய தோளில் நின்றுகொண்டு உலகைப் பார்க்கிறேன். எனக்கு சில சந்தேகங்கள் இருக்கிறது. எனக்கு தெரிந்தது அசுத்தமாகக் கூட இருக்கலாம். என்னைத் திருத்துங்கள். இல்லையென்றால் நான் எப்படி மேம்பட முடியும்? எனவே எனக்குள் இந்த சந்தேகங்கள் இருக்கின்றன. இந்த சந்தேகம் தான் "குருதிப்புனல்".

❑ **ஒழுக்கமின்மைக்கும், கற்பழிப்புக்கும் பேர்போன பொலிசை ஒழுக்க சீலர்களாக காட்டிவிட்டு, தீவிரவாதிகளை கற்பழிக்கிறவர்களாகக் காட்டி இருக்கிறீர்களே. அது எப்படி நியாயமாகும்?**

◇ பொலிசை கெட்டவன் என்று எல்லோரும் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். அது நிகழும் உண்மை; எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்த பொலிஸ்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்களின் வேலையை விட்டுவிட்டார்கள். எனவே பொலிஸ்காரர்கள் எல்லோரும் மோசமானவர்கள் கிடையாது.

அதேபோல, தீவிரவாதிகள் எல்லோரும் சரியாக இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அதற்காக எல்லோரும் தப்பாக இருக்கிறார்கள் என்று நான் காட்டியிருந்தால், அதுதான் தவறு. "நரசிம்மன்" இம்மி பிசகவில்லை அல்லவா! மனைவி கொண்டுவந்த மீன்குழம்பை கக்கூஸ் பக்கத்தில் வைத்து தின்றுகொண்டிருந்தானே நரசிம்மன். அவனின் நேர்மை மிக உயர்ந்தது. பத்ரியை விட உயர்ந்தது. தன்னை ஒரு சுபாஸ் சந்திரபோஸாகவும், சேகுவேராவாகவும் நினைத்துக்கொண்டு வாழ்கிற ஒரு பேன்சி கம்யூனிஸ்டுதான் பத்ரி. அவரைப் போல அல்ல நரசிம்மன்.

எனவே, தீவிரவாதிகளும் தவறு செய்கிறார்கள். இராணுவத்தினரை உயர்வாகப் பேசுகிறோம். ஆனால், பங்களாதேசில் நடந்த மிகக் கொடூரமான கற்பழிப்புக்களைச் செய்தவர்கள் யார்? இராணுவத்தினர்தானே! உலகம் முழுவதும் உள்ள இராணுவத்திற்கு இது பொருந்தும்தானே!

இறுகிய கட்டத்தைத் தாண்டி வெற்றி கிடைத்து இனிப் போராட்டத்திற்கு இடமில்லை என்கின்ற பொழுதோ அல்லது வெற்றி நெருங்கி விட்டது என்று நினைத்து துடுப்பு போடுவதை நிறுத்திவிட்டாலோ படகு நகர்வது நின்று ஒன்றோடு ஒன்று உரசி மோதிக்கொள்ளும். அதுபோல துடுப்புப் போடுவதை நிறுத்தியவன்தான் அந்தப் பெண்மேல் கைவைக்கிறவன். அதை நான் சுட்டிக்

காட்டுவதென்பது இவர்கள் எல்லோரும் கெட்டவர்கள் என்பதாகாது.

❑ **நட்சத்திர அந்தஸ்து வந்தபிறகு அதை உடைத்து பல நிரூபணங்களை வித்தியாசமான கதாபாத்திரங்களின் மூலம் செய்திருக்கிறீர்கள். அதற்காக தயாரிப்பாளர்கள் பக்கமிருந்து வந்த பிரச்சினைகளை எப்படி எதிர்கொண்டீர்கள்?**

◇ தாரிப்பாளர்களிடமிருந்து பிரச்சினையே வராதபடி ஒன்று செய்தேன். நான் உடைக்கும் விஷயங்களில் எல்லாம் நானே தயாரிப்பாளர்களாகிவிட்டேன். 'மகாநதி'யைச் சொல்கிறபொழுது எனக்கு கட்டுப்பட்ட தயாரிப்பாளர்களிடம் மட்டுமே அதைச் செய்தேன். அப்பொழுதும் கிட்டத்தட்ட, நான்தான் தயாரிப்பாளர்; ஏதாவது வந்தால் நான் பார்த்துக்கொள்கிறேன் என்று உத்தரவாதம் கொடுத்துத்தான் எடுப்பேன்.

❑ **"குணா எடுத்ததற்கு எனக்கு நான் கொடுத்துக்கொண்ட தண்டனைதான் சிங்கார வேலன்" என்று நீங்கள் ஒரு பேட்டியில் சொல்லியிருக்கிறீர்களே!**


◇ கண்டிப்பாக, சிங்காரவேலனை நான் தயாரிக்கவில்லை. என்னைக் காப்பாற்றுவதாகச் சொல்லி என் நண்பர் தயாரித்த படம் அது. இன்று என்னுடைய இழப்பு என்னவென்றால், இன்று 'முத்து' படம் பிரமாதமாகச் சம்பாதிக்கிறது. அந்த அளவுக்கு 'குருதிப்புனல்' சம்பாதிக்கவில்லை என்கிறார்கள். ஆமாம் என்று சொன்னால் தோல்வியை ஒப்புக்கொண்டார் என்கிறார்கள். என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. இப்பொழுது நான் முத்துவை ஜெயிக்க வேண்டுமென்றால் 'சகலகலாவல்லவன்' பண்ணியாகவேண்டும். இதுதான் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கும் சவால். இதற்கு நான் பதில் சொல்லியாகவேண்டும். அந்த பதில் என் பாணியில் சொல்லப் போகிறேனோ அல்லது இந்த மந்தையில் நானும் சேரப்போகிறேனோ என்பதை என் படைப்புக்கள்தான் உங்களுக்குச் சொல்லும்.

❑ **பிற்படுத்தப்பட்ட மக்களின் கல்வி குறித்து 'தேவர் மகன்' எடுத்தீர்கள். நடுத்தர வர்க்கம் சந்திக்கும் அவலங்கள் குறித்து 'மகாநதி' எடுத்தீர்கள். தீவீரவாதம் குறித்து 'குருதிப்புனல்' எடுத்திருக்கிறீர்கள். இன்று இந்தியாவில் பூதாகரமாய் கிளம்பியிருக்கிற பிரச்சினை மதவெறி. அதை வைத்து படம் பண்ணுவீர்களா?**

◇ அதுதான் 'மருத நாயகம்'. அதை எடுப்பதற்கான பணம் என்னிடம் இல்லை. எனக்கு டாலர் மணி வேண்டும். நான் வறுமையில் வாடும் கலைஞன் அல்ல. ஆனால், இந்த மாதிரி விஷயத்தில் வறுமைதான். சினிமா என்கிற ஓலைச்சுவடி மிக நீண்ட திரைச் சீலையைக் கொண்டதல்லவா. இதில் எழுதவேண்டும் என்றால் தங்கம்தானே 'இங்க்'. அப்படி வரும்பொழுது டாலர் மணி தேவைப்படுகிறது. என்னுடைய நோக்கம் 'மருதநாயகம்' செய்வதுதான். அதற்காக தள்ளிப்போட்டு தள்ளிப்போட்டு என்னுடைய டைரக்ஷன் கிட்டத்தட்ட ஏழு வருடங்கள் தாமதமாகிப் போனது. இதுதான் பண்ணுவேன் என்கிற முடிவோடு இருக்கிறேன். எங்கே இதிலும் காம்ப்ரமைஸ் பண்ணவேண்டி இருக்குமோ என்று தோன்றுகிறது. வேறு வழியில்லை. 'இந்தியன்' என்ற படத்திற்கு ஏ. ஆர் ரகுமான் இசைக்கும், சங்கர் டைரக்ஷனுக்கும் பத்து கோடி ரூபாய் கொடுப்பார்கள். எனக்கு கொடுக்கமாட்டார்கள். இதுதான் மார்க்கட். 'முத்து' என்கிற படத்திற்கு எட்டு கோடி குடுப்பார்கள். 'குருதிப் புனலுக்கு' கொடுக்கமாட்டார்கள். இதுதான் மார்க்கெட். இதில்தான் நான் தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருக்கிறேன். சில நேரங்களில் சமரசம் செய்யவேண்டி வரும். வேறு வழியில்லை. என் அப்பா அடிக்கடி சொல்வார், 'நரகலில் என்னடா தெளிவு' என்று. அதுபோல நடுவில் சில சமரசங்களைச் செய்துவிட்டு மீண்டும் மீண்டும் என்னை நிரூபிக்க முயல்வேன். வேறு வழியில்லை.

*நேர்முகம்: சு. வெங்கடேசன்*

*நன்றி: 'செம்மலர்' தமிழ்நாடு*



**சிங்காரவேலனை நான் தயாரிக்கவில்லை. என்னைக் காப்பாற்றுவதாகச் சொல்லி என் நண்பர் தயாரித்த படம் அது. இன்று என்னுடைய இழப்பு என்னவென்றால், இன்று 'முத்து' படம் பிரமாதமாகச் சம்பாதிக்கிறது. அந்த அளவுக்கு 'குருதிப்புனல்' சம்பாதிக்கவில்லை என்கிறார்கள்.**


LUNE INTERNATIONAL

LUNE
INTERNATIONAL

சிறுவர், சிறுமியர், நங்கையர், ஆடவர்
அனைவருக்கும் ஆடைகள் தெரிவு செய்திட
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

# திருப்பதி
## பஷன் ஹவுஸ்

**THIRUPPATHY**
FASHION HOUSE
222, Rue du Fg. St. Denis, 75010 Paris.
Metro: La Chapelle / Gare du Nord
Tel: 40 37 56 44



அன்புடன் அழைக்கிறது

# அகிலன்

வீடியோஸ் | சலூன்

முடிவெட்ட
40 FF மட்டுமே

**AGILAN**
201, 203 Rue du Fg. St. Denis, 75010 Paris. Metro: La Chapelle / Gare du Nord
Tel: 40 36 66 40

# "புகலிடச் சினிமா ஆரோக்கியமாக இல்லை"

*— ஏ. ரகுநாதன்*




"ஒரு கலைஞனுக்கு இருக்க வேண்டிய ஒரே ஒரு தகுதி - கற்பனையுள்ள ஒரு மனம். அது இருந்தால் எவனும் கலைஞனாக வரலாம். அதுக்கு அந்த மண்ணிலை பிறக்க வேணும் - என்ற போலித்தனமான வாதங்களை எதிர்ப்பவன் நான்".

திறமை என்பது ஒவருடைய அறிவினால் வருவது. அது பரம்பரையில் இருந்து வருவதென்றோ, மண்ணில் இருந்து வருவதென்பதோ பொய். அவை வேண்டுமானால் ஒருவனது வளர்ச்சிக்கு உதவியாய் இருக்கலாம் என்று சொல்லும் **59** வயதுடைய கலைஞன் ரகுநாதன் கலையரசு சொர்ணலிங்கத்தை வழிகாட்டியாகக் கொண்டவர். நாடக நடிகராக தனது கலைப் பயணத்தைத் தொடர்ந்த இவர் **1963**-ல் முதல் முதலாக கடமை படத்தில் நடித்தார். **1968**-ல் நிர்மலா படத்தை சொந்தமாகத் தயாரித்தார். பின்பு புதிய காற்று, தெய்வம் தந்த வீடு, நெஞ்சுக்கு நீதி ஆகிய படங்களில் நடித்தார். இவற்றை விட **10, 15** சிங்களப் படங்களுக்கு தயாரிப்பு உரிமையாளராகவும், உதவி டைரக்டர் ஆகவும் கடமையாற்றியுள்ளார்.

பாலம் சஞ்சிகைக்காக நாம் அவரைச் சந்தித்தபோது புகலிட சினிமாவின் நிலை பற்றிக்கேட்டோம்.

"நிர்மலா" படத்தில் ரகுநாதன்



"புகலிடச் சினிமா ஆரோக்கியமாக இல்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன். புகலிட சினிமாத்துறையில் ஐரோப்பிய அனுபவங்களை நாம் பின்பற்றினால் உலகத் தரத்திற்கு படம் தரலாம். ஆனால் சினிமா எண்ட உடனை எங்கட ஆக்களின்ர பார்வை - இந்தியச் சினிமாவைப்பற்றித்தான் இருக்கு. இங்கை படமெடுக்கிறவை அத்தகைய பார்வை உள்ளவைதான்.

"இந்தியாவைப்போல நம்முடைய புகலிடத் தயாரிப்பாளர்களும் காசோடை கதையையும் கொண்டு வருகினம். எனக்கு பொருளாதார ரீதியாக நல்ல நிலமை இல்லாதபடியாலை அவையின்ர விருப்பத்திற்கு நான் படமெடுக்க வேண்டிக்கிடக்கு" என்றார்.

"புகலிடச் சினிமாவில் பலர் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு பல்வேறு அனுபவங்களைப் பெற்றிருக்கிறீர்கள். ஏன் நீங்கள் எல்லோரும் ஒன்றுகூடி அந்த அனுபவங்களை பகிர்ந்துகொண்டு, விட்ட தவறுகளைத் திருத்தக் கூடாது" என்று கேட்டோம்.

அதற்கு அவர், "நான் இங்கே இருக்கக் கூடிய **99** வீதமான கலைஞர்களுடனும் வேலை செய்திருக்கின்றேன். இதுபற்றி அவையட்டை நான் பலமுறை கதைத்திருக்கிறேன். ஒருவரும் அதை ஏற்றுக்கொள்ளுகினமில்லை. தங்கடை அனுபவங்களை மற்றவைக்குச் சொன்னால் அதை மற்றவை திருடிப்போடுவினம் எண்டு இவை நினைக்கினம். நம்முடைய கலைஞர்களைப் பற்றிச் சொல்லிப் பிரயோசனமில்லை. அவை சில பிடிவாதங்களோடை இருக்கினமே தவிர அறிவு பூர்வமா சிந்திக்கினமில்லை எண்டது ஒரு பெரிய உண்மை".

"சினிமா என்பது ஒரு டீம் போல். ஒரு புட்போல் டீமில **11** பேர் சேர்ந்து ஒத்துழைச்சு விளையாடினால்தான் அதிலை வெல்லமுடியும். அதுபோலத்தான் சினிமாவிலையும். எல்லாத் தரப்பினரும் சேர்ந்து ஒத்துழைச்சு வேலை செய்தால்தான் நல்ல சினிமாவைத் தரமுடியும்.

"நாடகத்திற்குகூட களப்பயிற்சி ஒண்டு இருக்கு. இங்கே சினிமாவிற்கு அடிப்படை ஒண்டு தேவை - நல்ல தரமான படங்களைப் பார்த்துக் நாங்கள் பயிற்சி பெறவேணும் எண்டா அதை யார் நடத்துறது எண்டதிலையும் - யார் பெரியவர் யாருக்கு அதிகம் தெரியும் எண்டதிலையும் எங்கட ஆக்கள் மோதிக்கொண்டு நிக்கிறது பெரிய முரண்பாடு. இது முக்கியமான விடையம்." இறுதியாக புகலிட சினிமாவின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு செய்யவேண்டியது என்னவென்று கேட்டபோது....,

"சினிமாவின் சலக துறைகளிலும் படிக்க வேண்டியது நிறைய இருக்கு. குறிப்பாகத் தொழில்நுட்பத்துறைகளில் - பயிற்சி பெற்ற ஐரோப்பிய தொழில்நுட்பச் சினிமாக் கலைஞர்களுடன் எங்களுடைய இளைஞர்களையும் சேர்த்துப் படிக்க வைக்கவேணும்."

கமரா சுவிச் போட **10** வயதுப் பிள்ளைக்குத் தெரியுமெண்டு சொல்லுகிறது. என்னாலை ஏற்றுக்கொள்ள முடியாது. சினிமாவின் எல்லாத்துறைகளைப் பற்றியும் நாம் படிக்க வேண்டும். இண்டைக்கு தொழில்நுட்பம் வளர்ந்து கொண்டே இருக்குது. **10** வருடத்திற்கு முன்னம் நாங்கள் படிச்சது இப்பவும் சரியெண்டு சொல்லிக் கொண்டு, அதுதான் சினிமாக் கலையெண்டும் சொல்லிக்கொண்டு படமெடுத்தால் அது காலத்திற்கு ஒத்து வராது." என்றார்.

— சிவா

# "ஒரு பெண் எல்லாவிதத்திலும் சுயமரியாதையுடன் வாழவேண்டும்"

## அம்பையுடன் ஒரு நேர்முகம்

*பெண்ணியல்வாதியும் எழுத்தாளருமான 'அம்பை' அவர்கள் சமீபத்தில் பாரிசுக்கு வந்திருந்தார். மிகக் குறுகிய நேரத்தில் 'பாலத்திற்' காக அவரைச் சந்தித்தபோது....*

❑ **இன்றைக்கு தமிழகத்தை ஒரு பெண் முதல்வர் ஆட்சி செய்கின்ற நிலை இருக்கும்போது அங்கு பெண்கள் பற்றிய பார்வைகள் – சிந்தனைகள் எப்படி உள்ளது?**

❍ தமிழ்நாட்டில் பெண்கள் பல வழிகளிலும் முன்னுக்கு வந்திருப்பதாக சொல்லப்படுகிறது. ஆனால், சினிமா - ஜனரஞ்சகப் பத்திரிகைகளை எடுத்துப் பார்த்தால் பெண்கள் எவ்வளவு தூரம் அவமானப் படுத்தப்படுகின்றார்கள் என்பதனைப் புரிந்துகொள்ள முடியும்.

உடலைப் பொறுத்தவரை ஒரு பெண் எல்லா வகைகளிலும் நடமாட முடிகிறது. எந்த உடையை வேண்டுமானாலும் அணிந்துகொள்ள முடிகிறது. ஆனால்; அவளை மதிப்பீடு செய்வது எது? இதனூடுதான் நமது கலாச்சாரத்தின் தன்மையைப் புரிந்துகொள்ள முடிகிறது. தமிழ்நாட்டில் இது மிகவும் மூன்றாந்தர நிலையில் உள்ளது. ஆண்களைப் பற்றிய அளவுகோல் பல அளவுகளில் மாறினாலும், பெண்களைப் பற்றிய அளவுகோலில் பண்பாடு என்பது நிரந்தரமாகக் கருதப்படுகிறது. என்னைப் பொறுத்தவரை பண்பாடு என்பது நிரந்தரமான ஒன்றல்ல; மாறிக்கொண்டே வருவதாக நினைக்கிறேன்.

❑ **பெண்ணிலைவாதிகளை பலர் பெரும்பாலும் ஏற்றுக்கொள்வதில்லை; இதற்கான காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள்?**

❍ பெண்ணியல்வாதிகளின் முற்போக்குத்தனமான செய்கை என்னவென்றால், சரித்திரத்தை வேறு விதமாகப் படிப்பதுதான். இதில் பலருக்கு உடன்பாடே இல்லை. ஏனென்றால் அது அவர்களுடைய வாழ்க்கையை கேள்விக்குள்ளாக்குகிறது; அவர்கள் இதுவரை வாழ்ந்த விதத்தையும், சரித்திரத்தை அணுகிய விதத்தையும் பெண்ணியல்வாதிகள் கேள்விக்குள்ளாக்குகின்றனர். அதனால்தான் பெண்ணியல்வாதிகளை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. அவர்கள் நினைப்பது, உடல் ரீதியான சுதந்திரத்தையே பெண்கள் விரும்புகிறார்களென, அதாவது பல ஆண்களுடன் நெருக்கமாக இருக்கின்ற சுதந்திரத்தைத்தான் பெண்கள் விரும்புகிறார்கள் என்று. பல ஆண்களுடன் உறவு கொள்வதற்கும் பெண்ணிலைவாதத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. சாதாரண ஒரு விபச்சாரி கூட பல ஆண்களுடன் தொடர்பு கொள்கின்றாளே?

❑ **பெண்ணியல்வாதம் என்று நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?**

❍ ஒரு பெண் எந்தவித அடக்குமுறையும் இல்லாமல் வாழ்வதுதான். அதாவது ஆண்வழி சமுதாய அடக்குமுறையோ அல்லது ஒரு குறிப்பிட்ட ஆணுடைய அடக்குமுறையோ இல்லாமல் ஒரு பெண் கௌரவமான சுதந்திரத்துடன் வாழ்வதுதான் பெண்ணியல்வாதம் என நான் நினைக்கிறேன். இதை நீங்கள் ஏற்றுக்கொண்டால், முதலாவதாக குடும்பம்; குடும்பத்துக்குள் ஒரு பெண்ணியல்வாதி ஊடுருவி அதன் தன்மைகளை அதன் இயல்புகளை மாற்றுவது இதுவும் பெண்ணிலைவாதம்தான். சமுதாயத்தில் உள்ள பிரச்சனைகளை அவள் எப்படி அணுகப்போகின்றாள்? குடும்பத்தில் ஒருவராகவா அல்லது தனி நபராகவா? ஒரு மனிஷியாக நடத்தப்படுகின்ற தகுதிகள் உள்ள தனி நபராக அவள் அணுகப்படுவதும் பெண்ணியல்வாதம் தான்.

அநேகமானவர்கள் நினைப்பது, பெண்ணியல்வாதி என்றால், திருமண அமைப்புக்கு உடன்படாதவள் என்று. குடும்ப அமைப்பென்பது ஒரு பிரமாதமான அமைப்பல்ல என்பது எனது அபிப்பிராயம். யாராவது சேர்ந்து கூடி வாழ்வதும், அல்லது திருமணம் செய்துதான் சேர்ந்து வாழவேண்டுமென்பதும் அவரவர் சொந்தக் கருத்து. எமது முக்கியமான குறி இதுவல்ல. எமது மரியாதையை இழக்காமல் இருப்பதுதான். ஏனெனில் பெண்கள் பற்றிய ஆண்வழிச் சமுதாயத்தின் எல்லா மதிப்பீடுகளுமே ஒரு குறிப்பிட்ட நிலைக்கு மேல் முன்னுக்கு வர முடியாமல் அவளது உடம்பைக் குறுக்குவது. இந்தக் குறுக்கல்களை விட்டு வெளியில் வருவதுதான் பெண்ணியல்வாதம் எனக் கருதுகிறேன்.

❑ **மேற்கத்தேய நாடுகளின் பெண்ணியல்வாதக் கருத்துக்களை அப்படியே ஏற்றுக்கொண்டு பின்பற்ற வேண்டும் என நினைப்பது பற்றி...**

❍ குறிப்பிட்ட சில வகையான பெண்ணியல்வாதக் கருத்துக்கள் மேற்கத்திய நாடுகளில் இருந்து வந்ததுதான். ஆனால், அந்தக் கருத்துக்களை

**தமிழ்நாட்டில் பெண்கள் பல வழிகளிலும் முன்னுக்கு வந்திருப்பதாக சொல்லப்படுகிறது. ஆனால், சினிமா - ஜனரஞ்சகப் பத்திரிகைகளை எடுத்துப் பார்த்தால் பெண்கள் எவ்வளவு தூரம் அவமானப்படுத்தப்படுகின்றார்கள் என்பதனைப் புரிந்துகொள்ள முடியும்.**

அப்படியே நாம் ஏற்றுக்கொண்டதாக சொல்லமுடியாது.

நமது நாட்டில் சில குறிப்பிட்ட வர்க்கத்தைச் சேர்ந்த பெண்கள் சிகரெட் புகைப்பது என்பதும் பெண்ணியல்வாதத்தின் அடையாளங்கள் என நினைக்கின்றனர். அடிமட்டத்திலுள்ள பல பெண்கள் பீடி, சுருட்டு புகைக்கின்றனர் - புகையிலை போடுகின்றனர். இதையெல்லாம் அடையாளமாக ஏற்கமுடியாது. மேற்கத்தேய பெண்ணியல்வாதிகளின் அடையாளங்கள் வேறாக இருக்கலாம். ஆனால் எம்மையும் அவர்களையும் பொறுத்த வரை குறிக்கோள் என்பது ஒன்றுதான். அதாவது, எல்லாவிதமான பந்தங்களையும் உடைப்பது; ஆனால் அதனை உடைக்கும் முறைகள் வெவ்வேறானவையாக இருக்கலாம். ஓர் ஆபிரிக்க எழுத்தாளரை நோர்வேயில் சந்தித்தேன். அவர் எழுதிய கதையொன்றில் மிகவும் ஆச்சரியமான விடயம் ஒன்றிருந்தது. நைஜீரியாவில் நிறைய சமூகக் குழுக்கள் இருக்கின்றன. அதில் ஒரு குழுவின் கஷ்டம் என்னவென்றால், ஒருத்தியின் கணவன் இறந்துபோனால் அவள் மறுமணம் செய்யலாம் என்பதுதான் அவர்களது கஷ்டமாக இருக்கிறது. அக் கதையில் ஒரு பெண்; அவளது கணவன் இறந்துவிட்டான். அக் குழுவைச் சேர்ந்தவர்கள் அவளுக்கு இன்னொரு திருமணம் செய்துவைக்க முயற்சிக்கின்றனர். அதில் அவளுக்கு உடன்பாடில்லை. அவள் தன் கணவனுடன் மரிக்க ஆசைப்படுகிறாள். வெறுமனே பார்த்தால் கணவன் இறந்ததுக்காக அவளும் இறப்பது என்பது மிகவும் பிற்போக்குத்தனமானதாகவே தோன்றும். ஆனால், இதில் ஒரு குழுவின் சமூகச் சட்டதிட்டங்கள் என்பது அவளைக் கட்டுப்படுத்துகின்றன. திருமணம் பண்ணித்தான் ஆகவேண்டும் என்ற கட்டுப்பாட்டை அவள் உடைக்கின்றாள். இது நைஜீரியாவில் மிகவும் முற்போக்கான நாவலாகக் கருதப்படுகிறது.

ஆக, எந்த விதத்திலும் ஒரு பெண்ணை அது கட்டுப்படுத்துவதை உடைத்து வெளியில் வந்தால் அது சுதந்திரம்தான். ஆனால் எது சுதந்திரம் என்று யார் நினைக்கிறார்கள் என்பதைப் பொறுத்தும் அவர்களது கலாச்சாரத்தைப் பொறுத்தும் அது மாறிக்கொண்டிருக்கிறது. இதுதான் சுதந்திரம் என்று உலகம் முழுவதும் பெண்ணியல்வாதிகளால் பிரகடனப்படுத்த முடியும் என்று தோன்றவில்லை.

❑ **ஆண் – பெண் என்பதை எப்படிப் பிரித்துப் பார்க்கிறீர்கள்?**

❍ மரியம் மீன்ந் என்ற மானிடவியலாளர் ஆபிரிக்க சமூகக் குழுக்களைப் பற்றி ஒரு ஆராய்ச்சி செய்திருந்தார். அதில் ஆண்கள் நாணம் - வெட்கம் - உணர்ச்சிவசப்படுதல் போன்ற தன்மை உடையவர்களாயும் பெண்கள் அதற்கு நேர் எதிரான தன்மை உடையவர்களாயும் காணப்பட்டனர். அது அவர்கள் கலாச்சாரத்தைப் பொறுத்தவரை மாறியுள்ளது. எது ஆண்தன்மை, எது பெண்தன்மை என்பதை நாம் அறுதியிட்டுச் சொல்ல முடியாது.

நான் பெண் உடம்பில் இருப்பதால் எனக்கு தாய்மை உணர்வு இருக்க வேண்டும் என்பதை நம்பவில்லை. தாய்மையுணர்வு உள்ள ஆண்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களது உடம்புக்கும் அந்த தாய்மை உணர்வுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. ஆக, எதையுமே உடலுடன் சம்மந்தப்படுத்திப் பேசுவதில் எனக்கு உடன்பாடில்லை.

❑ **மேற்குலக பெண்ணியல்வாதச் சிந்தனைகளை அப்படியே நாம் பிரதிபலிக்கலாமா?**

❍ பலதரப்பட்ட பெண்ணியல்வாதக் குழுக்கள் இருக்கின்றன. மேற்கத்திய பெண்ணியல்வாத சிந்தனையை அப்படியே பின்பற்ற வேண்டும் என யாரும் நினைக்கவில்லை. ஆனால் அதிலுள்ள அடிப்படை வாதங்கள் சிலவற்றை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

❑ தமிழீழத்தில் ஆயுதப் போராட்டத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்கள் முன்னணி வகிக்கின்ற நிலை உண்டு. இதனூடு பெண் அடக்கு முறையின் சில கூறுகள் உடைக்கப்படுவதனையும் பார்க்கின்றோம். ஆனால், புகலிட நாடுகளில் பெண் விடுதலை எனக் கூறுகின்ற எமது பெண்கள் சிலர் குடும்ப அமைப்பைச் சிதைத்து, வக்கிரமான பாலியல் - பெரு நகரச் சீரழிவுகளுக்கு ஆளாகின்ற நிலை தோன்றுகிறதே..?

❍ பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களில் இப்படியான சீரழிவுகள் ஆரம்பமாகிவிட்டன. சில தந்தைமாரை "ஞாயிறுத் தந்தைகள்" (SUNDAYS FATHERS) என்றுதான் அழைக்கின்றார்கள். வாழ்நிலைகள் அப்படி. மனிதநேயங்கள் அருகிப் போகின்ற சீரழிவு அங்கும் வந்துவிட்டது. இயந்திரமயமான தன்மை எல்லா நகரங்களிலும் உண்டு.

❑ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நமது பெண்கள் மத்தியில் பெண் எப்படி இருக்க வேண்டும் என்பதில் ஒரு கருத்துண்டு. அக் கருத்தை உடைத்துக்கொண்டு பெண்ணிலைவாதம் பேசுபவர்கள் சொந்த வாழ்க்கையில் சீரழிந்து போன நபர்களாய் இருப்பதால் பெண்ணிலைவாதமே தவறானது என்று நமது பெண்கள் கருதும் அபாயம் உள்ளது பற்றி..

❍ அது ஒரு கடினமான விடயம். எமது வாழ்வை நாம் வாழவேண்டி உள்ளது. அதேசமயம் ஒரு வகையில் சிலபேருக்கு நாம் முன்மாதிரியாகவும் இருக்கின்றோம். அது சுலபமான விடயமல்ல. முன்மாதிரியாக இருப்பவர்கள் எச்சரிக்கையாக இல்லாதுவிடின் பெண்ணியல்வாதம் என்பதை பெண்களே தவறாகப் புரிந்துகொள்ளும் அபாயம் உள்ளது

**— சுதாமதி**

**அது ஒரு கடினமான விடயம். எமது வாழ்வை நாம் வாழவேண்டி உள்ளது. அதேசமயம் ஒரு வகையில் சில பேருக்கு நாம் முன்மாதிரியாகவும் இருக்கின்றோம். அது சுலபமான விடயமல்ல. முன்மாதிரியாக இருப்பவர்கள் எச்சரிக்கையாக இல்லாதுவிடின் பெண்ணியல்வாதம் என்பதை பெண்களே தவறாகப் புரிந்துகொள்ளும் அபாயம் உள்ளது.**

# SCS INFORMATIQUE

22, Rue de la Terrasse,
75017 Paris.
Tel: 40 53 07 89
Fax: 46 53 07 92





## HEWLETT PACKARD

**Consommables HP**

| | |
|---|---|
| Cartouche noire serie 310/320/340 | 159FTTC |
| Cartouche couleur série 300 & 500 | 219FTTC |
| Cartouche noire double capacité série 500 | 199FTTC |
| Cartouche noire pour HP600/660C | 200FTTC |
| Cartouche couleur pour HP600/660C | 230FTTC |
| Cartouche noire pour HP850C | 219FTTC |
| Toner HP4L/ML/P | 590FTTC |
| Toner HP5L | 590FTTC |



## EPSON



**Consommables EPSON**

| | |
|---|---|
| Cartouche noire Stylus 800+/1000 | 89FTTC |
| Double pack encre noire 800+/1000 | 165FTTC |
| Cartouche noire 820/Color II/IIS | 145FTTC |
| Cartouche couleur 820/Color II/IIS | 185FTTC |
| Cartouche noire pour Stylus Color/Pro/pro XL | 130FTTC |
| Cartouche couleur pour Stylus Color/Pro/pro XL | 270FTTC |
| Toner pour EPL3000 | 880FTTC |
| Toner pour EPL5200 | 1150FTTC |

## Canon

**Consommables Canon**

[illegible]





## MIRO VIDEO DC20



**6390 F TTC**

Montage vidéo professionelle EN QUALITE S-VHS
Compression Décompresssion M-JPEG sur disque dur en temps réel
Restitution de qualite professionnelle sur cassette video
hardware MJPEG sur bus PCI
Logiciel :Adobe Première 4.0 Adobe Photoshop 2.5; 3DFX

### CONFIGURATION

| | |
|---|---|
| BASIC VLB | 1.390 |
| BASIC PCI | 1.590 |
| BASIV PENTIUM | 1.940 |

### PROCESSEURS

| | |
|---|---|
| CPU AMD DX2 80 | 280 |
| CPU AMD DX4 100 | 410 |
| CPU PENTIUM 75 | 740 |
| CPU PENTIUM 100 | 1.390 |
| CPU PENTIUM 120 | 1.760 |
| CPU PENTIUM 133 | 2.220 |
| CPU PENTIUM 150 | 2.970 |
| CPU PENTIUM 166 | 4.390 |

### DISQUE DURS

| | |
|---|---|
| 540 Mo IDE | 1.080 |
| 630 Mo IDE | 1.120 |
| 820 Mo IDE | 1.220 |
| 1 Go IDE | 1.350 |
| 1,2 Go | 1.440 |
| 1,6 G0 | 1.730 |

### MEMOIRE

| | |
|---|---|
| 4 Mo 32 BITS | 390 |
| 4 Mo EDOS | 490 |
| 8 Mo 32 BITS | 790 |
| 16 Mo 32 BITS | 2.090 |

### MONITEURS

| | |
|---|---|
| ECRAN 14"SVGA P 0.28 | 1.490 |
| ECRAN 15"SVGA P 0.28 | 2.190 |
| ECRAN 17"SVGA P 0.28 | 3.790 |

### LECTEURS DE CD ROM

| | |
|---|---|
| CD ROM 4 VITESSE | 420 |
| CD ROM 6 VITESSE | 760 |

### CARTES SON

| | |
|---|---|
| SB 16 VALUE IDE | 630 |
| SB AWE 32 VALUE MCD | 1.830 |
| SB AWE 32 VALUE IDE | 990 |
| SB AWE 32 PNP | 1.590 |
| SB 32 PNP | 1.090 |

### IMPRIMANTES

| | |
|---|---|
| CANON BJ 30 | 1.390 |
| CANON BJC 210 | 1.690 |
| CANON BJC 4100 | 2.290 |
| CANON LBP 460 | 2.890 |
| HP 340 | 1.820 |
| HP 600 C | 2.590 |
| HP 850 C | 3.290 |

### LOGICIELS (UNIQUEMENT AVEC CONFIGURATION)

| | |
|---|---|
| MS DOS 6.22 | 240 |
| WINDOWS 3.11 | 370 |
| DOS & WINDOWS | 590 |
| WINDOWS 95 | 590 |

### CARTES VIDEO (OPTION)

| | |
|---|---|
| DIOMAND STEALTH 968 2Mo | 1.900 |
| DIOMAND STEALTH 64 1Mo | 870 |
| MIRO 12 PMD 1Mo | 790 |
| MIRO 12 PMD 2Mo | 790 |
| MATROX MILENIUM 2Mo | 2.190 |
| MATROX MILENIUM 4Mo | 3.290 |

### BOITIERS (OPTION)

| | |
|---|---|
| MOYEN TOUR | +250 |
| MAXI TOUR | +420 |
| MALTIMEDIA DESKTOP | +550 |

## A RETOURNER A: SCS INFORMATIQUE

155, RUE Fbg. SAINT DENIS, 75010 PARIS.

OU RECOPIIEZ CE BON SUR PAPIER LIBRE

Nom:........................................ Prénom:........................................

Adresse:........................................................................................

Ville:........................................ Code postal:........................................

Mon ordinateur ou console........................................................................

Post 60F/Transporteur 150F par colis CR80F en sus/Logiciel 30F

❑ Chèque ❑ CCP ❑ CB No:........................................................................

Date d'expiration:........................................ Signature:........................................

# அம்மாவின் முகங்கள்

"ஏறுமயில் ஏறி விளையாடும் முகமொன்றே...".. பக்கத்து அறையில் மைதிலியின் தம்பி அரவிந்த் சத்தம் போட்டுத் திருப்புகழ் பாடமாக்கிக் கொண்டிருந்தான். அவளுக்கு எரிச் சலும், கூடவே கோபமும் சேர்ந்தே வந்தன. தமிப் பாடலை டெனிஷ் மொழியில் எழுதி வைத்துக்கொண்டு அவன் தமிழையும் தேவாரத்தையும் ஒருங்கே துவம்சம் செய்துகொண்டி ருநததை மைதிலியால் இதற்கு மேலும் பொறுக்கமுடியவில்லை. அடுத்தநாள் திங்கட்கிழமை பாடசாலையில் கைய ளிக்கவேண்டிய வேலை இன்னமும் முடியவில்லை. அவளுக்கு அரவிந் மேல் வந்த எரிச்சலைவிட தனது தாயார் மங்களத்தின் மேல் ஏற்பட்ட எரிச்சல்தான் அதிகமாகவிருந்தது.

எழுதிக்கொடுத்திருந்தாள். அதற்குக் காரணம் தாய் மங்களமேதான். வந்த ஆறு வருட காலத்தில் பிள்ளைகளின் தமிழ் மொழி வளர்ச்சி சம்பந்தமா கவோ, தமது சைவ சமயம் சம்பந்த மாகவோ அதிகம் அக்கறை காட்டா திருந்த அவள் நான்கைந்து மாதங்க ளாகத் தனது பிள்ளைகளின் தமிழ், சமய விஷயங்களில் சில கண்டிப் பான நடைமுறைகளை ஆரம்பித்தி ருந்தாள். அவற்றில் ஒன்றே வாரத் துக்கு ஒரு தேவாரம் பாடமாக்கும் திட்டம். 14 வயது மைதிலிக்கு இது பிரச்சினையாக இருக்கவில்லை. 10 வயது அரவிந்துக்கு படு சிரமமாக இருந்தது. மனனம் செய்யும் சமயங் களில், இங்கு பிள்ளைகள் சர்வசாதா ரணமாகப் பயன்படுத்தும் சில டெனிஷ் வார்த்தைகளில் உரக்கத் திட்டியும் கொள்வாள். இவை கிட்டத் தட்ட கெட்ட வார்த்தைகள் என்றும் சொல்லலாம்.

இப்போதும் அவற்றில் ஒன்றைக் கூறியவாறே அரவிந் உச்சரிப்பில் உதவி கேட்டபோது மைதிலிக்கு எரிச் சலுக்கு மத்தியிலும் சிரிப்பு வரவே செய்தது. அவனுக்குச் சரியான உச்ச ரிப்பைச் சொல்லிக்கொடுத்து அனுப்பி வைத்த மைதிலியின் மனதில் சில வினாக்கள் இயல்பாகவே எழுந்தன.

..... வீட்டில் நாம் பேசும் தமிழுக் கும், எழுதப் படிக்க உபயோகிக்கும் தமிழுக்கும் ஏன் இவ்வளவு வித்தியா சம் இருந்து தொலைக்க வேண்டும்? இரண்டும் ஒன்றாக இருந்தால் தேவா ரத்தின் கருத்துக்கூட இலகுவாக விளங்குமே! விளக்கம் இருக்குமா னால் பாடம் செய்வதில் சிரமம் இருக்காதே!....



இதற்குள் பாடமாக்குவதை நிறுத்தி விட்டு மைதிலியின் அறைக்கு ஓடி வந்தான் அரவிந். 'ஞானமொழி பேசும் முகமொன்று' என்ற அடி அவனுக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுத்திருக்க வேண்டும். அவன் டென்மார்க்குக்கு நான்கு வயதில் வந்தவன். எனவே வீட்டில் பேசும் தமிழிற் கூட டெனிஷ் மொழியின் வாடைதான் அதிகமாக விருந்தது. மைதிலியோ எட்டு வயதில் வந்தவள் மேலும் பெண்பிள்ளை என்பதாலோ என்னவோ அவளு டைய தமிழ்மொழித் திறன் சிறப்பா கவே இருந்தது. அவளுடைய தமிழை டெனிஷ் மொழியினால் பாதிக்க முடியவில்லை.

அவள்தான் அரவிந்துக்கு அந்தத் திருப்புகழை டெனிஷ் மொழியில்

ஆரம்பத்தில் இதையிட்டு மைதிலி தன் தாயிடம் குறைப்பட்டுக் கொண்ட போது அவள் சொன்ன பதில் மைதி லிக்கும் திருப்தி அளிக்கவில்லை. அதெல்லாம் இப்ப விளங்கிறது கஷ் டம்!... நீங்கள் வளர்ந்து பெரிய ஆக்க ள்ான பிறகு நல்லாய் விளங்கும்!... சும்மா கேக்காமல் பாடமாக்குங்கோ!...

அம்மாவுக்கும் இந்தத் திருப்புக ழின் முழுமையான விளக்கம் சரியா

— அ. பாலமனோகரன் —

கோல்ட் என்றதும்
உங்கள் நினைவில்
நிற்கவேண்டிய
ஸ்தாபனம்

கோல்டன் ஸ்டார்

GOLDEN STAR
199, Rue du Fg. St. Denis,
75010 Paris.
Metro: La Chapelle,
Gare du Nord
Tel: 42 09 26 50
46 06 26 44
Fax: 40 05 94 87

கத் தெரியாது. அவ இப்போ பெரிய ஆள்தானே!.... அவவின்ரை சொற்படி இந்த வயதில் அம்மாவுக்குத் தேவாரம் முழுமையாக விளங்கியிருக்க வேண்டும்! என்ற நியாயமான கேள்வி மைதிலியின் மனதில் உதிக்காமல் இல்லை. துருவித் துருவிக் கேட்டு அம்மாவைத் தோல்வியை ஒப்புக்கொள்ளச் செய்வதால் அவவுக்குக் கண்மண் தெரியாத கோபம் வந்துவிடும். முளைச்சு மூண்டு இலை விடேல்லை.... அதுக்குள்ளை நியாயம் கேக்கத் தொடங்கிட்டினம்! என்று ஆரம்பித்துப் பின், எல்லாம் என்ரை தலைவிதி!... இந்தக் கேடு கெட்ட நாட்டுக்கு நாங்கள் வந்து இப்படிச் சிறுமைப்பட வேண்டிக் கிடக்கு! என அழ ஆரம்பித்து விடுவாள். இந்த அழுகையைத் தன் தாயார் ஒரு ஆயுதமாகவே பயன்படுத்தித் தனது ஆற்றாமையை மறைப்பதும், தனது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதும் மைதிலிக்கு நன்கு புரிந்த விஷயம்.

அந்தச் சமயங்களில் அவள் தன் தாயாரிடம் விளக்கங்கள் கேட்பதை நிறுத்திக்கொள்வாள். ஆனால், இப்போ சில காலமாக அவள் தனது பெற்றோருடைய பேச்சுக்களையும், செய்கைகளையும் உன்னிப்பாக அவதானிக்கவும், அவற்றையிட்டுச் சிந்திக்கவும் தலைப்பட்டிருந்தாள்.

ஏதோ அலுவலாக வெளியிற் சென்றிருந்த தந்தை சிவதாசன் வீட்டிற்குள் நுழைந்ததுமே மங்களத்திடம் கூறிய செய்தி மைதிலிக்கு கேட்கவே செய்தது.

"மங்களம்!.... உனக்கு விஷயம் தெரியுமே!.... உங்கடை ஊர் சிவனடியான் இஞ்ச வேதத்திலை சேர்ந்திட்டானாம்!...."

"உண்மையாய் சொல்லுறியளே!.... சண்டாளப் பொடியன்!... ஊரிலை அவங்கடை வீடு கூடப் புள்ளையார் கோயிலுக்குப் பக்கத்திலையல்லோ!.... அவங்கடை குடும்பம் முழுதுமே சரியான ஆசாரமான குடும்பமல்லோ!.... இவனுக்கென்ன கோதாரி வந்து வேதத்திலை போய்ச் சேர்ந்தான்?" என மிகவும் ஆதங்கப்பட்டுக்கொண்டாள் மங்களம்.

"... எங்கடை ஊர்.... சிவனடியான்..." இந்த இரண்டு வார்த்தைகளுமே மைதிலிக்கு நாலைந்து மாதங்களுக்கு முன்னர் நடந்த ஒரு சம்பவத்தை நினைவுக்குக் கொண்டு வந்தன.

சிவனடியான் ஒரு வகையில் மங்களத்துக்கு தூரத்து உறவும் கூட. அவன் மங்களத்தின் வீட்டைத் தேடிக் கொண்டு ஒருநாள் வந்திருந்தான். ஆளின் கோலத்தைப் பார்க்கவே பரிதாபகரமாக இருந்தது. டென்மார்க்குக்கு அகதி அந்தஸ்து கேட்டு வந்த அவனை இரண்டு வருடங்களாக முகாமில் வைத்திருந்துவிட்டு இப்போ திடீரென நாட்டை விட்டுப் போ என்று கடிதம் கொடுத்துவிட்டார்களாம்! சிவனடியான் வீட்டுக்கு வந்த சமயத்தில் மங்களத்தின் கணவன் வீட்டில் இருக்கவில்லை.

அவனை முதலில் கண்டதுமே அன்புடன் குசலம் விசாரித்து "ஒரு வகையில் நீர் எனக்குத் தம்பி முறை!" என்றெல்லாம் ஆதரவாய்ப் பேசிக்கொண்டிருந்த மங்களம் அவன் நாடிவந்த விஷயத்தை அறிந்தபோது பேச்சின் போக்கையே இலாவகமாக மாற்றிக்கொண்டாள். "உம்மைப் பாக்கப் பெரிய பரிதாபமாய்க் கிடக்குது தம்பி!... ஆனால் என்ரை இவரை உமக்கு அவ்வளவு வடிவாயத் தெரியாதுதானே!... இவருக்கு உதெல்லாம் புடிக்காது!.... அதோடை இப்ப சிற்றிசன் எடுக்கிறதுக்கும் போம் நிரப்பி அனுப்பி இருக்கிறார்.... நீர் கேக்கிறது போலை இஞ்சை எங்கடை வீட்டிலை, நீர் ஜெர்மனிக்கு போறதுக்கு மட்டும் நாலைஞ்சு நாளைக்குத் தங்கிறதிலை எனக்கொண்டும் பிரச்சினையில்லை... ஆனால், அவர் இதுக்குச் சம்மதிக்க மாட்டார்!..... இப்பிடிப் பொலிஸ் பிரச்சினைக்கை மாட்டுப் பட்டால் சிற்றிசன் கிடைக்காதாம்! நான் என்ன செய்ய?" எனக் கையைப் பிசைந்தாள்.

இதையெல்லாம் மௌனமாக கவனித்துக்கொண்டிருந்த மைதிலிக்கு மனதில் அச்சமயம் ஒரு நெருடல் ஏற்பட்டிருந்தது. சிவனடியான் தங்கள் வீட்டில் சில நாட்கள் தங்குவதற்கு அப்பா மறுப்புச் சொல்வார் என அம்மா சொல்வது உண்மையல்ல என்பதை அவளால் உணரக்கூடியதாக இருந்தது. அதேசமயம், இந்த உண்மை சிவனடியானுக்குத் தெளிவாகத் தெரிகின்றது என்பதையும் தன் தாய் அறிவாள் என்ற விஷயத்தையும் மைதிலியினால் உணர முடிந்தது. சிவனடியானுடைய முகத்தில் தெரிந்த கலவரம், கவலை என்பன

அந்தப் பிஞ்சு மனதில் தன்னிச்சை யற்ற கருணையைச் சுரக்க வைத்தது. அந்த உணர்வுக்கும், தன் தாயின் இயல்புபற்றிய மனதில் தோன்றிய அபிப்பிராயத்துக்கும் இடையே முரண்பாடு தோன்றவே அவள் மெல்ல எழுந்து தனது அறைக்குச் சென்றுவிட்டிருந்தாள்.

இப்போது தனது தாயும் தந்தையும் சிவனடியானுடைய மதமாற்றத்தைக் கண்டித்து விமரிசிக்கும் வகையில் பேசிக்கொண்டிருப்பதை மேலும் கேட்டுக்கொண்டிருக்க விருப்பமின்றி, மைதிலி தன் பாடத்தில் கவனம் செலுத்த முயன்றாள்.

.... கூறும் அடியார்கள் வினை தீர்த்த முகமொன்று.... தம்பி அரவிந்தின் டெனிஷ்தமிழ் மைதிலியின் செவிகளைத் தாக்கியது.

வரவேற்பறையில் தொலைபேசி கிணுகிணுத்தது. வகுப்புத் தோழி கிறிஸ்ரினா போன் பண்ணுவதாகச் சொல்லியிருந்தாளே.... அவளாக இருக்குமோ?....

அம்மாதான் போனை எடுத்தாள்.

"ஹலோ!.... ஓம்?.... கந்தவனம் மாமாவே!.... எப்பிடி இருக்கிறியள்?... கனகாலமாய் போன்கூட எடுக்கேல்லை!"

"...."

"இருக்கிறம்!.... வேலையும் அதுகுமாய் காலம் போகுது!.... இண்டைக்கு ஞாயிறுதானே!.... ஆறுதலாய் இருக்கிறம்.... ஓமோம்!.... இவரும் இஞ்சை பக்கத்திலைதான் இருக்கிறார்.. ம்ம்.... சொல்லுங்கோ!"

அம்மா கனிவான குரலில் கேட்டாள். அதன்பின் சற்றுநேரம் அவளின் குரல் கேட்கவில்லை. மறுமுனையில் கந்தவனம் மாமாதான் பேசிக்கொண்டிருந்தார். திடீரென மங்களத்தின் குரல் உயர்ந்து ஒலித்தது.

"மெய்தானே!... ஆர் உங்கடை இளைய மோன் குலமோ?... எங்கை இது கொழும்பிலையே நடந்தது?.... அட கடவுளே!.. இப்ப என்ன செய்யப் போறியள் மாமா?... சிங்களப் பொலிஸ்காரங்கடை கையிலை அம்பிட்டால் பிரச்சினைதானே!"

பின்பு தொடர்ந்த இடைவெளிக்குப் பின்னர் அம்மாவின் கனிவான குரல் மெல்ல மாற்றமடைந்து, ஏதோவோர் கோரிக்கையை நிராகரிக்க ஆயத்தமாகும் தொனிக்கு வந்து கொண்டிருப்பதை மைதிலி உணர்ந்தாள். அவள் நினைத்ததை அம்மாவினுடைய வார்த்தைகள் உறுதி செய்தன.

"உங்களுக்கு எங்கடை நிலைமை வடிவாய்த் தெரியுந்தானே மாமா!... வீட்டு வாடகை, கார் கட்டுக் காசு, சீட்டுக் காசு எல்லாம் கட்டி முடிய மாதக் கடைசியிலை சும்மா உருளைக்கிழங்கு, பருப்போடைதான் இருக்கிறம்.... ஆரிட்டையும் வட்டிக்குக் கேட்டுப் பாருங்கோவன்!..."

"...."

"உங்களுக்கு இந்த நேரத்திலை உதவி செய்ய எங்களுக்கும் விருப்பந்தான்.... இவர் அந்தக் காலம் டென்மார்க்குக்கு வாறதுக்கு நீங்கள் செய்த உதவியை எங்களாலை எப்பிடி மறக்க முடியும்!... ஆனால், இப்ப நாங்கள் என்னத்தைச் செய்ய முடியும்! எங்கடை நிலை அப்பிடி!"

அம்மா பரிதாபம் மேலிடும் மெலிதான குரலில் தங்களது இயலாமையைத் தெரிவித்துக்கொண்டிருந்தாள்.


... ஈசனுடன் ஞானமொழி பேசும் முகமொன்றே.... தம்பி அரவிந்தின் திருப்புகழ் மைதிலியின் காதுகளை மறுபடியும் குடைந்தது. அவளால் பாடத்தில் கவனம் செலுத்த முடியவில்லை. எழுந்து சமையலறைக்குச் சென்று ஜூஸ் பருகிக்கொண்டிருந்த போது, வாசற் கதவு மணி ஒலித்தது.

"அட!... வாருங்கோ... வாருங்கோ!.... என்ன கனகாலமாய் இந்தப் பக்கம் காணேல்லை!..." அப்பாதான் ஆர்ப்பாட்டமாய் வரவேற்றுக்கொண்டிருந்தார்.

"இப்ப நான் வான் ஒண்டு எடுத்திட்டன்!.... அதாலை எல்லா இடங்களுக்கும் போய் சாமான் குடுக்கக்கூடியதாய் இருக்கு!.. சிங்கப்பூர் போய் வாறதும் இந்த அலைச்சலுமாய் இருந்தபடியாலை இந்தப் பக்கம் கனகாலமாய் வரேலாமல் போச்சுது!"

மைதிலி வரவேற்பறைக்கு வந்த போது, வந்தவர் கொண்டு வந்திருந்த பெரிய பெட்டியைத் திறந்து கடை பரப்பிக்கொண்டிருந்தார். மங்களமோ ஆர்வமும் ஆசையும் மிக்கவளாகப் பட்டுச்சேலைகளையும், நவீனபாணி உடைகளையும் எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கவனம் குறிப்பாக அங்கிருந்த நகைகளில்தான் சென்றது. திருப்புகழ் பாடிக் களைத்துப்போன அரவிந்தும் இதற்குள் அங்கு வந்துவிட்டான்.

இன்னமும் ஐந்தாறு மாதங்களில் இந்த வீட்டில் மங்கல வைபவம் ஒன்று நடக்கும் என்பதை உணர்ந்து கொண்ட வியாபாரியார் அதற்கேற்ற வகையில் ஒட்டியாணம், மயிர்மாட்டி என்ற வகையாறாக்களை எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தார்.



நகைகள், சேலைகள் முதலியவற்றைத் தேர்ந்தெடுத்து வைத்துக்கொண்டு கணக்குப் பார்த்ததில் அத்தனைக்கும் விலை 30 ஆயிரம் குறோண்களை எட்டியது. பேரம்பேசி ஒரு கணிசமான தொகையையாவது குறைத்தாலே மங்களம் போன்றவர்களுக்கு மனசாரத் திருப்தி ஏற்படும் என்ற பரகசியத்தை நன்கு தெரிந்திருந்த வியாபாரி, முற்பாதுகாப்பாக பேரத்தில் குறைக்கப்படலாம் எனத் தான் அனுமானித்த தொகை வீதத்தை, முதலில் சொன்ன விலைகளுடன் சேர்த்தே சொல்லியிருந்தாலும், மங்களம் கேட்ட விலைகளுக்கு இணங்க மிகவும் சிரமப்பட்டுக்கொண்டார். இறுதியில் தனது குரலைத் தாழ்த்தி, "இந்த விலை உங்களுக்கு எண்டபடியால்தான்!.... தயவுசெய்து மற்ற ஆக்களுக்குச் சொல்லிப்போடாதையுங்கோ!" எனக் குழைந்தார்.

அம்மா வியாபாரி மாமாவின் பேச்சை நம்புவது போலவும், நம்பாமல் இருப்பது போலவும் இருப்பதை மைதிலி கவனித்துக்கொண்டாள். இந்த விஷயத்தில் அம்மாவையிட்டுப் அவர் பயப்படத்தேவையில்லையே எனவும் அவள் தனக்குள் எண்ணிக் கொண்டாள். தான் வாங்கும் இப்படியான பொருட்களுக்கு கொடுத்த விலையை விட சற்று அதிகமான ஒரு தொகையையே அவள் மற்றப் பெண்களுக்குக் கூறுவதைப் பல சமயங்


பாரிசில்
அனைத்து மளிகைப்
பொருட்களுக்கும்
Horlicks
NOURISHING FOOD DRINK
FULL OF VITAL NUTRIENTS
காயத்திரி
GAYATHIRI
210, Rue Fg. St. Denis, 75010 Paris,
Tel: 42 09 22 43
Metro: La Chapelle / Gare du Nord

களில் மைதில் அவதானித்திருந்தாள்.

பொய் சொல்லக் கூடாது!... கள வெடுக்கக்கூடாது!.... நல்ல பிள்ளை யாய் இருக்கோணும்!.... என்று தங்க ளுக்கு அடிக்கடி புத்திமதி சொல்லும் அம்மா ஏன் இந்த விஷயத்தில் இப் படி....? என அவள் நினைத்ததுண்டு.

வியாபாரம் இரு பகுதியினருக்கும் திருப்திகரமாக முடிந்த சமயத்தில், வந்தவர் "இங்கை பக்கத்திலை வேறை ஆரும் எங்கடை ஆக்கள் இல்லையே?" எனக் கேட்டார். மங்களம் அவரு டைய நோக்கத்தை உடனடியாகப் புரிந்தவளாய் "எங்கடை அயலுக்கை ஒரேயொரு தமிழ்க் குடும்பந்தான்!.... அதுகும் அந்தப் பிள்ளை சுதா கலியாணமாகி வந்து இப்ப அஞ்சாறு மாசந்தான்!.... நான் ரெலிபோன் பண்ணிக் கூப்பிடுறன்!.... அருமை யான பிள்ளை!.... புருசன் கணேசுக்கு இண்டைக்குப் பகல் வேலை!" என்று சொல்லிவிட்டு சுதா வீட்டுக்குப் போன் செய்தாள் மங்களம்.

சுதா தங்கள் வீட்டுக்கு வருகின் றாள் என்ற அறிந்ததுமே மைதிலியின் மனது உற்சாகமடைந்தது. தன் வய தொத்த தமிழ்ப் பெண்களுடன் அதி கம் நெருங்கிப் பழக வாய்ப்பில்லா திருந்த மைதிலிக்கு 22 வயதான சுதா வின் அன்பும், தோழமையும் ஒரு வரப்பிரசாதமாக இருந்தன. மேலும், சுதா இயல்பாகவே பண்பும், நிதான மும், யதார்த்தமான சிந்தனையும் கொண்டிருந்ததால் அவளுடன் பேசு வதும், பழகுவதும், ஒன்றுக்கொன்று முரண்படப் பேசும் அம்மாவுடன் பேசுவதைவிட இலகுவாக இருந்தது.

சுதா வந்து, பெண்களுக்கே இயல் பான ஆர்வத்துடன் துணிமணிகளை யும் ஆபரணங்களையும் பார்த்தாலும் அவளுக்கு வாங்கும் எண்ணமில்லை.

பார்க்காமல் இருக்கமுடியவில்லை.

"என்னட்டை ஓரளவு எல்லாம் இருக்குத்தானே!.... அதோடை இதுகளை வாங்கி இஞ்சை டென்மார்க்கிலை எத்தனை முறை பாவிக்க முடியும்?... போட்டுக்கொண்டு போறதுக்கு இங்கை என்ன கோயில் குளமா இருக்குது!" எனச் சிரித்தாள் சுதா.

விசர்ப் பெட்டை! என மனதுக்குள் நினைத்துக்கொண்டாள் மங்களம்.

சற்று நேரத்தின் பின்னர் சுதா வீட்டுக்குப் புறப்பட்டபோது, மைதிலி யும் தாயிடம் அனுமதி பெற்றுக் கொண்டு சுதாவுடன் கூடவே புறப் பட்டாள். எவரையுமே கவரக்கூடிய சுதாவின் இனிய பண்புகள் மங்களத் தையும் அவள்மீது மதிப்பு வைக்கச் செய்திருந்தன. எனவே, மைதிலி சுதா வுடன் நெருங்கிப் பழகுவதை அவள் மனதார வரவேற்றாள்.

சுதாவின் வீட்டுக்கு நடந்து வரும் வழியிலேயே பேச ஆரம்பித்தாள் மைதிலி. "சுதா அக்கா!... ஏன் நீங்கள் ஒரு சாறிகூட வேண்டேல்லை?... கணேசு மாமாவும் எங்கடை அப்பா வைப் போலத்தானே வேலை செய்யி றார்?... அவர் காசு தரமாட்டாரோ?..."

மைதிலியின் மனத்திறந்த கேள்வி சுதாவுக்கு அவள்மேல் மதிப்பை அதி கமாக்கியது. "வடிவான சாறியெண் டால் எந்த பொம்பிள்ளைக்குதான் ஆசை இருக்காது!... கணேசு மாமா இண்டைக்கு வீட்டிலை நிண்டிருந் தால் கட்டாயம் இரண்டு மூண்டு சாறியெண்டாலும் வேண்டப் பண் ணியிருப்பார்.... அவர் இல்லாதது நல்லதாய்ப் போச்சு!" மைதிலி புன்ன கையுடன் சொன்னாள்.

"உங்களுக்கு விருப்பம் இருந்தும், வசதி இருந்தும் ஏன் வேண்டாமல் விட்டனீங்கள் சுதா அக்கா?"

"விருப்பம், வசதி எண்டதுகளை விட தேவை எண்டொரு விஷயம் இருக்குது மைதிலி! அதுதான் முக்கி யம்!... அங்கை இப்ப எங்கடை தமிழீ ழத்திலை எத்தினை ஆயிரம் சனம் சாப்பாடில்லாமல், இருக்க ஒரு ஆன இடமில்லாமல் கஷ்டப்படுதுகள் எண்டு உனக்குத் தெரியுந்தானே! இந்தக் கஷ்டங்களுக்குள்ளை குண்டு வீச்சும், ஷெல்லடியும் அங்கை ஒவ்வொரு நாளும் நடக்குது!.... இந்த நேரம் நான் எனக்குச் சாறியும் நகையுமாய் ஆடம் பரப் பொருட்கள் வாங்குறதோ அல் லது அங்கையுள்ள எங்கடை சனங்க ளுக்கு எங்களாலை முடியுமான உத வியைச் செய்யிறதோ எது நல்லது எண்டு நீ நினைக்கிறாய் மைதிலி?" மென்மையான குரலில் நிதானமாகக் கேட்டாள் சுதா.

மைதிலி உடனடியாகப் பதில் எதுவுமே சொல்லவில்லை. அவள் சுதாவை பார்த்தாள். ஆனால் அந்தப் பார்வையிலே பிரமிப்பு, மதிப்பு, ஒரு ஆராதிப்பு இவை யாவும் சேர்ந்து காணப்பட்டன.

மௌனமாகவே தன் கையைப் பிடித்தவாறு நடந்துவரும் மைதிலியை யும் அவள் கண்களில் பிரதிபலித்த பலநூறு உணர்வுகளையும் சுதாவி னால் ஓரளவு புரிந்து கொள்ள முடிந்தது. கன்னிமையின் தலைவாச லிலே நிற்கும் இந்த இளங்குமரப் பருவத்தில், உள்ளத்தில் எழும் இனம் புரியாத குழப்பங்களையும், வினாக்க ளையும் அவளும் கடந்து வந்தவள் தானே! ஆனால் அங்குள்ள சூழலில், தோழிகளின் நெருக்கம், சமுதாயத் தின் எழுதா விதிகள், பிறரின் அனு பவங்கள், கற்றுக் கொண்டிருந்த கல்வி, இவை யாவும் ஒரு பாதுகாப் புணர்வையும், வழிகாட்டலையும் அளித்திருந்தன. டென்மார்க் சூழலில் அவற்றையெல்லாம் எதிர்பார்க்க முடியுமா எனத் தன்னுள் சிந்தித்த சுதாவை மைதிலியின் அமைதியான அந்தக் கூற்று திகைக்க வைத்தது.

"எனக்கு வர வர அம்மாவிலை விரும்பமில்லாமல் போகுது சுதா அக்கா!"

"ஏன் மைதிலி அப்பிடிச் சொல்லு றியள்?" சுதா ஆதரவு மேலிடக் கேட் டபோது, மைதிலி உடன் எதுவுமே கூறாது மௌனமாக வந்துகொண்டி ருந்தாள். அவளுடைய விழிகள் கலங் கியிருந்தன.

சுதா மைதிலியை உடனடியாக விளக்கம் கேட்கவில்லை.

சுதாவின் வீட்டிற்கு வந்தபின் மைதிலி அந்தப் பேச்சை மறுபடியயும் எடுத்தாள். "அம்மா, அப்பா எங்க ளுக்குச் சொல்லுறது ஒண்டு... தாங் கள் செய்யிறது வேறை!.... இதை என் னாலை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்குது சுதா அக்கா!"

எதற்காக மைதிலி இவ்வாறு கூறு கின்றாள் என்பதை அறிய அவளு டன் பேச்சுக் கொடுத்தபோது தன் மனதில் உள்ளவற்றை மளமளவெ னக் கொட்ட ஆரம்பித்தாள் மைதிலி.

"இண்டைக்கு கந்தவனம் மாமா போன் பண்ணி கொழும்பிலை தன்ரை இளைய மகனை பொலிஸ் பிடிச்சு வைச்சிருக்கிறாங்களாம்.... அவங்களுக்கு காசு குடுக்கவேணும் எண்டு கடன் கேட்டபோது அம்மா தங்களிட்டை ஒரு காசும் இல்லை யெண்டு சொல்லிப் போட்டா!... பிறகு, உடனை 30 ஆயிரத்துக்கு சாறி, நகையெல்லாம் வாங்கினா.... என்னத்

துக்கு கந்தவனம் மாமாவுக்கு காசு இல்லையெண்டு பொய் சொன்னவ?.... அவர்தானே முதலில அப்பா டென் மார்க்குக்கு டென்மார்க்குக்கு வர காசு உதவி செய்தவர்!... இந்த நேரத் தில குடுத்து உதவியிருக்கிலாந்தனே!... இப்பிடித்தான் நாலைஞ்சு மாதத் துக்கு முந்தி சிவனடியான் எண்டு அம்மாவின்ரை தூரத்துச் சொந்தக்கா ரர் உதவி கேட்ட்போதும் அம்மா ஏதோ சொல்லி இல்லையெண்டிட்டா!" என்று அந்தச் சம்பவத்தையும் விபரித் தாள் மைதிலி.



இடையில் குறுக்கிடாமல் மௌன மாகக் கேட்டுக்கொண்டே இருந்தாள் சுதா. பின்னர் தனது கருத்தை அமை தியாகச் சொல்ல ஆரம்பித்தாள்.

"மைதிலி! உன்னுடைய அம்மாவை நாங்கள் முழுமையாகக் குறை சொல லக்கூடாது! அவ ஒரு சின்னக் கிரா மத்திலை, அதிகம் வசதியில்லாத ஒரு குடும்பத்திலை பிறந்து வளர்ந்தவ எண்டதை நீ மறக்கக்கூடாது! அவ பிறந்து வளர்ந்த சூழலும் காலமும் வேற! சிக்கனமாக இருந்து சேமித்து வைத்தால்தான் பிற்காலத்திலை கஷ் டப்படாமல் வாழலாம், பிள்ளை குட்டி சந்தோஷமாய் வாழும் என்ற எண் ணம் அங்கு சிறுவயதிலிருந்தே ஊட்டி வளர்க்கப்படுகின்றது. அதோடை அவ ஒரு சாதாரணப் பொம்பிளைதான்.... பெண் என்றாலே அவளுக்குள் ஒரு தாய்மை உணர்வு இளம் வயதில் இருந்தே செயற்பட்டுக்கொண்டிருக் கும். ஒரு தாய் தனது பிள்ளைகளுக் காக உயிரையே கொடுப்பாள்!... தனது பிள்ளை, தனது கணவன், தனது குடும்பம் என அவளுக்கிருக் கும். 'என்னுடைய உடமை' என்ற உணர்வும், தன்னுடையவற்றை என்ன விலைகொடுத்தேனும் பாதுகாத்துப் பராமரித்துப் போற்ற வேண்டும் என்ற இயல்பான உத்வேகமும் அவ ளுக்குள் எப்போதுமே செயற்பட்டுக் கொண்டிருக்கும். அதனால்தான் அம் மாவும் தாம் சேர்த்து வைத்த பணத் தைக் தூக்கிக்கொடுத்து அது தற்செய லாகத் திரும்பிவராமற் போனால், என்ற உள்மனத்தின் பயம் காரணமா கவே அவ தங்களிடம் பணம் இல்லை யென்று கூறியிருக்கலாம் ... இல் லையே!"

"அதுக்கேன் ஒளிச்சு மறைப்பான்?.... உள்ளதை உள்ளபடி சொல்லலாந் தானே!"

"பணத்தைக் கொடுக்காமல் இருப் பதற்கான தனது பயத்தில் அதிகம் நியாயம் இல்லையென உன்னுடைய அம்மா உணர்ந்தபடியால்தான் அப்ப டிச் சொல்லியிருக்கிறார்!"

"சரி!... பரவாயில்லை.... சிவனடி யான் மாமாவுக்கு அந்த நேரம் அம்மா உதவிசெய்ய விரும்பேல்லை!.... அப்பாவைச் சாட்டுச் சொல்லி தட் டிக் கழிச்சுப் போட்டா!.... இப்ப அவர் சமயம் மாறினால் அதைப்பற்றி இவையள் ஏன் பிழை சொல்லுவான்?... கஷ்ட துன்ப நேரத்திலை வசதி இருந்தும் உதவி செய்யாத ஆக்கள் பிறகு என்ன முறையிலை அவருடைய சொந்த விஷயத்தை எடுத்துக் கதைக்க முடியும்?.... இவையளைப் போல ஆக்கள் ஒதுக்கி நடத்திறபடியால்தான் அவர் எங்கையோ தனக்கு அன்பும் உதவியும் கிடைக்கிற இடத்தில சேர்ந் திருக்கிறார் போலும்!"

மைதிலி சொன்னவற்றைக் கேட்டு சுதா ஒரு கணம் மலைத்துப் போனாள்.

அவளுடைய மனம், மைதிலி சொன்ன உண்மையையே சுற்றிச் சுற்றி வந்தது. அந்தக் காலத்தில், சம யத்தின் பெயரினாலே, உயர் சைவ வேளாளர் பலர், குறிப்பிட்ட சில தொழில்களைச் செய்யும் மக்கள் குழு வினரைத் தாழ்த்தி நடத்தியதன் கார ணமாகத்தான் அவர்களில் பலர் கிறிஸ்தவத்தைத் தழுவிக் கொண்ட னர் அல்லவா! இங்கு இடம்பெறும் மதமாற்றத்துக்கு ஒரு காரணமாக இருப்பதும் அதே தன்மையிலான ஒதுக்கல் அல்லவா!

சிங்கள பேரினவாதிகளால் இன ஒடுக்கலும், இன அழிப்பும் நிகழ்வதைக் காரணம் காட்டி மேற்கு நாடுகளில் தஞ்சம் புகுந்து வசதியாக வாழ்க்கை நடத்தும் எம்மவர்கள் தமக்குள் இப் படியோர் ஒதுக்கலைக் கடைப்பிடிப் பது கேவலம் அல்லவா! அது எந்த வகையில் நியாயமாகும்?


இங்கு, ஐரோப்பிய சமூகம், பெரும் பாலும் எம்மைத் தமக்குச் சரிசமமாக ஏற்று நடத்தவில்லை... ஒரு சிலர் எமது இருப்பை வேண்டா வெறுப் பாகப் பொறுத்துக்கொள்கின்றனர்.... உண்மையைச் சொன்னால், வெறுத்து ஒதுக்கப் படுகின்றோம்! இந்த நிலை எப்போதுமே மாறப் போவதில்லை என்பது உண்மைதான்..... அதே சம யம், இங்கே எமது தமிழர் இந்த உண்மை நிலையை உணர்ந்து ஒற்று மையாக, பரஸ்பரம் ஒருவருக்கொரு வர் உதவி வாழ்கின்றனரா? தமது இன மக்களின் தேவைகளுக்கு உதவ முன்வராமல், தம்து செல்வச் செழிப்பை ஆடம்பரமாகப் பறை சாற்றுவதுபோல் வாழ்வதனாலும், சிலரை இளக்காரமாக நடத்துவதா னாலும்தான், பாதிக்கப்பட்டவர்கள் மைதிலி சொல்வது போன்று, அன் பும் ஆதரவும் கிடைக்கும் இடத்திற்குச் செல்வது இயல்பாக நடக்கக்கூடிய காரியமல்லவா?

தானும் தன் குடும்பமும் சிறப் பாக வாழ்ந்தால் மட்டும் போதும் என்றெண்ணி வாழ்ந்தாலும் பரவா யில்லை! சகோதர தமிழரை இழிவு படுத்திப் பேசுவதும், அவர்களின் நிறைகளை விட்டு குறைகளை மட் டுமே தூக்கிப் பிடிப்பதும், அவர்க ளின் நலத்துக்குக் கெடுத்தல் செய்வ துமாக இருந்தால், எப்படித்தான் எமது இனம், தனது மொழி, தனது கலாச்சாரம் என்று வெறும் வாய்ப் பெருமை மட்டும் பேசும் விஷயங்க ளைப் பாதுகாக்க முடியும்?.... வளர்க்க முடியும்?

சுதாவுக்கு, இச்சிறு பெண் மைதிலி இங்கு வாழும் ஆயிரக்கணக்கான தமிழ்ப் பிள்ளைகளின் ஏகோபித்த பிரதிநிதியாகத் தெரிந்தாள். எழுதப் படாத கற்பலகை போன்ற, களங்க மற்ற, புத்தம் புதிதான இந்தப் பிஞ்சு நெஞ்சங்களில் தினம் தினம் ஆழமா கப் பதிவது அவர்களுடைய பெற் றோர், உற்றோரின் பழக்க வழக்கங் களும், பண்பாடுகளும் அல்லவா?

இவர்கள் இன்று எமது தமிழீழத் தில் நடப்பவற்றை அறிந்து பின்னரா வது, உணர்ந்து, திருந்தி நடப்பார் களா? என்ற கேள்வி சுதாவின் நெஞ் சில் கேட்டுக் கொண்டே இருந்தது.

★★



# செர்னோபில் அணு உலை வெடிப்பு

## ஆயிற்று ஆண்டுகள் பத்து...

**வி**ஞ்ஞானம் மனித குலத்தின் முன்னேற்றத்திற்கு அளவற்ற உதவியைச் செய்திருப்பது எவ்வாறு மறக்க முடியாததோ, அவ்வாறு அது சில பாதகமான விளைவுகளையும் உண்டாக்கியிருக்கின்றது என்பதும் மறுக்க முடியாது.

இருபதாம் நூற்றாண்டின் மகத்தான கண்டு பிடிப்பான அணு சக்தியானது மனித இனத்துக்கு மாபெரும் பேருதவி புரிந்திருந்தாலும் கூட இரண்டாம் உலக யுத்தத்தில் மனித இனத்திற்கு பெரும் பேரழிவையும் ஏற்படுத்தியது.

இரண்டாம் உலக யுத்தத்தின் கசப்பான அனுபவங்களின் பின் விஞ்ஞான வளர்ச்சி பெற்ற வல்லரசுகள், அணுசக்தியை ஆக்க பூர்வமான நடவடிக்கைக்கு பயன்படுத்தப் போவதாக கூறி வந்தன. முன்னாள் சோவியத் யூனியனும், அனைத்து மேற்குலக நாடுகளும் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு அணுசக்தியை பயன்படுத்தத் தொடங்கின.

*1986*-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் *27*-ம் திகதி சனிக்கிழமை அதிகாலையில் சர்வதேசச் செய்தி நிறுவனங்களுக்கு சோவியத் யூனியன் தெரிவித்த ஒரு செய்தி உலகமெங்கும் பரபரப்பை உண்டாக்கியது.

சோவியத் யூனியனின் ஒரு பகுதியாக இருந்த உக்ரேன் நாட்டிலுள்ள அணு மின் நிலையத்தில் ஒரு சிறு விபத்து ஏற்பட்டு விட்டது என்பதே அந்தச் செய்தியாகும்.

இந்த விபத்துப் பற்றி அறிவித்த சோவியத் யூனியன் இது ஒரு சிறு விபத்தே என்றும் அதில் இரண்டு பேர்கள் மட்டுமே இறந்து 197 பேர் சிறுகாயமடைந்தனர் என்றும் அணு உலையில் ஏற்பட்ட வெடிப்பு சரிசெய்யப்பட்டு விட்டதென்றும் தெரிவித்தது.

ஆனால் உள்ளூர் வாசிகளின் கூற்றின்படி 80 பேர் இறந்து 2000 பேர் காயமடைந்தனர் எனத் தெரிய வந்தது. விபத்து நடந்த ஒரு சில மணி நேரத்துக்குள் சோவியத் யூனியனின் விசேட படைப் பிரிவினர் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டு விபத்துக்குள்ளான அணு உலையைச் சுற்றி 30 கிலோ மீட்டர் சுற்றுவட்டாரத்தில் வசித்த மக்கள் உடனடியாக அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர். உடுத்த உடுப்பைத் தவிர மற்ற எந்தப் பொருட்களையும் அவர்கள் தம்வசம் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. காரணம் அந்தப் பொருட்களிலெல்லாம் அணுக் கதிர்வீச்சுத் தாக்கம் ஏற்பட்டிருந்தது.

இந்த அணு உலை வெடிப்பினால் இவ்வாறு உடுத்த உடையோடு வெளியேற்றப்பட்ட மக்களின் தொகை 4 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் ஏராளமானவர்களுக்கு கதிர் வீச்சு பாதிப்பினால் "தைரொயிட்" எனும் வகைப்புற்று நோய் ஏற்பட்டுள்ளது. ஏராளமான குழந்தைகள் அங்கவீனர்களாகப் பிறந்துள்ளன. கடந்த பத்து வருட காலத்தில் 2000 பேர் கதிர் வீச்சு கசிவினால் ஏற்பட்ட பல்வேறு நோய்களினால் இறந்துள்ளார்கள். பல்லாயிரக்கணக்கானவர்கள் நரம்புத் தளர்ச்சி மார்பு நோய் கண்பார்வை குறைவு என்பவற்றினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதைவிட இந்தப் பகுதிக்கு வெளியேயுள்ள 2225 கிராமங்கள் சிறு நகரங்களைச் சேர்ந்த எட்டு இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் குறைந்த கதிர் வீச்சு அச்சுறுத்தலுக்கு உள்ளாகிய நிலையிலும் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். செர்னோபில் பிரதேசத்தில் 1440 சதுர கிலோமீட்டர் விவசாய நிலமும் 4920 சதுர கிலோ மீட்டர் காட்டு நிலமும் கதிர் வீச்சு தாக்கத்திற்கு உட்பட்டது என அறிவிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு தடைவிதிக்கப்பட்டது.

அப் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்கு போதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. அவர்கள் இப்போதும் தொழில் வாய்ப்பற்றவர்களாகவே உள்ளனர்.

சோவியத் யூனியன் உடைவிற்குப் பின் உக்ரேன் தனிநாடாகியதும் செர்னோபில் மக்களில் ஒரு பகுதியினர், அகதி முகாம்களில் வாழ்வதை விட கதிர் வீச்சுத் தாக்கமுள்ள தங்கள் வீடுகளில் வாழ்வு மேல் என்று எண்ணி தங்கள் பழைய வீடுகளுக்குத் திரும்பத் தொடங்கினர்.

புதிய உக்கிரேன் அரசு உலக சுகாதார நிறுவனம், ஐ.நா சபை போன்றவற்றின் உதவியுடன் அந்தப் பழைய கதிர் வீச்சுத் தாக்கமுள்ள வீடுகளையெல்லாம் இடித்துத் தள்ளி அப்புறப்படுத்திவிட்டு, புதிய வீடுகளை அமைத்து அந்த மக்களை அங்கே குடியேற்றும் முயற்சியை மேற்கொண்டுள்ளது. அத்தோடு சர்வதேச உதவியுடன் அங்கே இருக்கும் அணு உலையில் இன்னுமொரு விபத்து ஏற்படாமல் தடுக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. 2004 ஆண்டில் இவ் அணு உலையை மூடி விடவும் உக்கிரேன் அரசு முடிவு செய்துள்ளது.

**பண்ணையார்**

# காற்றுக்கு வந்த சோகம்

சு. வில்வரெத்தினத்தின் ('காற்றுவெளி கிராம'த்திலிருந்து)

மூழுவியளத்துக்கு
ஒரு மனுவ்றியாச் சூனியத்தைக் கண்டு
சூரியனே திகைத்துப் போன காலையிலிருந்து
இப்படித்தான்
உயிர்ப்பிழந்து விறைத்த கட்டையெனக்
கிடக்கிறது இக்கிராமம்.

கிராமத்தின் கொல்லைப் புறமாய்
உறங்கிய காற்று
சோம்பல் முறித்த படியே
எழும்பி மெல்ல வருகின்றது.

வெறிச்சோடிய புழுதித் தெரு,
குழம்பிக் கிடக்கும் சுவடுகள் மேலாய்
சப்பாத்துக் கால்களின் அழுத்தம்,
காற்றுக்கு குழப்பமாயிருந்தது.

முற்றங்கள் பெருக்கும் ஓசையும்
பாத்திரங்களோடு தேய்படும் வளையல் ஒலி
ஆச்சி, அப்பு, அம்மோயென
அன்பொழுகும் குரல்கள் –
ஒன்றையுமே காணோம்

என்ன நடந்தது?
ஏனிந்தக் கிராமம் குரலிழந்து போயிற்று
திகைத்து நின்றது காற்று
தேரடியில் துயின்ற சிறுவன்
திருவிழாச் சந்தடி கலைந்திருந்தமை கண்டு
மலங்க விழித்தது போல

திறந்த வாசலினூடே வீட்டுச் சொந்தக்காரரென
சுதந்திரமாய் நுழைகிற காற்று
இப்போ தயங்கியது.
தயங்கித் தயங்கி மெல்ல
ஓர் வீட்டு வாசலை எட்டிப் பார்த்தது.
ஆளரவமே இல்லை.

இன்னுமொரு வாசல்; இல்லை.
இன்னும் ஒன்று;இல்லை.
இன்னும் ஒன்றை எட்டிப் பார்க்கையில்
இழுத்துப் பறிக்கும் மூச்சின் ஓசை.
சற்றே கிட்டப் போனது.

வாசற் படியிலே
வழுக்கிக் கிடந்தது ஓர் முதுமை
ஊன்றுகோல் கையொட்டாத் தொலைவிலே.
இழுத்துப் பறிக்கும் மூச்சினிடையே

எதையோ சொல்ல வாயெடுக்கவும்
பறி போயின சொற்கள்.
பறியுண்ட மூச்சு
மடியை பிடித்து உலுக்குவதாய்
காற்று ஒரு கால் நடுங்கிற்று

பதற்றத்தோடே
படலையைத் தாண்டிப் பார்த்தது
தூக்க எடுக்க துணை கிடைக்குமாவென்று
ஆருமே இல்லை.

காற்றென்ன செய்யும்?
ஒப்பாரி எழுந்தால் ஏந்தியெடுத்து
ஊரின் காதிலே போடும்.
ஒரு குரலின் உரைசலும் இல்லையே.
உண்மையிலேயே
காற்றிற்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

பக்கத்திருந்து உறவுகள்
பால் பருக்க,
கால் பிடிக்க,
கை பிடிக்க,
தேவாரம் ஓத,
கோலாகலமாய் பிரிகின்ற உயிர்
அநாதரவாய்,
அருகெரியும் சுடர் விளக்கின்றி
பறை முழக்கமின்றி, பாடையின்றி...
அட, சாவிலும் கூட ஒரு வாழ்விருந்த கிராமம்
இது.

காற்று பரிதவித்தது.
"எங்கே போயின இதன் உறவுகள்?"
ஒன்றும் விளங்காமல் அந்தரித்தது.
அதற்கெங்கே தெரியும்?
காற்றுறங்கும் அகாலத்தில் தான்
மூட்டை முடிச்சுக்களோடு மக்கள்
கிராமத்தை ஊமையாய் விட்டுப் போன கதை.

ஒரு பெரு மூச்சை உதிர்த்தபடி
மீண்டும் உள்ளே நுழைந்தது.
முதுமையினருகில் குந்தியிருக்கும்
இன்னொரு சுவனற்கிழமாய் தன்னைப் பாவித்திருந்து
பிறகெழுந்து
சேலைத் தலைப்புள் வாயைப்புதைத்தபடி
வந்தது வெளியே.

வீதியில் தலை நீட்டிய முட்செடியொன்றை
வேலியோரமாய் விலக்கியபடியே
மெல்ல நடந்தது காற்று
சொல்லிக் கொள்ளாமல் போன புதல்வரைத் தேடும்
சோகந் தாளாத தாயைப் போல.

# 'இறைச்சிப்' பொருள் !



பசுமாடு முட்டினால் பாராளுமன்றம் பதைக்குமா? இன்று பதைக்கிறது! பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் மட்டுமன்று, 'ஐரோப்பிய பொதுச் சந்தை' (EEC) குடும்ப நாடுகளின் பாராளுமன்றத்திலும் - இந்தப் பதைப்பு, உதைப்பு நிலவவே காண்கிறோம். பொதுமக்கள் மத்தியில் - மாட்டிறைச்சி உண்பவர்களும் - அல்லாதவர்களும் கூட உணவுப் பொருட்களை வாங்கும்போது - மாட்டிறைச்சி சம்பந்தப்பட்ட பொருட்கலவை ஏதேனும் உண்டா என்று கவலையுடன் கவனித்து வாங்குகிறார்கள். காரணம் 'யோகர்ட்' என்னும் தயிர், பிஸ்கட், ஜெலி போன்ற இனிப்புப் பண்டங்கள், பொட்டலங்களிலும், கொள்கலங்களிலும் விற்கும் 'சூப்' தயாரிப்புக்கள், சீஸ் எனும் பாலாடைக் கட்டிகள், 'ஸாஸேஜ்' என்னும் 'இறைச்சி' மாவைகள் - இப்பிடிப் பல்வேறு உணவுப் பண்டங்களிலும் மாட்டு ஊன் பொருட்கள் கலக்கப்படுவதே!

உண்மையில் சொல்லப்போனால், பால் உட்பட 'விலங்கிலிருந்து பெறப்படும்' அனைத்துப் பொருட்களையும் விலக்கி, தாவர உணவு வகைகளை மட்டுமே உண்ணும் வேகன் (VEGAN) என்னும் 'வீரசைவக்' கூட்டத்தினரைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் ஏதாவது ஒரு வகையில் 'மாட்டு மாமிச - ஊன்பொருள் உணவு சங்காத்தம் உடையவர்களே என்று துணிந்து கூறலாம். அந்த வகையில், இந்த மேலை நாட்டு உணவுப் பொருட்கள் பலவற்றில் ஊன்பொருள் ஊடுருவல் உண்டு. எனவேதான் 'பீப்' (BEEF) சாப்பிடுகிறவர்கள் மட்டுமல்ல, பிஸ்கோத்து சாப்பிடுகிறவர்களும் பீதியுடனேயே சாப்பிடவேண்டிய ஒரு அவலநிலை.

இந்த BSE என்னும் MAD COW - வெறி மாட்டு நோய் பற்றியும் - பாதிக்கப்பட்ட மாட்டிறைச்சியை உண்பதால் மனிதர்களுக்கு வரும் CJD எனும் நோய் பற்றியும் பல்லாண்டுகட்கு முன்பே பிரிட்டனிலும், ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிலும் எச்சரிக்கை, அபாயக் குரல்கள் எழுந்தன. அண்மையில் பிரிட்டனில் எட்டுப் பேர் இந்த 'மாட்டு வெறி' மாமிசத்தை உண்டு CJD நோயால் பாதிக்கப்பட்டு இறந்துபோகவே, பெரிய கூக்குரல் கிளர்ந்து, மருத்துவ அறிவியல் நிபுணர்கள், இந்த 'மாட்டிறைச்சிப் பாதிப்புப்' பற்றி உறுதிப்படுத்தி அறிக்கை விட்டு `MAD COW' பிரச்சினை விஸ்வரூபம் எடுத்துவிட்டது!

பல்லாயிரம் மில்லியன் பவுண் வருமானம் ஈட்டக்கூடிய, பிரிட்டன் 'மாட்டிறைச்சி' ஏற்றுமதிக்கு ஐரோப்பியக் குடும்ப நாடுகளும், தடைவிதித்திருக்கின்றன. இது பிரிட்டிஷ் வேளாண்மைத் துறையை மட்டுமன்று, நாட்டின் பொருளாதாரத்துறையையே பாதிக்கக் கூடியது. கடந்த பல வாரங்களாக பிரிட்டனின் 'சூப்பர் மார்க்கட்' பேரங்காடிகளில் இதுநாளும் வெள்ளைமக்களின் பிரியத்துக்குகந்த 'பீப்' சீண்டுவாரற்று, வாங்குவோரற்று ஒதுக்கப்பட்டு வருகின்றன. அரசியல் தலைவர்களும், ஒரு சில அறிவியல் வல்லுனர்களும்,

'ஐயன்மீர்' இது அநாவசியமான பீதி - பிரிட்டிஷ் கால்நடைகளிடையே `BSE' - மாட்டு வெறி நோய் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருப்பது உண்மைதான். ஆனால், சகட்டு மேனிக்கு, எல்லா மாட்டிறைச்சியிலும் இந்த நோய்ப்பாதிப்பு இருப்பதாக அச்சங்கொள்வது அறியாமை. அதுமட்டுமன்று, மாடுகளின் BSE - நோய்க்கும், மனிதர்களைப் பீடிக்கும் CJD நோய்க்கும் உறுதியான தொடர்பு இருக்கிறது என்று இன்னமும் நிச்சயமாகச் சொல்வதிற்கில்லை' என்ற பாங்கில் குரல்கொடுத்தும் பொதுமக்கள் மத்தியில் 'அச்சம்' நீங்கவில்லை.


மாட்டிறைச்சியை நம்பி கோடிக் கணக்கில் வியாபாரம் செய்யும் 'மக்டொனால்ட்' வேக உணவு விடுதி நிறுவனம் கூட பிரிட்டிஷ் 'பீப்' சுத்தமானது என்று நாங்கள் கருதினாலும் மக்கள் 'பயத்திற்கு' மதிப்புக்கொடுத்து, 'பிரிட்டிஷ் அல்லாத இறைச்சியை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்திருக்கிறோம். பொதுமக்கள் அச்சம் நீங்கியதும் உள்நாட்டு இறைச்சியைப் பயன்படுத்துவோம்' என்று செய்தித்தாட்களில் முழுப்பக்க விளம்பரங்கள் செய்து வருவதையும் பார்க்கிறோம். ★

*எஸ். சங்கரமூர்த்தி*

ஒரு குறிப்பிட்ட சிறிய சதவீத அளவு கால் நடைகளுக்கு இந்த BSE வெறிநோய் இருக்கிறது என்பதற்காக நாட்டின் மொத்தக் கால்நடை வளத்தையே அழித்துவிட ஆலோசனை கூறுவதும், கட்டாயப் படுத்துவதும் அறிவீனமான செயலேயாகும். மூட்டைப்பூச்சித் தொல்லையை களைய வீட்டையே எரியூட்டி அழிப்பது போன்ற செயல்! கூண்டோடு பசுவதை செய்யும் திட்டத்திற்கு பிரிட்டிஷ் கால்நடைப் பண்ணையாளர்கள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள். பல்லாயிரக்கணக்கான கால்நடைகளுக்கு கூண்டோடு தகனம் என்ற ஊகச் செய்திகள் உலாவரத் துவங்கியதுமே, கம்போடியாக்காரர்கள், "ஐயோ, வீணாக அழிக்கப்பட விருக்கும் மாட்டு மந்தைகளை எங்களுக்குத் தாருங்கள். கம்போடியாவில் பழைய வன்முறைப் பயங்கரவாதிகள் விதைத்துவிட்டுப் போன கண்ணிவெடிகளை அழித்து அப்பறப்படுத்த, வேண்டாத உங்கள் கால்நடைகளைப் பயன்படுத்துகிறோம். ஒரே கல்லில் இரண்டு மாங்காய் தட்டியமாதிரி" என்று விண்ணப்பம் செய்ததாக செய்திகள் அடிபட்டன. "பாழாய் போகும் கஞ்சியைப் பசுவுக்கு வார்த்தால் புண்ணியம்" என்பார்கள். இந்த 'கௌன்டின்ய' மரபுவழி காம்போஜ, கம்பூச்சியதாரிகள் "பாழாய் போகிற பசுமந்தையை 'கண்ணிவெடி' இடறலுக்குத் தானம் தாருங்கள்" என்று கேட்டதை நினைத்தால் திட்டுவதற்கு சமஸ்கிருதம் தெரியவில்லையே என்று வேதனைப்படுவதை தவிர வேறு வழி புலப்படவில்லை.

நிற்க, இந்த மாட்டுவெறி நோய் பாதிப்பு எப்படி கால்நடைகளுக்கு ஏற்பட்டது என்பது முக்கியமான சங்கதி. 'இறைச்சிப்' பொருள் அதில் தான் தொக்கிச் சிக்கி நிற்கிறது. பொதுவாக மனித உணவுக்கு பண்டு தொட்டே பயன்படுத்தப்படும் பிராணிகள் பெரும்பாலும் சாகபட்சணிகளே - அதாவது புல் பூண்டு, இலை தளைகளை தின்று வாழும் விலங்குகளே - என்பது நமக்குத் தெரியும். ஆடு, மாடு, ஒட்டகை, மான் போன்றவை.

ஆனால், மேலைநாட்டு வேளாண்மைத் துறையில் கால்நடைப் பண்ணைகளில், மாமிச உற்பத்தியைக் கருத்திற் கொண்டு வளர்க்கப்படும் ஆடு, மாடுகளிற்கு புல்லுணவு கால் பங்கும், மாமிசக் கழிவுப் பொருட்களால் தயாரித்த செயற்கை உணவுகள் முக்கால் பங்கும் என்று திணித்தால், அந்தக் கொடுமையை என்னவென்று சொல்வது? பசுவைப் பசுமாமிச உண்ணியாக மாற்றினால் பாலிலும், இறைச்சியிலும் 'விஷம்' ஏறாமல் என்ன செய்யும்? மாமிச உற்பத்தியாளர்களின் பேராசையும், மனிதாபிமானற்ற 'கொட்டடி வளர்ப்பு' முறையும் இந்த 'உணவு நச்சு நோய்' விபரீதத்திற்கு மூல காரணங்கள் என்றால் மிகையில்லை! 'வெறி' கால்நடைகளுக்கு அல்ல, இயற்கைக்குப் புறம்பாக அசுர வளர்ப்பு உத்தியை மேற்கொள்ளும் மனிதர்களுக்கே என்று சொன்னால் கூட தப்பில்லை.



கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னால் - பிரிட்டனில், எட்வினா கரி அம்மையார் வேளாண்மைத்துறை அமைச்சராக இருந்தபோது - "சாமனல்லா நோய்த் தொற்று இல்லாத கோழி இறைச்சியோ, முட்டையோ இல்லை. இதற்கெல்லாம் காரணம் கோழிகளை 'கொட்டடி'யில் முடக்கி, சுகாதாரமில்லாத சூழ்நிலையில் வளர்த்து, மாமிசக் கழிவுணவுகளைப் போட்டு வாட்டுவதால் வந்த வினை" என்று சாடியதும், 'சிக்கன் - முட்டை' பீதி கிளர்ந்து கோழிப்பண்ணைத் துறை குப்பிற விழ நேர்ந்ததும் நினைவுக்கு வருகிறது.

போகட்டும், எதிலும் ஒரு இயற்கை வரம்பு உண்டு. அதனை மீறும் போது துன்ப துயரங்கள் வருவது இயற்கை. கத்தரிக்காய் கத்தரிக்காய் அளவுக்கு இருக்கவேண்டும். பனங்காய் அளவுக்கு ஆசைப்படும் போது, கண்ட கண்ட இரசாயன உரங்கள் பயன்படுத்த வேண்டிய - இயற்கைக்குப் புறம்பான அவசியம், அபாயம் நிச்சயம் வரத் தான் செய்யும். கோழியானது, கோழி முட்டை அளவுக்கு எத்தனை போட வேண்டுமோ அந்த எண்ணிக்கை வரம்புக்குள் போட்டால்தான் நல்லது. வாத்து முட்டை பருமனில், நூற்றுக் கணக்கில், 'சூப்பர் மார்க்கட்' தேவைகளுக்காகப் போடவேண்டுமென்றால், இராசாயன மருந்துச் சத்துக் கலவையையும், மாமிசக் கழிவுப் பொருள் தீவனங்களையும் திணிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறது. இயற்கைக்குப் புறம்பான திணிப்பு பிணியை உண்டுபண்ணுவதில் என்ன வியப்பு இருக்கிறது?

கடைசியாக ஒரு விடயம்:

ஐயா! இந்த மனிதப் பிராணி மாமிசம் உண்ணப் படைக்கப்பட்டன என்ற ஒரு கேள்வியும் (கேலியும்) எழுகிறது. இறைச்சியைக் கிழித்துண்ண கோரப்பற்கள் மனிதனுக்குக் கிடையாது! இறைச்சியை முறைப்படி சீரணிக்க, மாமிச பட்சணி மிருகங்களின் இரப்பையில் சுரக்கும் ஜீவரச சுரப்பம் அவ்வளவாகக் கிடையாது. 'மாமிசம்' குடலில் நெடுநேரம் தங்கினால் ஏற்படும் 'நச்சுத் தன்மையில்' இருந்து காப்பாற்ற புலி, சிங்கம் போன்ற விலங்குகளுக்கு இயற்கை குடலின் நீளத்தைக் குறைவாக வைத்து, சட்டுப் புட்டென்று சக்கையை வெளியேற்றி விடுகிறது. ஆனால், தளை உணவுகளைத் உண்ணும் ஆடு, மாடு, மான், யானை போன்றவற்றிற்கு 'நின்று நிதானமாகச் சீரணிக்க' குடலின் நீளத்தை அதிகமாக இயற்கை வழங்கியிருக்கிறது. அதேபோல மனிதனுக்கும் நீளமான குடலமைப்பு! இயற்கையில் மனிதன் சாகபட்சணியே! இறைச்சியைத் தின்று 'சாக' வல்ல நோய்க்கு ஆளாகவேண்டிய பிராணி அல்ல. சைவ உணவால் 'கொலஸ்ரோல்' ஏறி இருத நோய்கள் வரும் அச்சமில்லை. வெறிமாட்டு நோய்க்குப் பயப்பட வேண்டிய அச்சமில்லை. தன் ஊன் பெருக்கிற்காகப் பிறிதொரு ஊன் உண்ணாத ஆன்ம நிம்மதி உண்டு. எல்லாவற்றிற்கும் மேலாக சிக்கனம்; அத்தோடு சிறந்த உடல் நலம்! என்ன சொல்லுகிறீர்கள்?

★★

அன்புடன் அழைக்கிறது

# தவம் வீடியோ சென்ரர்

★ தரமான வீடியோ பிரதிகள், சீ.டி, ஓடியோக்கள், பத்திரிகைகள் , சஞ்சிகைகளுக்கும்

★ வாகன வசதி, திருமண மண்டபம், மண்டப அலங்காரம், கலைநயம் மிக்க வீடியோ படப்பிடிப்பு, ஓடருக்கு கேக் வகைகள்....

★ எதுவானாலும் குறைந்த செலவில் நிறைந்த திருப்திகாண

THAVAM VIDEO CENTER

64, Rue Louis Blanc, 75010 Paris. Metro: La Chapelle / Gare du Nord
Tel: 42 09 35 53

அனைத்துவிதமான இலங்கை, இந்திய மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள், குடிபானங்கள், மதுபான வகைகள் மற்றும் பழைய, புதிய வீடியோ படப் பிரதிகள், பாடல் பிரதிகள், சீ.டிக்கள் அனைத்தையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

# மிதுலாஸ்

## சுப்பர் மார்க்கட்

23, Rue Perdonnet, 75010 Paris.
Metro: La Chapelle / Gare du Nord
Tel: 40 35 64 55

# வாழ்க ‘இன்ரநெற்’!

**கண்ணன்**

நேற்று பாலன் கூப்பிட்டிருந்தான்.

வீட்டில் இடியப்பம், பிட்டு என்று ஈழத்துச் சாப்பாடுகள் செய்யும்போதெல்லாம் என்னை மறவாமல் கூப்பிடுவான். போயிருந்தேன்.

சாப்பாடு, நாட்டு நிலவரம், விசாப் பிரச்சினை, மன்ற நிர்வாகத்து இழுபறிகள், சிவனேசனின் தங்கச்சி கல்யாணம் எல்லாம் தாண்டி வீடியோ கசெட்டில் பார்த்த தமிழகத்துப் படங்கள் பற்றி ஆரம்பித்ததும், எங்களையறியாமலே தமிழ்நாட்டு அரசியலுக்குள் புகுந்துகொண்டோம்.

“ரஜனிகாந்தின் ஆதரவு தி.முகவுக்காம், தெரியுமா? நேற்றைய ஹிந்து (The Hindu) பத்திரிகையில் படித்தேன்” என்றான்.

“சரிதான்! தமிழ்நாட்டின் தலையெழுத்து மாறாது போலிருக்கிறதே! அது சரி, அது எப்படி நேற்றைய ஹிந்து பத்திரிகையை இன்று படித்திருப்பாய்?” குழம்பினேன்.

“இன்ரநெற்றில் (Internet)! வா காட்டுகிறேன்!” என்றவாறு கொம்பியூட்டரை நோக்கிப் போனவனைக் குழப்பத்துடன் தொடர்ந்தேன்.

கொம்பியூட்டரை இயக்கி, ஒரு சில நிமிட நேரத்தில்,

கொம்பியூட்டர் திரையில் ஹிந்து பேப்பரை விரித்தான். வியப்பு என்னை விழுங்கிக்கொண்டது.

வட துருவத்தில், வீட்டுக் கதவை திறக்க விடாமல் பனிக்குவியல் தொல்லைப்படுத்தும் நாடொன்றில் - வீட்டின் ஒரு மூலையிலிருந்து, நேற்றுச் சென்னையில் வெளியான ஹிந்து பேப்பர் வரை வாசிக்க முடிகிறதே!

தலைப்புச் செய்திகள், பிராந்தியச் செய்திகள், விசேட தேர்தல் செய்திகள், கலை, பொழுதுபோக்கு என்றெல்லாம் வகைவகையாகத் தொகுக்கப்பட்டு, நிரல்படுத்தப்பட்டிருந்தன.

## என்னவெல்லாம் சாத்தியமாகிறது இப்போது..!




ஒரு பெரிய கறுத்த எலிமாதிரி ஒரு உபகரணத்தை (“மவுஸ்” என்று சொன்னான்) மேசையில் வைத்து அசைக்க, அதன் அசைவிற்கேற்ப திரையில் ஒரு சிறு அம்புக்குறி அசைந்தபடியிருந்தது. “பிராந்திய செய்திகள்” என்ற வரியில் அந்த அம்புக்குறி தொடும்வரை அந்த கறுத்த வண்டை அசைத்து, பின்னர் அதன் தலையில் ஒரு தட்டு (கிளிக்!). இப்போது திரையில் கர்நாடகம், ஆந்திரா, கேரளா, தமிழ்நாடு என்ற வரிகள் தோன்றுகின்றன. இப்போது அம்புக்குறியால் தமிழ்நாட்டைத் தொட்டு மீண்டும் கறுத்த எலியின் தலையில் ஒரு தட்டு! அவ்வளவுதான், “கொட்டும் மழையில் பாண்டிச்சேரியில் ஜெயலலிதா பிரச்சாரம்”, “சேப்பாக்கத்தில் கருணாநிதியின் மாபெரும் கூட்டம்”, “மூப்பனாரின் முழக்கம்”, “அமெரிக்காவிலிருந்து ரஜனிகாந்த் ஆசீர்வாதம்” என்றெல்லாம் நிரல் நிரையாக செய்திகள்.

(மீண்டும் கறுத்த எலியின் சில அசைவுகள். அதன் தலையில் இரண்டொரு தட்டு!)

இப்போது சிறீதேவி நடித்த தமிழகத் திரைப்படமான ‘தேவராகம்’ பற்றிய விமர்சனம்.

(மீண்டும் கறுத்த எலியின்...)

இப்போது நமது நாட்டுச் செய்திகள்! அதுவும் தமிழில்! நாள்வாரியாகத் தொகுக்கப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டிருகிறது. எங்கள் நாட்டில்

எந்த நாளில் என்ன நடந்தது என் பதை அறிய வேண்டுமா? அந்த நாளில் அம்புக்குறியால் தொட்டு கறுத்த எலியின் தலையில் ஒரு தட்டு தட்ட வேண்டியதுதான்.

(மீண்டும் கறுத்த எலியின்...)

இப்போது தமிழர் தகவல் நடுவம். உலகெங்கும் பரந்துள்ள தமிழர்களின் விபரம் உட்பட, தமிழர், தமிழ் சம்பந் தப்பட்ட சகல விபரங்களையும் ஒருங் கிணைத்திருந்தார்கள். குணபாலன் ஒரு உதாரணத்துக்காக கனடாத் தமி ழர் விபர நிரலை ஓடவைத்தபோது, அதில் ஒரு பெயர் என் ஞாபகப் பரப்பின் ஒரு புள்ளியைத் தொட, நிறுத்தச் சொன்னேன். விசுவலிங்கம் தியாகராசா! ஐந்தாம் வகுப்பில், முப் பது ஆண்டுகளுக்கு முன்னர், என் னோடு படித்த நண்பனின் பெயர். அவனாக இருக்குமோ?

"அவரிட்டயே கேட்டாப் போச்சு!" என்றான் குணபாலன்.

"எப்படி கேட்பாய்? முகவரி வேணுமே?"

"இதில முகவரியும் இருக்கு. முக வரியெண்டா வழக்கமான தபால் முகவரியல்ல. இது இலத்திரனியற் தபால் (E-MAIL) முகவரி. கொம்பி யூட்டருக்குள்ளால நாங்க மற்றவைக்கு கடிதம் அனுப்பலாம்; அது மாதிரியே மற்றவை நமக்கும் அனுப்பலாம். இப்ப தியாகராசாவுக்கு என்ன எழு துவம்?"

"புங்குடுதீவு, சுப்பிரமணிய வித்தி யாசாலையில் படித்தது நீங்களோ? என்று கேட்டுப்பார்" என்று சொன் னேன்.

சிலவேளை இந்தத் தியாகராசா தான் எனது சிறுவயது நண்பனாக இருக்குமானால், முப்பது ஆண்டுக ளுக்குப் பிறகு ஒரு கொம்பியூட்ட ருக்கு முன்னாலிருந்து அவனைத் தொடர்புகொள்ள முடிகிறதெண் டால்....

எனக்கு உண்மையிலேயே நம்பு வது கடினமாக இருந்தது.

"சரி. கடிதம் அனுப்பியாச்சு. இப்ப தியாகராசா கொம்பியூட்டருக்கு முன்னால் இருந்தா, அவர் கடிதத்தை வாசிக்கக்கூடும்" என்று குணபாலன் சொன்னான். இவன் என்னோடு பகிடிவிடுகிறானோ என்றுகூடத் தோன்றியது.

(மீண்டும் கறுத்த எலியின்....)

இப்போது கனடாவிலிருந்து கொழும்புக்குப் பாய்ந்தோம். Sunday Times, Daily News என்று ஆங்கிலத் தில் எழுதும் சிங்கள இனவாதப் பத் திரிகைகளைக் கூட பார்க்கக்கூடிய தாக இருந்தது. கிழக்குப் பல்கலைக் கழகம், யாழ் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய இலங்கைப் பல்கலைக்கழகங் கள் வர்த்தக உல்லாசப் பயண நிறு வனங்கள், தனிநபர்கள் என்று இலங் கையிலேயே ஏராளமான 'இன்ரநெற்' இணைப்புக்கள் காணக்கூடியதாக இருந்தது.

(மீண்டும் கறுத்த எலியின்....)

நோர்வேக்கு மீண்டோம்.

இப்பொழுதெல்லாம் கடைக்குப் போய் பொருட்களை வாங்குவது போல் 'இன்ரநெற்' மூலமாக பொருட் களை வாங்க கொள்வனவு உத்தரவு வழங்குவது சாதாரணமாகி வருகிறது என்று குணபாலன் சொன்னான். அதற்கு ஒரு உதாரணமாக அவன்



வாங்கவிருந்த ஒரு புத்தகம் ஒன்றினை 'இன்ரநெற்' ஊடாக எப்படி வாங்குவது என்று செய்துகாட்டினான். கறுத்த எலியின் இரண்டொரு அசைவுகள், அதன் தலையில் இரண்டொரு தட்டு, பின் அவனது 'விசா' அட்டையின் இலக்கம், முகவரி போன்ற ஒரு சில விபரங்கள்! நாளை மறுதினம் அவனது தபால் பெட்டியில் அந்தப் புத்தகம் வந்திருக்குமென்றான்.

"இதென்ன பெரிய விசயம். வாழ்க்கைத் துணையைத் தேடுறது. பிள்ளைகளைத் தத்தெடுக்கிறது மாதிரி விசயங்கள்கூட இப்ப 'இன்ரெநெற்'றினுக்குள்ளால்தான் நடக்குது" என்றவனை நிறுத்திக் கேட்டேன்.

"குணபாலன்! எனக்கு கொம்பியூட்டரைப் பற்றி எனக்கு ஒண்டும் தெரியாது. அதத் தொட்டுப் பாத்ததில்ல. ஆனா நீ இப்ப சொன்னதெல்லாத்தையும் பாத்தா உலகத்தில என்னவெல்லாம் நடக்குது. நான் வீடியோவோட காலத்த வீணாக்கிறன் போலத் தெரியுது. ஆனா ஆசைப்பட்டா மட்டும் போதுமா? ஒரு கொம்பியூட்டர் வாங்கி, அதில 'இன்ரநெற்' பாவிக்க முடியுமெண்டு நினைக்கிறாயா?"

"அந்த வீடியோவில எத்தனை விளையாட்டெல்லாம் காட்டுற. புறோகிறாம் பண்ணுற. டப்பிங் செய்யிற. கொப்பியடிக்கிற. இதெல்லாம் ஊரில படிச்சிற்றா வந்தனீ?"

"அதுக்கெல்லாம் என்ன படிக்கிறது? நாலுதரம் செய்துபாக்க அஞ்சாம்தரம் தானாவரும். ஆனா கொம்பியூட்டர்..."

"கொம்பியூட்டரும் வீடியோ மாதிரி ஒரு மிசின்தான். அதப்பழக நாலுதரமெண்டா இதப் பழக நாப்பதுதரம் எண்டு வையன். சொல்லுறன் கேள்; ரெண்டு கிழமை கனக்க. அதுக்குப் பிறகு கொம்பியூட்டர், 'இன்ரநெற்' எல்லாம் சாதாரண விசயமாய் போயிரும்."

"கனசாமான்கள் வாங்கோணுமோ?"

"இப்ப உன்னட்ட ஏற்கனவே ரெலிபோன் இருக்கு. இனி நீ வாங்க வேண்டியது ஒரு மோடெம் (Modem கிட்டத்தட்ட 200 அமெரிக்க டொலர்கள்). உன்ர வசதிக்கேற்ற விலையில் ஒரு கொம்பியூட்டர். 'இன்ரநெற்' கனக்ஷன் குடுக்கிற நிறுவனத்தில் சந்தாதாரரா சேரவேணும்; அது கிட்டத்தட்ட வருசம் 100 அமெரிக்க டொலர்கள் மட்டில் வரும். அவ்வளவுதான். வாங்கின பிறகு சொல்லு! ஆரம்பத்தில் சில விசயங்கள் குழப்பமாயிருக்கும்; நான் சொல்லித்தாறன். பிறகு நீயாவே பிழைவிட்டு, பிழைவிட்டு படிச்சிடுவ. எங்கட பொடியள் கனபேர் இப்ப இதில விண்ணங்களா இருக்கிறாங்கள். அவயிட்டயும் உதவி கேக்கலாம்."

"அப்ப துணிஞ்சு இறங்கலாம் எண்டு சொல்லுற"

"அறியாத வரைக்குத்தான் இதுகள் பெரிய விசயம் மாதிரித் தெரியும். அதுக்குப் பிறகு அட இதுக்கா இவ்வளவெல்லாம் யோசிச்சன் எண்டு நினைப்ப"

"நேரமாகுது. நான் வெளிக்கிடுகிறன்" நான் எழுந்தேன். 'இன்ரநெற்'றில் வாழ்க்கைத் துணையைக்கூடத் தேடலாம் என்று குணபாலன் சொன்னதிலிருந்து மூளை சுறுசுறுத்துக்கொண்டிருந்தது.

கீக் என்று ஒரு சத்தம் வர, "இங்க பார்! எனக்கு இப்ப ஒரு கடிதம் வந்திருக்கு" என்று திரையைக் காட்டினான் குணபாலன்.

தபாற்பெட்டிப் படத்தை அம்புக் குறியால் தொட்டு கறுத்த எலியின் தலையைத்தட்ட கடிதம் விரிந்தது.

"இது உனக்குத்தான். உன்ர சிநேகிதன் தியாகராசா.... உன்ர சின்ன வயசுப் பட்டப் பெயர் பணிஸா?" சிரிப்புத்தாங்காமல் குணபாலன் எழுந்து கொள்ள நான் அவனது இருக்கையில் அமர்ந்தேன்.

தியாகராசாதான். "டேய் பணிஸ்!" என்று விளித்திருந்தான். பள்ளிக்கூடங்களில் மதிய உணவாக Bun கொடுக்கப்பட்ட - முப்பது வருடங்களுக்கு முன் முடிந்துபோன காலத்தில், நான் குண்டாக இருந்ததால் எனக்கு எனது நண்பர்கள் வைத்த பட்டப்பெயர்தான் 'பணிஸ்'.

மறக்காமலிருக்கிறானே! அரசடி மரம், கந்தசாமி கோவில் குளம், மணியம் கடை எல்லாம் நினைவிருக்கிறதா என்று கேட்டிருந்தான்.

"வாழ்க இன்ரநெற்!" என்று வாழ்த்தலாம் போலிருந்தது.

குணபாலனிடமிருந்து விடை பெறும்போது, இன்னும் இரண்டு வாரத்தில் எனது சொந்தக் கொம்பியூட்டரிலிருந்து, எனது சொந்த இ-தபால் முகவரியிலிருந்து தியாகராசாவுக்கு பதில் போட்டே தீர்வது என்று முடிவெடுத்திருந்தேன். ★

## உதாரணத்துக்கு சில முகவரிகள்:

*தமிழீழத்துச் செய்திகளை தமிழில் வாசிக்க விரும்புவோர்களுக்கு:*

http://www.powertech.no/jeyaramk/tenews

*தமிழீழம், தமிழீழவர்கள் தொடர்பான விடயங்களுக்கு:*

http://utc.utexas.edu/janahan/tamil.html
http://www.sub.ac.uk/balasuk/thamil
http://www.tamil.org

*தமிழகம் தொடர்பான விடயங்களுக்கு:*

http://mathsun28.math.utk.edu/siddhart/ta milnadu
http://tamil.math.utk.edu/cgi bin/tamilnadu
http://www.cba.uh.edu/bala/tamilnadu/food .html

*சிறீலங்கா தொடர்பான விடயங்களுக்கு:*

http://www.lanka.net

*பத்திரிகைகள்:*

http://www.lanka.net/lakahouse/anclweb/la kehous/lakehous.html
*(சிறீலங்கா லேக் ஹவுஸ் பத்திரிகைகள்)*

http://www.webpage.com/hindu/current/week ly.html
*(ஹிந்து - இந்தியா)*




**1981ம்** ஆண்டு வைகாசி மாதம் 31-ம் திகதி இரவு; கரிய இருளுக்கு மத்தியில் யாழ். நகரில் ஒரு பெருவெளிச்சம் எழுந்தது. அது வேறொன்றுமல்ல நமது அறிவுப் பெட்டகமான யாழ். நூல்நிலையத்தை இனவெறி கொண்ட சிங்களப் படைகள் எரியூட்டியதால் ஏற்பட்டது என்பதை அறிந்தபோது தமிழ் மக்கள் நெஞ்சம் பதைபதைத்தனர்.

அந் நூலகத்தை பெரும் பொக்கிசமாக, சொத்தாக நம்பியிருந்த பன்மொழிப் புலவர், டாக்டர் தாவீது அடிகளார் அக் கொடிய செய்தியைக் கேட்ட மாத்திரத்திலேயே மூச்சடங்கிப் போனார்.

ஒரு இனத்தை அழிக்க வேண்டுமானால் முதலில் அதன் பண்பாட்டு, கலாச்சார விழுமியங்களை அழிக்க வேண்டுமென்பது எல்லா ஆக்கிரமிப்பாளர்களும் கடைப்பிடிக்கின்ற கொள்கையாகும்.

சிறீலங்காவின் பேரினவாதிகளும் அதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல என்பதை உயர்கல்வித் தடைச் சட்டம் (தரப்படுத்தல்), தமிழர் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள், இந்து ஆலயங்களிலும் கலாச்சார நிலையங்களிலும் பௌத்த கலாச்சாரத்தை திணிக்க முற்பட்டமை (கதிர்காமம் இராமகிருஷ்ண மிஷன்), தனிச் சிங்கள‌ச் சட்டம் முதலான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் அவையெல்லாம் அவர்களுக்குத் திருப்தி தரவில்லை.

தெற்காசியாவிலேயே தலைசிறந்த நூலகமாக யாழ்ப்பாண நூலகம் இருந்தது, அவர்களின் கண்களை உறுத்தியது. சிங்கள அரசியல்வாதிகளும், சிங்கள இனவெறிக் கல்விமான்களும் அந்த நூலகத்தை அழித்து விடுவதன் மூலம் தமிழ் இனத்தை அழித்துவிடலாம், தமிழ் மக்களுடைய வரலாற்றை அழித்துவிடலாம் என நம்பினார்கள். அந்த உறுத்தலின், நம்பிக்கையின் விளைவே 'எமது பொக்கிசம்' எரியூட்டப்பட்ட நிகழ்வாகும்.

90 ஆயிரம் நூல்களைக் கொண்டிருந்த இந் நூலகம் ஐரோப்பாவிலிருந்து சென்று தமிழ்ப்பணியாற்றிய கத்தோலிக்க மதகுருவான 'லோங்' அடிகளாரின் எண்ணத்தில் கருப்பெற்று உருவானதாகும்.

இந்த எரியூட்டலின் போது அங்கிருந்த அத்தனை நூல்கள் மட்டுமல்ல, மீண்டும் தேடிக் கண்டுபிடிக்க முடியாத, மீளப்பெறமுடியாத வரலாற்றுப் பொக்கிஷங்களான ஏராளமான ஏட்டுச் சுவடிகளும் கூட எரிந்து சாம்பலாகிவிட்டன.

இன்று, அந்த மாபெரும் வரலாற்றுப் பொக்கிசம் இருந்த நூலகப் பகுதி எதிரியிடம் சிக்கியிருந்தாலும் அவன் நீண்டநாள் அங்கு நிலைத்திருக்கப் போவதில்லை. அந்த மண் மீட்கப்படும்போது, அங்கிருந்து விரட்டப்பட்ட தமிழ் மக்கள் அங்கே மீளக் குடியேறும்போது அந்தக் கலைக் களஞ்சியம் மீண்டும் புனரமைக்கப்படும்; புனரமைக்கப்பட வேண்டும்.

இங்கே புகலிட நாடுகளில் இருக்கக்கூடிய நாம் செய்யவேண்டியது ஒன்றே ஒன்றுதான்; அதாவது அந்த வரலாற்றுப் பொக்கிசத்தை மீளக் கட்டியெழுப்ப இப்போதிருந்தே நாம் தயாராகவேண்டும். பிரச்சனை கட்டிடம் கட்டுவது அல்ல; நல்ல பல அரிய நூல்களைச் சேர்ப்பதே. விலை மதிக்க முடியாத நமது பாரம்பரிய கலை இலக்கிய, வரலாற்று ஏட்டுச் சுவடிகளை எங்களால் கொடுக்க முடியாது. எனினும் ஆளுக்கொரு நல்ல நூலை வாங்கி நாம் கொடுக்க வேண்டும். இன்று நாம் வாங்கிக் கொடுக்கும் நல்லதொரு நூல் நாளைக்கு நம் நாட்டில் அறிவுபூர்வமான ஆரோக்கியமானதொரு சமூகத்தைக் கட்டியெழுப்ப உதவும் என்பதை நாம் நினைவில் கொள்ளுவோம்!

★★★

**லாசப்பலில்**

தரமான வீடியோ பிரதிகளுக்கு

# சசி
## விடியோ விஷன்

**SHAASI VIDEO VISION**

21, Bld. de la Chapelle, 75010 Paris.
Metro: La Chapelle
Tel: 42 09 18 88

**லாசப்பலில்**

மளிகைப் பொருட்கள்
எதுவானாலும் மலிவு விலையில்
பெற்றுக்கொள்ள

# கீதா
## மளிகை

**GEETHA MALIGAI**

59, Rue Louis Blanc, 75010 Paris.
Metro: La Chapelle
Tel: 42 05 64 32

தரமான அச்சு வேலைகளுக்கு

# கிருஷ்ணா அச்சகம்

KRISHNA

Traduction - Traitement de texte - Imprimerie

73, Doudeaville, 75018 Paris.
Metro: Marcadet Poissonniers
Tel: 42 05 64 32

# கலைஞரின் வெற்றி சந்திரிகாவுக்கு கலக்கம்

தமிழகத்தில் கலைஞர் மீண்டும் 4வது தடவையாக ஆட்சிக்கு வருவார் என்பது எல்லோரும் எதிர்பார்த்த ஒன்றுதான். ஆனால் இவ்வளவு பெரிய பெரும்பான்மை பலத்துடன் அவர் ஆட்சி அமைப்பார் என்று எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

அவர் ஆட்சிக்கு வந்ததையிட்டு ஜெயலலிதாவை விட அதிகம் கவலை கொண்டிருப்பது சிறீலங்கா ஜனாதி

## தேர்தலுக்குள் புதைந்த ஈழத்தின் அவலம்

பதி சந்திரிகாதான். 'யுத்தத்தின் மூலம் சமாதானம்' என்கிற தனது தமிழின அழிப்பு அடவடிக்கைக்கு முன்னைய ஜெயலலிதா – நரசிம்மராவ் கூட்டணி அரசு போல் கலைஞர் அரசு ஆதர வளிக்காது என்ற நினைப்பே அவ ரைக் கலக்கமடைய வைத்துள்ளது.

ஆனாலும் தேர்தல் சமயத்தில் தமி ழகத்தின் எந்த அரசியற்கட்சியும் ஈழத் தில் நடைபெற்றுக்கொண்டிருந்த இனப் படுகொலைபற்றி வாயைத் திறக்க வில்லை என்பது ஒருபுறமிருக்க, கலை ஞர் முதல்வராகப் பதவியேற்றவுடன், ஈழத்தின் இனப்பிரச்சினைக்கு, ஒரு நீதி யான தீர்வு கிடைக்க குரல் கொடுப் போம் எனக் கூறியதும் இங்கு குறிப் பிடத்தக்கது.

அதிலும் மத்தியில் எந்தக் கட்சிக் கும் தனியாக ஆட்சியமைக்கக் கூடிய அளவிற்குப் பெரும்பான்மை பலம் இல்லாது இருக்கின்ற நிலையில் மத்தி யில் ஆட்சியமைக்கப் போகிற எவரும் கலைஞரைச் சார்ந்திருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ளது, சந்திரிகாவுக்கு இன்னும் கவலையை அளித்துள்ளது.

மத்தியிலே இப்போது இந்தக் கட் டுரையை எழுதிக் கொண்டிருக்கிற நேரத்தில் ஆட்சியிலே இருக்கும் இந் துத்துவ வாதக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் 'வாஜ்பாய்' அரசு அநேகமாக பாராளுமன்றத்தில் பெரும் பான்மையை நிரூபிக்க முடியாமல் கவிழ்ந்துவிடும் என்ற நிலை உள்ளது. இந்த நிலையில் கர்நாடக முதல்வர் தேவகவுடாவை பிரதமராக்க இடது சாரி முன்னணி தீர்மானித்துள்ளது. கலைஞர் கருணாநிதியும் அவருக்கு ஆத ரவளிப்பதாக உறுதியளித்துள்ளார். நரசிம்மராவ் தலைமையிலான காங்கி ரஸ் கட்சியும், பாரதீய ஜனதாக் கட்சி யின் ஆட்சியை வீழ்த்துவதற்காக தேவ கவுடா அரசுக்கு வெளியிலிருந்து ஆத ரவளிப்பதாகச் சொல்லியிருக்கிறது.

வெளியிலிருந்து ஆதரவளிப்பதா கச் சொல்லும் காங்கிரஸ் கட்சியின் இந்த ஆதரவு, நேர்மையான முறை யில் வழங்கப்படும் ஆதரவு அல்ல என்பதை, அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். மதவாதக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியில் தொடர்ந்திருக்க அனுமதிக்க முடியாது என்று சொல்லி இடது சாரிக் கூட்டணிக்கு ஆதரவு தரும் காங்கிரஸ் இன்னும் மூன்று மாதத் திலோ, ஆறு மாதத்திலோ இடது சாரிக் கூட்டணியின் ஆட்சி சரி யில்லை என்று சொல்லிக்கொண்டு பாரதீய ஜனதாவுடன் கூட்டுச்சேர்ந்து வாக்குப்போட்டு அந்த அரசையும் கவிழ்த்தாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை.

அவ்வாறு ஆட்சி கவிழ்க்கப்படும் பட்சத்தில், காங்கிரஸ் கட்சியால் மட்டுமே மத்தியில் நிலையான ஆட்சி யைத் தர முடியும் என்ற பழைய பல் லவியோடு மறு தேர்தலில் காங்கிரஸ் வாக்குக் கேட்க மக்கள் மத்தியில் வரக்கூடும்.

சொந்தப் பலத்தில் இல்லாமல், கூட்டணிக் கட்சிகளின் பலத்தில் இருக்கக் கூடிய மத்திய அரசு, தன்னு டைய ஆயுளைப் பற்றிய கவலையே பெரிய கவலையாக இருக்கும்வரை, நரசிம்மராவ் அரசு செய்ததுபோல் திரைமறைவில் சிறீலங்கா அரசுக்கு இராணுவ ரீதியிலான ஒத்துழைப்புக் களையோ, நிபுணத்துவ உதவிகளையோ வழங்குவதற்குச் சாத்தியமில்லை.

மறுபுறத்தில் மிக உறுதியான அறு திப் பெரும்பான்மை பலத்தில் ஆட்சி யில் இருக்கும் கலைஞர் கருணாநிதி யினுடைய தமிழக அரசு கூட்டணி அரசில் அங்கம் வகிப்பதால், மத்திய அரசு ஈழத் தமிழர்களது நலன்களுக்கு பாதகம் விளைவிக்கக் கூடிய எந்தச் செயலைச் செய்தாலும் அதற்குப் பேச்சளவிலாவது எதிர்ப்புத் தெரி விக்கும் என எதிர்பார்க்கலாம்.

காங்கிரஸ் கட்சி எதிர்பார்க்கின்ற படி மறுதேர்தல் ஒன்று வந்தால் கூட மக்கள் அதற்குத்தான் வாக்குப்போடு வார்கள் என்று அடித்துச் சொல்ல முடியாது. 50 வருடங்களுக்கு முன் நடந்த சுதந்திரப் போராட்ட கால தியாக வரலாற்றைச் சொல்லி இனி யும் மக்களிடம் வாக்குக் கேட்க முடி யாது. நேரு பரம்பரையைச் சொல்லி வாக்குக் கேட்க, காங்கிரஸ் கட்சிக்குக்



கவர்ச்சியான தலைமை இன்னும் கிடைக்கவில்லை. ராஜிவ் காந்தியின் மகள் பிரியங்காவை அரசியலுக்குக் கொண்டுவர காங்கிரஸ் தலைவர்கள் முயலக்கூடும். ஆனால் இந்திய அரசி யலைப் பொறுத்தவரை, மக்களின் வாக்குகள் எந்தக் கட்சிக்கு விழ வேண்டும் என்பதை இந்திய முதலா ளிகளே தீர்மானித்து வந்திருக்கின்ற னர். நரசிம்மராவ் அரசு திறந்த பொரு ளாதாரக் கொள்கை என்ற பெயரில் மேற்கத்தய முதலீட்டாளர்களுக்கு கதவு திறந்துவிட்டதை, பெரும்பாலான இந் திய முதலாளிகள் விரும்பவில்லை. 'Be Indien - Buy Indien - இந்தியனாக இரு - இந்தியப் பொருட்களையே

"வாங்கு" என்ற அவர்களது, சுதேசியக் கோஷம் அதனால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிவிட்டது. எனவேதான் அவர்கள், இந்திய சுதேசியப் பொருளாதாரக் கொள்கையைத் தூக்கிப் பிடிக்கும் பாரதீய ஜனதாக் கட்சியை ஆதரிக்க முன்வந்திருக்கிறார்கள். கடந்த 10 வருட காலத்தில் இந்திய அரசியலில் பாரதீய ஜனதாக் கட்சி அடைந்து வந்திருக்கிற வளர்ச்சியை கவனித்துப் பார்த்தால் இது தெரியவரும்.

எனவே மறுதேர்தல் ஒன்று வரும் பட்சத்தில் இந்திய தேசிய முதலாளிகள், தங்களது தேசிய நலனுக்கு அச்சுறுத்தலாக இருக்கக் கூடிய காங்கிரஸ் கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வருவதைவிட பாரதீய ஜனதாவையே பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்குக் கொண்டுவர முனைவார்கள்.

இதற்கு எவ்வளவு காலம் ஆகும்? மறுதேர்தல் எப்போது வரும்? என்பது இப்போது சொல்ல முடியாது.

தமிழகத்தைப் பொறுத்தவரை, கலைஞர் கருணாநிதியினுடைய ஆட்சிக்குத் தற்போதைக்கு உடனடி அச்சுறுத்தல் எதுவும் கிடையாது. மத்தியிலே பலவீனமான ஒரு சிறுபான்மை அரசு இருக்கும் வரை, அந்த அரசுக்கு கலைஞரின் ஆதரவு தேவையாக இருக்கும் வரை 'பந்து' என்பது கலைஞர் பக்கமே இருக்கும். சந்திரசேகர் ஆட்சியில்; சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டதாகச் சொல்லி கலைஞரின் அரசை ராஜீவ் காந்தி பின்னணியில் நின்று கவிழ்ப்பித்ததுபோல் அபாயம் எதுவும் தற்போதைக்கு இல்லை என்றால்கூட, அத்தகைய சூழல் நிரந்தரமானதல்ல என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.



கலைஞர் பதவியேற்றவுடன், சிறீலங்காவிலிருந்து டக்ளஸ் தேவானந்தா அவசர அவசரமாக தமிழ்நாடு வந்து, அகதி முகாம்களில் தங்கியுள்ள தனது பழைய சகாக்களை சந்தித்துப் பேசிவிட்டுச் சென்றதாகவும் செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

கலைஞர் வென்றவுடன் தமிழ் குழுக்களின் தலைவர்கள் சென்னை வந்து, அவரைச் சந்திக்க முயல்வது இயல்பு என்ற அடிப்படையில் டக்ளசின் சென்னைப் பயணத்தைப் பார்க்க முடியாது. ஏனெனில் டக்ளஸ் எந்தத் தமிழ் குழுவின் உறுப்பினரும் கிடையாது. டக்ளசின் EPDP என்பது சிறீலங்கா அரசாங்கத்தின் ஒரு அங்கம், சிறீலங்கா இராணுவத்தின் ஒரு பிரிவு.

தமிழகத்தில் தேர்தல் நடந்தபோது கூட டக்ளசின் குழு தமிழகத்திற்குள் ஊடுருவி சிறீலங்கா இராணுவத்தின் ஆலோசனையின் பெயரில், தமிழகத்தில் புலிகளின் பெயரால் சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கவும் தமிழகத் தலைவர்களைக் கொல்ல முயலப் போவதாகவும் தமிழகப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. தேர்தல் காலத்தில் அப்படியான அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறாவிட்டாலும், கலைஞர் புலிகளுக்கு சாதகமான எந்த நிலைப்பாட்டையும் எடுக்கக்கூடாது என்பதற்காக, ஈழப் பிரச்சினையில் கலைஞர், சிறீலங்கா அரசின் இனப்படுகொலையை கண்டித்துப்பேச சந்தர்ப்பம் கிடைக்க முடியாதபடி, அவருக்கு நெருக்கடிகளைக் கொடுக்க சிறீலங்கா அரசு, தனது கூலிப்படையான 'டக்ளஸ் குழுவை' கொண்டு தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கை சீர்குலைக்க முயலக்கூடும் என்ற ஒரு வதந்தி கொழும்பில் அடிபடுகின்றது.

கலைஞரைப் பொறுத்தவரை, அவர் தன்னுடைய அரசியல் எதிரியான ஜெயலலிதாவையும், தன்னைவிட்டுப் பிரிந்து சென்ற கோபால்சாமியையும் தோற்கடித்திருக்கலாம். தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர் குலையக் காரணமாக இருந்தவர் என்ற ஜெயலலிதாவின் குற்றச்சாட்டை பொய்யென நிரூபித்து வெற்றிவாகை சூடியிருக்கலாம்.

ஆனால் கண்ணுக்குத் தெரியாத எதிரிகளான சந்திரிகா அரசின் கைக்கூலிகளை இனங்காணுவதன் மூலம்தான் - அவர்களை அம்பலப்படுத்துவதன் மூலம்தான் தமிழக மக்களுக்கும் சரி, தமிழீழ மக்களுக்கும் சரி எதையாவது உருப்படியாகச் செய்ய அவரால் முடியும்.

— கபிலன்

## தெருக்கூத்து

*பாரிசில் அண்மையில் ஒரு மரணச் சடங்கு நடைபெற்றது. இறந்தவர் கொஞ்சம் முதியவர், அவரது இரு பிள்ளைகள் இங்கிருக்கின்றனர். மரணச் சடங்கிற்கென மற்றைய நாடுகளில் ஏனைய அவரது பிள்ளைகளும் வந்திருந்தனர்.*

*அவர் கிறிஸ்த்தவ சமயத்தவர். திருப்பலி ஒப்புக்கொடுத்து வழிபாடு முடித்து, சேமக்காலைக்கு எடுத்துச் சென்று அடக்கம் செய்யும் வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன.*

*சேமக்காலையில் குடும்பத்தவர்கள், உறவினர்கள், நண்பர்கள் எனப் பலரும் வந்திருந்தனர். பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாயிருந்தாலும் தந்தையை இழந்த சோகத்திலிருந்தனர். சவப்பெட்டியை குழியினுள் இறக்கி எல்லோரும் கைப்பிடி மண் போட்டுக்கொண்டிருந்தனர்.*

*ஒருவர் கையில் கமராவுடன் வந்தார். பக்கத்தில் நின்றவரிடம் அதைக் கொடுத்து, அதனை எப்படி இயக்குவது என்பதை விலாவாரியாகச் சொல்லிக்கொடுத்தார். கமராவை அவரிடமே கொடுத்துவிட்டு தானும் வரிசையாக நின்று ஒரு பிடி மண்ணை அள்ளி குழியில் போட்டுவிட்டு அடுத்த பிடி மண்ணைக் கையில் எடுத்து தலையை நிமிர்த்தி 'போஸ்' கொடுக்க கமரா 'கிளிக்' செய்தது.*

*வந்து கமராவை திருப்பி வேண்டியவர் "தம்பி போட்டோ நல்லா வரும்தானே?" என்றார்.*

*— நாடோடி*

## லண்டன்

# ரவிச்சந்திரன் வழக்கின் தீர்ப்பு: தஞ்சமனு நிராகரிக்கப்பட்டோருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு



இங்கிலாந்தின் அதி உச்ச நீதி மன்றமாகிய பிரபுக்கள் சபையினரால் (House of Lords) *12.02.96* அன்று ரவிச்சந்திரன், சந்திரலிங்கம் ஆகிய இரு இலங்கைத் தமிழ் இளைஞர்களினதும் அரசியல் தஞ்ச மனு நிராகரிக்கப்பட்டு உடனடியாக அவர்களை சிறீலங்காவுக்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இறுதி நேரத்தில் அந்த இளைஞர்களது சட்டத்தரணிகள் - அவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பக்கூடாதெனக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். இந்த வழக்கு கடந்த *19.04.96* அன்று இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இத் தீர்ப்பு இங்கிலாந்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள பல்லாயிரக்கணக்கான தமிழ் அகதிகளின் வழக்குகளுக்கு ஒரு முன்னோடியாகவும் ஒரு பரீட்சார்த்த வழக்காகவும் (TEST CASE) கருதப்பட்டு இதன் தீர்ப்பு மிக ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்றது.

இத் தமிழ் இளைஞர்கள் *1993*-ம் ஆண்டு ஜூலை மாதம் இங்கிலாந்துக்கு வந்து அரசியல் தஞ்சம் கோரியிருந்ததோடு அவர்கள் இந்நாட்டுக்கு வந்தநாள் தொடக்கமே பல தடுப்பு முகாம்களில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருப்பது முக்கியமாகக் குறிப்பிடப்படப்பட வேண்டியதொன்றாகும். இவர்களுடைய வழக்குகள் மேன்முறையீட்டு நீதி மன்றத்தாலும் பின்னர் பிரபுக்கள் சபையாலும் நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும், அண்மைக்காலங்களில் சிறீலங்காவில் குறிப்பாக கொழும்பில், தமிழ் இளைஞர்கட்கு எதிராக சிறீலங்கா அரசால் எடுக்கப்படும் கண்மூடித்தனமான நடவடிக்கைகளினால் சந்திரலிங்கமும் ரவிச்சந்திரனும் பாதிக்கப்படுவார்கள் என்றும், அண்மைக்காலங்களில் சிறீலங்காவின் பாதுகாப்பு நிலையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்ற அடிப்படையிலும் இவர்கள் சார்பில் புதிய அரசியல் தஞ்ச மனுவொன்றை (FRESH POLITICAL ASYLAM APPLICATION)ப *14.02.96* அன்று உள்நாட்டுத் திணைக்களத்திடம் இவர்களது சட்டத்தரணிகள் சமர்ப்பித்திருந்தனர். இவ் அரசியல் தஞ்ச விண்ணப்பத்தை உடனடியாக நிராகரித்த உள்நாட்டுத் திணைக்களம் தமது முடிவுக்கெதிராக மேன்முறையீடு செய்ய முடியாது எனக் குறிப்பிட்டதோடு இவ்விரு தமிழ் இளைஞர்களையும் அன்றே 'ஏயர் லங்கா' விமானம் மூலம் சிறீலங்காவுக்கு அனுப்ப ஏற்பாடு செய்திருந்தது. இவர்களது சட்டத்தரணிகள் உடனடியாக அவசர தடையாணை விண்ணப்ப மொன்றினை (STAY ORDER) உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததையடுத்து இவர்களைத் திருப்பியனுப்பும் முயற்சி கைவிடப்பட்டது. அதன்பின் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்த உயர் நீதிமன்றம் (HIGH COURT) இவர்களது புதிய அரசியல் தஞ்ச விண்ணப்பத்தில் ஆராயப்பட வேண்டிய பல விடயங்கள் இருப்பதாகவும் இவ் விடயங்கள் முற்று முழுதாக நீதிமன்றத்தால் பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்றும், இக்காரணத்திற்காக ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முழு வழக்கினையும் இம் மன்று விசாரிக்க வேண்டுமென்றும் தீர்ப்பு வழங்கியிருந்தது.

இக்கட்டத்தில் தற்போது சிறீலங்காவில் குறிப்பாக கொழும்பில் இவ் இளைஞர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற விடயத்தினை நிரூபிப்பதற்கு எவ்வகையான ஆவணங்களை இவ் இளைஞர்களின் சட்டத்தரணிகள் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தனரென்பதை நாம் குறிப்பாக அறிய விரும்பியிருந்தோம்.

இவ்வடிப்படையில் இங்லாந்திலிருந்து வெளியாகும் பிரித்தானிய அகதிகள் சங்கத்தின் (British Refugee Council) மாதாந்த இதழான 'சிறீலங்கா மொனிற்றர்', கொழும்பிலிருந்து செயற்படும் சட்டத்தரணி அ. விநாயகமூர்த்தி அவர்களிடம் இருந்து பெறப்பட்ட சுமார் *100* பக்கங்கள் அடங்கிய சத்தியக் கடதாசிகளுடன் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரசுரங்களும் நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்க வேண்டியிருந்தன. விநாயகமூர்த்தி அவர்கள் தனது சத்தியக் கடதாசியில் கொழும்பில் தான் ஆஜராகியுள்ள தமிழ் இளைஞர்களின் வழக்கு விபரங்களையும், கொழும்பு சிறைகளில் காணாமல் போன தமிழ் இளைஞர்களின் விபரங்களையும் மிகவும் தெளிவாக புள்ளிவிபர அடிப்படையில் குறிப்பிட்டிருந்தார். உயர் நீதிமன்றத்தில் உள்நாட்டுத் திணைக்களத்தின் சார்பில் ஆஜராகிய சட்ட வல்லுநர், சந்திரலிங்கம், ரவிச்சந்திரன் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் ஒருபக்க சார்பானவையெனவும் அவை கொழும்பில் நடக்

கும் சம்பவங்களை திரிபுபடுத்திக் காட்டுபவன எனவும், காலதாமத மேற்படுத்தும் நோக்குடன் மட்டுமே இவ் விண்ணப்பங்கள் மேற்கொள் ளப்பட்டுள்ளனவெனவும் வாதிட் டார்.

அது மட்டுமல்லாமல் அண்மைக் காலமாக மேன்முறையீட்டு நீதிமன் றத்தால் தீர்ப்பளிக்கப்பட்ட நைஜீரிய நாட்டைச் சேர்ந்த அரசியல்வாதியொ ருவரின் வழக்கினடிப்படையில், ஒரு அகதி ஒரு அரசியல் தஞ்ச விண் ணப்பத்தை மாத்திரமே மேற்கொள் ளலாமெனவும் தனது சொந்த நாட் டில் அரசியல், பாதுகாப்பு நிலைமை யில் மாற்றமேற்பட்டுள்ளது என்ற அடிப்படையில் புதிய அரசியல் தஞ்ச விண்ணப்பமொன்றை மேற்கொள்ள முடியாது எனவும் வாதிட்டார். தமிழ் இளைஞர்களின் சார்பில் ஆஜரான சட்ட வல்லுநர் இயன் லூயிஸ் (IAN LEWS) பல வாதங்களை முன்வைத் ததோடு தற்போது கொழும்பில் தமிழ் இளைஞர்கள் பாதுகாப்பாக இருக்க முடியாது எனவும் குறிப்பாக சந்தி ரலிங்கமும், ரவிச்சந்திரனும் யாழ்ப் பாணத்திலிருக்கும் போது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கீழ்மட்ட உதவிகள் செய்து வந்துள்ளதால் இவ் இளைஞர்கள் நிட்சயமாக கொழும் பில் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைக் குள்ளாவார்கள் எனவும் வாதிட்டார். அண்மையில் கொழும்பில் நடைபெற்ற பல சம்பவங்களை மேற்கோள் காட் டியும் பிரதம நடுவாளர் திரு. டேவிட் பேளினால் தீர்க்கப்பட்ட வழக்கொன் றினையும் ஆதாரம் காட்டி கொழும் பில் தமிழ் இளைஞர்கள் பாதுகாப் பாக வாழமுடியாது எனவும் 1951-ம் ஆண்டு ஜெனீவா உடன்படிக்கையின் கீழ் இவர்கள் பாதிக்கப்பட்டவர்கள் என கருதப்படவேண்டும் எனவும் வாதிட்டார்.

**இவ் வழக்கின் முடிவின் அடிப்படையில் அரசியல் தஞ்சமனு நிராகரிக் கப்பட்ட தமிழ் அகதிகள், கொழும்பில் ஏற்பட்டுள்ள மோசமடைந்து வரும் அரசியல், பாதுகாப்பு நிலைமையின் அடிப்படையில் புதிய அரசியல் தஞ்ச மனுவினை மேற்கொள்ளலாமென தெளிவாகியுள்ளது.**

பல்வேறு விடயங்களையும் கவ னத்திற் கொண்ட உயர் நீதிபதி திரு டைசன் அவர்கள் ரவிச்சந்திரன், சந்தி ரலிங்கம் ஆகியோரை சிறீலங்காவுக்கு அனுப்புவதற்கு உள்நாட்டுத் திணைக் களத்தால் எடுக்கப்பட்ட முடிவு சட்டவிரோதமானதெனவும் அவர்க ளது புதிய அரசியல் தஞ்ச மனு (Fresh poolitical asylum application) கொழும்பில் அரசியல் பாதுகாப்பு நிலைமைகளில் மாற்ற மேற்பட்டுள் ளது; அதாவது பாதுகாப்பு நிலைமை மோசமடைந்துள்ளதென்ற அடிப்படை யில் உள்நாட்டுத் திணைக்களத்தால் மீளப் பரீசீலிக்கப்படவேண்டுமெனத் தீர்ப்பளித்தார். இம் முடிவுக்கெதிராக மேன் முறையீடு செய்வதா இல்லை யாவென உள்நாட்டுத் திணைக்களம் இன்னும் முடிவு செய்யவில்லை எனத் தெரியவருகின்றது.

இவ் வழக்கின் முடிவினடிப்படை யில் அரசியல் தஞ்சமனு நிராகரிக்கப் பட்ட தமிழ் அகதிகள், கொழும்பில் ஏற்பட்டுள்ள மோசமடைந்து வரும் அரசியல், பாதுகாப்பு நிலைமையின டிப்படையில் புதிய அரசியல் தஞ்ச மனுவினை மேற்கொள்ளலாமென தெளிவாகியுள்ளது. இதன் விளை வாக ஏற்கனவே தமிழ் அகதிகளின் அரசியல் தஞ்ச விண்ணப்பங்களில் ஏற்பட்டு வரும் தாமதம் மேலும் விரிவடைய வழிவகை செய்துள்ள தோடு உள்நாட்டுத் திணைக்களத்தின் போக்கில் ஒரு சில மாற்றங்களையும் கொண்டு வரலாம் எனவும் எதிர் பார்க்கப்படுகின்றது.

இவ் வழக்கில் ரவிச்சந்திரன், சந்தி ரலிங்கம் ஆகியோர் சார்பில் ஹரோ வனைச் சேர்ந்த எம்.கே.சிறீ அன்கோ சட்டத்தரணிகள் நிறுவனத்தின் சட்டத் தரணி கணபதிப்பிள்ளை சிறீதரன் அவர்களின் அனுசரணையுடன் சட்ட வல்லுனர் இயன் லூயிஸ் ஆஜராகி யிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**– தேவராஜ்**

## தெருக்கூத்து (1)

புகலிட நாடொன்றில் கலைஞர்களுக்கான ஒரு கூட்டம் அண்மையில் நடந்தது. 10 பேருக்குக் குறைவானவர்கள் வந்திருந்தனர். கலை இலக்கியங்கள் சினிமாக்கள் மக்களுக்கு பயன்பட வேண்டுவதற்காய் மேசையிலிருந்த விஸ்கி போத்தல்கள் காலி செய்யப்பட்டு அடிக்கடி கிளாஸ்கள் உரசி 'சியேர்ஸ்' சொல்லிக் கொண்டிருந்தனர்.

இறுதியில் எஞ்சியவர் 5 பேர் மட்டுமே. தலைவருக்கு அமைதியாக இருக்க முடியவில்லை. எப்போதும் யாருக்காவது பட்டம் கொடுத்து பொன்னாடை போர்த்திய கை துருதுருத்தது. என்ன செய்வது? ஏதாவது செய்தே ஆகவேண்டுமே. 5 பேரில் குறிப்பிட்ட ஒருவருக்கு அந்த மகாசபையில் வைத்தே 'கலை அரசு' பட்டத்தை வழங்கி அவரின் கலைச் சேவை பற்றி ஒரு குட்டிப் பிரசங்கமும் நடாத்தினார் அம் மாமணி.

கலைக்கும் தனக்கும் எந்த சம்பந்தமுமில்லாத அவர் உள்ளம் பூரித்து புளகாங்கிதமடைந்து போனார். அடக்க ஒடுக்கமாக எழுந்து கை கட்டி அப்பட்டத்தை ஏற்றுக் கொண்டதுடன் அப்பட்டமளிப்புக்கு நன்றி தெரிவித்தும் ஒரு சிறு சொற்பொழிவாற்றினார். மற்றைய நால்வரும் கை தட்டுவதற்குப் பதிலாக விஸ்கிப் போத்தலைத் தட்டி "ஆகா! அற்புதம்!" என்றனர். வாழ்க கலைச் சேவை! உயர உயர பறக்கட்டும் பட்டங்கள்!!! பலே! பலே!!..

— நாடோடி



# எயிட்ஸ்: 2000 ஆண்டில் ஆசியாவை அழிக்கக் காத்திருக்கும் உயிர்க்கொல்லி

**புத்தம் சரணம் கச்சாமி**
**தம்மம் சரணம் கச்சாமி**
**சங்கம் சரணம் கச்சாமி**

என்கின்ற பிரித் குழுவொலியாக அந்த விகாரையிலிருந்து ஒலித்துக் கொண்டிருந்தது. ஊருக்கு ஒதுக்குப் புறமாக உள்ள அந்த விகாரையின் முன்பாக இரு சாலைகள் பிரிந்து செல்கின்றன.

அதிலொன்று மயானத்திற்கு செல்லும் வழி. இரு பக்கமும் பச்சைப் பசேலென பூமரங்கள் பூத்துக் குலுங்க அதை ஊடறுத்துச் செல்லும் அந்த வீதியால் தளர்ந்த நடையுடன் இரு இளம் பௌத்த துறவிகள் மயானத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். அந்தத் துறைவியரின் மரணத்தை விரைவாக எண்ணும் நாட்களின் அபாயகரமான சிவப்புக் கால கட்டத்தினை அவர்கள் உடுத்தியிருந்த சிவந்த அங்கிகளே சுட்டிக்காட்டின. ஆம் இவர்கள் தாய்லாந்து நாட்டில் மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கும் இலட்சக்கணக்கான எயிட்ஸ் நோயாளிகளில் இருவர்.


வாழ்வினை வெறுத்து துறவறம் மேற்கொண்ட துறவியருக்கு எயிட்ஸ் நோயா? ஆச்சரியமாகவும் நம்பமுடியாமலும் இருக்கிறதல்லவா?

தாய்லாந்துக் கலாச்சாரத்துக்குரிய அலங்கார வளைவினை வாயிலாகக் கொண்ட அந்த மயானத்துள்ளே இந்த இரு துறவியரும் நுழைகின்றார்கள். அங்கு எரிபீடத்திலே இரு உடல்கள் வெந்து தணிந்து சாம்பலாகிப் போகும் தறுவாயிலிருந்தன. எயிட்ஸ் எனும் கொடிய நோய்க்கு முதல் நாள் தம்மைக் காவு கொடுத்து, மறுநாள் சாம்பராகிப் போன அந்த உடலுக்குரியவர்கள் இத்துறவியரின் துறவற சாலை நண்பர்கள்.

நீடித்த மௌனத்தை கலைத்து ஒரு துறவி தளதளக்கும் குரலில் பேச ஆரம்பித்தார். "இன்று இந்த இடத்தில் எம் நண்பர்கள் எரிகின்றார்கள். நாளை சிலவேளை நாமாகவும் இருக்கலாம். நிச்சயமாக நாம் அதை ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும்." சொல்லி முடித்த அவர்கள் கண்களில் கண்ணீர் தளும்பியது. இத் துறவியின் கூற்று பொய்க்குமா? இல்லவே இல்லை.

இரண்டாயிரம் ஆண்டளவில் பன்னிரண்டு மில்லியன் எயிட்ஸ் நோயாளிகளின் மரணகுழியாக ஆசியாக் கண்டம் மாறப்போகின்றது. கடந்த வருடம் மட்டும் ஐம்பதினாயிரம் தாய்லாந்தவர்கள் எயிட்ஸ் நோயினால் செத்து மடிந்துள்ளனர். இவ்வாறு இறந்தவர்களின் அஸ்தியைக் கூட உறவினர்கள் பொறுப்பேற்க அஞ்சுகின்றார்கள். அஸ்திக் கலசத்தினை தொட்டால் எங்கே எயிட்ஸ் தம்மையும் பீடித்துவிடுமோ என்ற அச்சமே அதற்குக் காரணம்.

உலக சனத்தொகையில் பெரிய இடத்தினை பிடிக்கும் ஆசியாக் கண்டத்தில் எயிட்சின் அச்சுறுத்தலும் மிகப் பூதாகரமாகவே உள்ளது. எயிட்ஸ் வைரசு தொற்று ஆசியாவிற்கு 80-ம் ஆண்டு முற்பகுதியிலேயே பெருக ஆரம்பித்தது. ஆனால் அமெரிக்காவிலும், ஆபிரிக்கா கண்டத்திலும் இதற்குப் பத்து வருடங்களுக்கு முன்பாகவே இருந்தது.



எயிட்ஸ் வைரசு மெதுவாக பதுங்கியிருந்து மனிதனைக் காவுகொள்ள வல்லது. இன்றைய எயிட்ஸ் நோயாளிகள் யாவரும் ஒரு தசாப்தத்திற்கு முன்பாகவே தொற்றுக்கு ஆளான போதிலும் இந்த வைரசு மெதுவாக தன்னை வெளிக்காட்டும் தன்மை வாய்ந்ததால் பத்து வருடங்களுக்கு பிற்பாடு கூட கடும்நோய் தாக்கமுறலாம்.

முழு உலகிற்கும் எயிட்ஸ் நோய் பெரும் தலையிடியைக் கொடுத்தாலும் ஆசியாக் கண்டம் மிகப் பாரதூரமான நிலைமையில் உள்ளது. நலிந்த பொருளாதாரக் கட்டமைப்பினை கொண்ட இந்நாடுகளில் எயிட்ஸ் நோய் குறித்த முறையான வேலைத்திட்டம் வளரும் வேகத்தினை விட எயிட்ஸ் வேகமாக தன்னை வளர்ப்பது தரிசனமாகின்றது. ஆபிரிக்காக் கண்டத்தில் உகண்டா, சிம்பாபே, பொற்சுவானா போன்ற நாடுகளில் இளம்பராயத்தினரில் நாலில் ஒரு பங்கினருக்கு எயிட்ஸ் நோய் உண்டு. ஆனால் உலக சனத்தொகையில் மூன்றில் இரண்டு வீதத்தை உள்ளடக்கியிருக்கும் ஆசியாக் கண்டத்தில் மட்டும் 2015-ம் ஆண்டளவில் பத்து மில்லியன் (1 கோடி) மக்கள் இந் நோயால் செத்து மடிவார்கள். தற்போது எயிட்ஸ் பரவும் வீத்ததினைப் பார்த்தால், ஒவ்வொரு வருடமும் மற்றைய கண்டங்களை விட ஆசியாக்கண்டமே முன்னணியில் இருக்கின்றது. குறிப்பாக தாய்லாந்து,



கம்போடியா, பர்மா, வியட்னாம், போன்ற நாடுகள் எயிட்சினால் பெரும் பேரழிவினைச் சந்திக்கப் போகின்றன.

கம்போடியாவில் மட்டும் கர்ப்பிணித் தாய்மாரில் நான்கு வீதத்தினருக்கும், விபச்சாரிகளில் நாற்பது வீதத்தினருக்கும் எயிட்ஸ் தொற்று உண்டு. சீனாவில் ஒரு இலட்சம் பேருக்கு இத் தொற்று உள்ளதாகக் கருதப்படுகின்றது.

இந்தியாவில் 1.75 மில்லியன் மக்கள் ஏற்கனவே எயிட்ஸ் நோய் தொற்றுக்களாகி இருக்கின்றார்கள். மேலும் நான்கு மில்லியன் மக்கள் 90-களின் முடிவில் எயிட்ஸ் நோய் தொற்றுகளாகியும் விடுவார்கள்.

"பம்பாய்" பகுதியிலும் மற்றும் பிரதான நெடுஞ்சாலை ஓரங்களில் நடைபெறும் விபச்சாரத் தொழிலாலும் இந் நோய் விரைவாகப் பரவிக் கொண்டேயிருக்கின்றது.

பிலிப்பைன்ஸ் நாட்டிலே நிலைமை மிகவும் வித்தியாசமானது. ஆணுறைகளைப் பாவிப்பது போன்ற எயிட்ஸ்சிற்கு எதிரான தடுப்பு முறையினை அங்கு பெரும்பாலானோர் பின்பற்றுவதை ரோமன் கத்தோலிக்க மதம் எதிர்ப்பதால் எயிட்ஸ் பேரழிவு ஒன்றினை பிலிப்பைன்ஸ் மக்கள் ஏற்றுக்

## தெருக்கூத்து (2)

*ஈழத்தில் ஆயுதப் போராட்டத்தினூடும் இடப்பெயர்வினூடும் சாதி அமைப்பு முற்றாக தகர்ந்து போகாவிட்டாலும் அதன் மூர்க்கம் என்பது காணாமற் போய்விட்டது. ஆனால் புகலிட நாடுகளில்...*

எனது நண்பர் ஒருவர் பாரிஸ் நிலக்கீழ் விரைவுப் புகையிரதத்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது அருகிலிருந்த இன்னொரு தமிழ்ப்பெண் அவரைப் பார்த்து, "தம்பி நீர் யாழ்ப்பாணமோ? எந்த இடம்? என்ன வயது? என்ன செய்கிறீர்?" என்று கேள்விக்கணைகளைத் தொடுத்தார். முன் பின் தெரியாதவர் என்று எரிச்சலாக இருந்தாலும் நிதானமாக பதில் சொன்னார் என் நண்பர்.....

"வயது 35" — "கலியாணம் செய்திட்டீரே?" — "இல்லை."

"என்ரை தம்பிக்கும் 34 வயசு. கலியாணம் செய்து வைக்கலாமெண்டால் பொருத்தமான பொம்பிளை கிடைக்கேல்லை உமக்கு ஆரையும் தெரிஞ்சால் சொல்லுமன்?"

"இல்லை தெரியாது நான் புரோக்கர் வேலை பார்க்கிறதில்லை".

"நீர் யோசிக்கின்றீர் போல..நாங்கள் ஊரிலேயே வசதியான ஆக்கள். நல்ல உயர் சாதி. எந்த எளிய சாதி வீட்டிலும் செம்பு தண்ணி தொடாத ஆக்கள்..அப்படி ஒரு பொம்பிளை இருந்தால் சொல்லுமன்.."

"நீங்கள் இப்ப எங்கை போட்டு வாறியள்?"

"..காலைமையிலை ஒரு 3 மணித்தியால பீரோ கிளீனிங் செய்யிறனான். அதுதான் போட்டு வாறன்."

அவர் பெருமையாகச் சொல்ல இவர் எதுவும் பேசாமல் சிரித்து விட்டு இறங்கி விட்டாராம்.

"ஏன் சிரித்தனீர்" என்று நான் கேட்டேன்?

"சாதிய அமைப்பு தொழிலை மையப்படுத்தியே பிரிக்கப்பட்டது எண்ட வரலாறு அந்த நேரம் ஞாபகம் வந்ததுக்கு நான் என்ன செய்ய?" என்றார்.

— நாடோடி

கொள்ள வேண்டிய நிலைமை.

ஆசிய நாடுகளில் குடும்ப ரீதியாக எயிட்ஸ் தொற்று நோய்க்கு காரணம் விசுவாசமற்ற கணவனின் நடவடிக்கைகளால் தனது மனைவிக்கும் கருவில் உள்ள ஒருபாவமும் அறியாத சிசுவிற்கும் எயிட்ஸ் கடத்தப்படுவதேயாகும்.

தாய்லாந்தில் விடலைப் பருவத்துப் பையன்கள். விபச்சாரிகளை நேசித்து "விளையாட்டு பையன்களாக" திரிந்து பின்னர் பௌத்த பிக்குகளாக தம்மை உருமாற்றியவர்களே தற்போது இந் நோயினால் பீடிக்கப்பட்டு மடிந்து வருகின்றார்கள். ஒரு பிக்கு கூறுகின்றார், "இன்று நான் புத்தபகவானுக்கு பிரித் ஓதினாலும் ஆறு வருடங்களுக்கு முன்னர் விபச்சாரியிடம் போகாமல் என்னால் ஒருநாளுமே இருக்க முடிந்ததில்லை. இன்று அதன் பலனை அனுபவிக்கின்றேன். எனது துறவறசாலை கூட என்னை வெளியேற்றிவிட்டது. தற்போது நான் மரணத்தை எதிர்பார்த்திருக்கும் ஒரு எயிட்ஸ் மனிதன்" என்கின்றார். அப்படியானால் இந்தப் பிரச்சனைக்கு முடிவுதான் என்ன? துரதிஸ்டவசமாக ஒன்றும் இல்லை என்றே தற்போதைக்கு கூறமுடியும். ஆசிய நாடுகளில் வர்த்தகரீதியான பாலியல் வியாபாரக் கதவுகள் மேற்குலக நாடுகளுக்கும், உள்ளூர் மக்களுக்கும் திறந்திருக்கும் வரை எயிட்ஸ் பிரச்சனைக்கு முடிவேதும் காணமுடியாது. பாலியல் வியாபாரத்திலே தாய்லாந்து முன்னணியில் வகிப்பதும் அதனால் உலகின் எயிட்ஸ் பரம்பலுக்கு உதவி செய்வதும் உலகறிந்த செய்தி.

காலம் கடந்த நடவடிக்கைகள் எதுவும், முழுக் கண்டத்தில் ஒலிக்கப் போகும் ஒப்பாரிக் குரல்களுக்கு தடை போட்டுவிட முடியாது. இந்த நாடுகளில் எயிட்ஸ் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் தொண்டர் நிறுவனங்களில் ஐக்கிய நாடுகள் சபை முக்கிய இடத்தை வகிக்கின்றது. தடுப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருக்கும் இயக்குனர் கூறுகிறார், "உலகில் ஆசியாவே எயிட்ஸ் நோய் மிக விரைவாக பரவும் கண்டம். ஆனால் ஆசிய மக்கள் இந்த உண்மையை இதுவரை உணர்ந்து கொள்ளவே இல்லை." என்று. ஆசியாவே உன் பதில்தான் என்ன? விழித்தெழுவாயா? விழுந்து மடிவாயா?

— பிரேம்

# ஒரு தாயாக இருப்பது குறித்து

**செலான் - விியென் (வியத்நாம்)**

அது அவ்வளவு எளிதானதல்ல
வியத்நாமில் ஒரு தாயாக இருப்பது என்பது.
உலகின் பிறநாடுகளில் தாய்மார்கள்
பூக்களை நேசிக்குமாறு
தம் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுப்பர்
இங்கோ குழந்தைகள் மேலும் அறிய வேண்டியது
குண்டு வீச்சுக்குப் பிறகு செய்ய வேண்டியவை பற்றி.

உலகின் பிறநாடுகளில்
இசையின் நாதத்தையும் பறவைகளின் பாடல்களையும்
தெரிந்து கொள்ளப் பிள்ளைகளுக்குத்
தாய்மார்கள் கற்றுக்கொடுப்பர்
இங்கோ,
பி – 52 விமானத்தின் உறுமல் எது
எப் – 105 விமானத்தின் உறுமல் எது என்பதைக்
குழந்தைகள்
அறிய வேண்டும்.

புனிதக் கன்னி மேரியே
1969ம் ஆண்டுகள் உனது பாலகனுக்கு பாலூட்டி
வளர்த்தவளே
உனக்குத் தெரியுமா
எங்கள் நாட்டில்
மாதக்கணக்கில்
தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளைப் பிரிந்து
வெகு தூரத்தில் உறங்க வேண்டுமென்பதை.

மனிதர்களாக வாழ்வது எப்படி என்பதைத்
தங்கள் குழந்தைகளுக்குத் தாய்மார்கள்
கற்றுக் கொடுக்கவேண்டிய காலங்கள் உண்டு
ஆனால், அது மட்டுமே போதாத காலங்களும் உண்டு
வீரர்களாக வாழ்வது எப்படி என்பதைக்
குழந்தைகள் கற்றுக் கொள்ள வேண்டிய
காலங்களும் உண்டு.

**தமிழில்: எஸ். வி. ராஜதுரை, வ. கீதா**
**நன்றி: 'மூன்றாம் உலகக் கவிதைகள்'**

## 100 வெண்சுருட்டு = மரணம்



"புகைத்தல் உடல் நலத்திற்கு கேடாகலாம்" என்ற வாசகம் வெண்சுருட்டுப் பெட்டிக ளில் அச்சாகியிருந்தாலும் அதை கவனத்திற் கெடுப்போர் மிகக் குறைவு. சீனா நாட்டின் தியான்ஜின் பகுதியிலுள்ள வாலிபரொரு வர் பந்தயப்போட்டி ஒன்றிற்காக 100 வெண்சுருட்டுகள் புகைக்க முயன்றபோது உடலில் நஞ்சேறி பார்வையாளர் மத்தியிலேயே பரிதாபமாக மரணமானார். பத்தொன்பதே வயதான இவர், பியோனி ரக வெண்சுருட்டுக்களில் 5-வது பெட்டியை முடிக்கும் போது (100-வது) உடம்பெல்லாம் நீல நிறமாகி அவ்விடத்திலேயே விழுந்து இறந்துவிட்டார். விளையாட்டு வினையாகியது!

## பியரேதான் கடவுளடா!



ஐம்பத்தாறு வயதான கிளிசி கொறி ஒரு கடற்பயண சாதனை யாளர். கொஞ்ச நாட்களுக்கு முன்னர், தனியாக பசுபிக் பெருங் கடலை கடந்து சாதனை புரியும் நோக்கோடு ஈக்குவேட்டர் நாட்டுக் கரையிலிருந்து புறப்பட்டுள்ளார். சூரிய சக்தியில் இயங் கும் சிறிய அலுமேனியப் படகொன்றில் பயணஞ்செய்யும் இவர் தனது பதினாறாயிரம் கிலோமீட்டர் தூரத்தைக் கடந்து, வருகின்ற யூலை மாதம் 20ம் திகதி ஜப்பானின் டோக்கியோ நகரை அடைய திட்டமிட்டுள்ளார். ஆனால், விசயம் என்ன தெரியுமா? தனது பிரயாணத்தின் போது உணவில்லாமல் இருந்தாலும் இருப்பாராம்; 'பியர்' இல்லாமல் இருக்கமாட்டாராம். இதற்காக ஒரே முறை யில் இரண்டே இரண்டு 'பியர்' பேணிகளை குளிரூட்டும் சிறிய குளிர்சாதனப் பெட்டியையும் எடுத்துச்சென்றுள் ளார். பியரைக் குடித்துவிட்டு பிரயாணப் பாதையை மாறாதிருந்தால் சந்தோஷமே!

## கோப்பிக்கடை 'எய்ட்ஸ்' சூட்சுமம்



எயிட்ஸ், எயிட்ஸ், எயிட்ஸ் உல கில் எங்கும் எயிட்ஸ் பீதி. வியட் நாமிலோ இது மிகவும் அதிகம். இதிலிருந்து மக்களைக் காக்க அதிகாரிகளோ படாதபாடு படு கிறார்கள். ``HO CHI MIN" நகரி லுள்ள கோப்பிக்கடையோ ஒரு படி மேலே போய்விட்டது. இதன் பெயரே ``CONDOM CAFE" (ஆணுறை கோப்பி). இக்கடையில் எயிட்ஸ் பற்றிய சுகாதார ஆலோசனைகள் வழங்க விசேட தொலை பேசி இணைப்புக்களும் உண்டு. இக்கடைக்கு சென்று ஒரு கோப்பிக்குச் சொல்லிவிட்டு பரிசாரக ரைப் பார்த்து ஒரு புன்முறுவலை சிந்தினால் அவர் சீனிக்கட்டிகளுடன் ஆணுறைகளையும் தருவார். கோப்பிக் கடையின் சூட்சுமத்தால் இப்போ இங்கே ஜே. ஜே. என்று நல்ல கூட்டமாம். கோப்பியிலே பலவகை உண்டு. அதில் இக் CONDOM கோப்பியும் ஒருவகை.

## மூஸ்டர் நீயுமா?



உலகின் முதற்தர டெனிஸ் ஆட்டக் காரருள், ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்த தோமஸ் மூஸ்டரும் ஒருவர். இவர் பிரித்தானிய முடியாட்சி குடும்பத்து சாரா பேர்குஷன் (Duchess of york) உடன் "சிறப்பான உறவைப்" பேணுகிறாராம். இவ் வருட விம்பிள்டன் டெனிஸ் போட் டியின்போது இவரது வீட்டில் தானாம் தங்கியிருப்பாராம். இந்த விடயங்களை எல்லாம் அழுதபடியே கூறிய மூஸ்டரின் காதலி மாரிஇல்லா இந்த விபரீத உறவினால் மூஸ்டர் தன்னை விட்டு பிரிந்துவிட்டதையும் குறிப்பிட்டார். You too Muster?

## மெலிவான மெலிவல்லவோ




நீங்கள் மிகப் பருமனானவரா? அப்ப டியானால் தொடர்ந்து படியுங்கள். உடற் பருமனைக் குறைக்க வேண்டுமானால் சத்திரசிகிச்சைக்கு பாவிக்கப்படும் பிளாஸ்ரர்களை உங்கள் கைவிரல்களில் சுற்றிக்கொள்ளுங்கள். மெலிவதற்கான வழி தயார்!

இம்முறையானது ஜப்பானில் மிக விசித்திரமான வேகத்துடன் பரவிவருகிறது. இதற்காகத் 'திடீர்' பிளாஸ்ரர் தயாரிப்பாளர்களும் தோன்றியுள்ள னர். கைவிரல்களிலே சில குறிப்பிட்ட இடங்களில் இதை சுற்றுவதால் உடற் பருமன் குறைந்து விடுமென பலர் நம்புகிறார்களாம். இது எப்படி சாத்தியமென எம்மிடம் கேட்காதீர்கள். எல்லாம் ஜப்பானியருக்கே வெளிச்சம்.

## மிக்கி பிடித்த கேடிகள்



உலகப் புகழ்பெற்ற மிக்கி மௌஸ் (Mickey Mouse) என்னும் கருத்துப் படப் பாத்திரத்தை அறியாதவர்கள் மிகச் சிலரே! மழலைகளை மகிழ்விக் கும் இந்தப் படைப்பு அண்மையில் பாரிசின் "டிஸ்னி உலகத்தில்" பெரிய போதைவஸ்து விற்பனைக் கேடிகளை மடக்கிப் பிடித்துள்ளது. டிஸ்னி உலகத்தின் உள்ளேயே போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட கேடிகளை பிடிக்க முடியாது பொலிசார் பெரும் தலையிடிக்கு உள்ளானார்கள். பலமுறை இவர் களைப் பிடிக்க முயன்றபோதும் தோல்வியிலேயே முடிந் தது. அதனால் பொலிஸ் உத்தியோகத்தர்களே மிக்கி சுண்டெலியின் வேடத்தைப் போட்டு அங்கும் இங்கும் உலாவி தந்திரமாக பத்துக் கேடிகளை மடக்கிப் பிடித் ததுமல்லாது 500 கிலோ எடையான மர்ஜுவானா வையும் கைப்பற்றினார்கள். அது சரி பாராட்டுவது யாரை? மிக்கியையா, வேடம்போட்ட பொலிஸ்கார ரையா?


உங்கள் தொலைபேசிக் கட்டணத்தில் 70 % வரை சேமியுங்கள்!
GNANAM CENTER
7, Rue Labat, 75018 Paris.
Metro: Marcadet Poissonniers
Tel: 42 57 8183 / 42 57 81 71


# COGEST

**SECTION A** - கணக்கியல் ரீதியான செயற்பாடுகள்

- ★ வியாபார நிறுவனங்களின் உருவாக்கம்
- ★ வியாபார நிறுவனங்களின் வருடாந்த முகாமைச் செயற்பாடுகள்
- ★ நிறுவன வளர்ச்சிக்கான ஆய்வுகள்

**SECTION B** - மொழிபெயர்ப்புச் சேவை

- ★ துரித மொழிபெயர்ப்புச் சேவை
  (பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், திருமண, தொழில் பத்திரங்கள்)
- ★ ஏனைய மொழிபெயர்ப்பு சேவை
  (அரச அலுவலக ஆவணங்கள், ஏனைய பத்திரங்கள்)



**SECTION C** - ஆலோசனைகள்

- ★ கணக்கியல் தொடர்பான ஆலோசனைகள்
- ★ தொழில் ரீதியான பிரச்சினைகளுக்கான ஆலோசனை
- ★ வர்த்தக முகாமை ரீதியான ஆலோசனை

**SECTION D** - கணணி மூல சொல் தொகுப்பு

- ★ வர்த்தக நிர்வாக கடிதங்கள்
- ★ அரசியல் தஞ்சம் - நீதி நிர்வாகக் கடிதங்கள்
- ★ வேலைவாய்ப்பு கடிதங்கள்

**SECTION E** - கல்விச் சேவை

- ★ கணக்கியல் ★ முகாமை
- ★ கணணியியல் ★ பிரெஞ்சு

**SECTION E** - கணணியியல் சேவை

- ★ வியாபார நிறுவனத்திற்கு ஏற்ற கணணி அணைப்புக்கள்
- ★ FAX மற்றும் NETWORK அமைத்தல்
- ★ ஏனைய கணணியியற் துறையின் சேவைகள்

**அலுவலக நேரம்: திங்கள் ⇨ சனி**

காலை 9.00 மணி ⇨ பிற்பகல் 1.00 மணி

பிற்பகல் 2.00 மணி ⇨ மாலை 8.00 மணி

**இடம்:**

17, Rue Perdonnet, 75010 Paris.

M°: La Chapelle

Téléphone: (1) 42 09 13 99

Télécopie: (1) 42 09 14 05

E-Mail: Cogest+@worldnet.net

Responsable: S. NANTHACUMAR